Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 25 புதன்கிழமை (09.07.2014) பக்கங்கள் 20 ஓசை – 281

## ஆஸி. நோக்கிச் சென்ற 153பேர் அந்நாட்டு கடற்படைக்கலத்தில்

இந்தியாவில் இருந்து படகு மூலம் அவுஸ்ரேலியா சென்ற 153 பேர் பற்றிய பல்வேறு கேள்விகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் பதில் சொல்லாமல் தட்டிக்கழித்து வந்த நிலையில், நீதிமன்ற வழக்கு விசாரணையின்போது இவர்கள் அனைவரும் தற்போது அவுஸ்ரேலிய கடற்படைக்கலத்தில் தங்க வைக்கப்பட்டிருப்பதாக முதல் முறையாக நேற்று ஒப்புக்கொண்டுள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கு தஞ்சம் கோரி படகில் சென்ற இலங்கையர்கள் 153 பேரை இலங்கையிடம் ஒப்படைப்பதற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் விசாரணை அந்நாட்டு உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட அவுஸ்ரேலிய உயர்நீதிமன்றம், இவர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு தற்காலிக இடைக்காலத்தடை விதித்திருந்தது. நேற்று இந்த வழக்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்பட்டபோது தஞ்சக்கோரிக்கை யாளர்களுக்கு மூன்று நாள் முன்னெச்சரிக்கை அறிவிப்பு கொடுக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்றும் அவுஸ்ரேலிய அரசு நீதிமன்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு நினைவூட்டலே விடுக்கப்பட்டது

### எச்சரிக்கை அல்ல என்கிறார் வனிகசூரிய

அரச சார்பற்ற நிறுவனங்கள் விதி முறைகளை மீறாமல் செயற்படுமாறு பாதுகாப்பு அமைச்சு எச்சரிக்கை விடுக்கவில்லையெனவும் நினைவூட்டல் மாத்திரமே வெளியிட்டதாகவும் இராணுவப் பேசாளர் ருவான் வனிகசூரிய தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் மாநாடுகள், பயிற்சிப் பட்டறைகள், பத்திரிகையாளர்களுக்கான பயிற்சி மற்றும் ஊடக வெளியீடு ஆகியவற்றில் அரச சார்பற்ற நிறுவனங்கள் விதி முறைகளை மீறுவதாகவும் யூலை முதலாம் திகதி முதல் அவற்றை நடாத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள தாகவும் பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன் தினம் அனைத்து நிறுவனங்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

இந்த நிலையில், இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ருவான் வனிகசூரிய கருத்து வெளியிடுகையில்,

இலங்கையில் 1416 அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன அவை அனைத்திற்கும் ஏற்கனவே பல வருடங்களுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பை பங்கெடுக்க வலியுறுத்துங்கள்

## ரமபோஷவிடம் அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்


நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பங்கெடுக்கச் செய்வதற்கு வலியுறுத்த வேண்டுமென தென்னாபிரிக்காவின் பதில ஜனாதிபதி சிறில் ரமபோஷவிடம் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் வருகைதந்த தென்னாபிரிக்காவின் பதில் ஜனாதிபதியும் இலங்கைக்கான விசேட பிரதிநிதியுமான சிறில் ரமபோஷவுடன் இடம்பெற்ற, கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த அமைச்சர் இலங்கையில் நீண்டகாலமாக தீர்வு காணப்படாதுள்ள இனப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமே உரிய தீர்வினை காணமுடியுமென நான் திட்டவட்டமாக நம்புகின்றேன்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இப்பிரச்சினை தொடர்பில் உரிய கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு நாம் பலமுறை தமிழ்த் தேசியக்

19 ஆம் பக்கம் பார்க்க



## இந்திய, சர்வதேச சமாதான முயற்சியை குழப்பக்கூடாது தென்னாபிரிக்கா

### ரமபோஷ குழுவிடம் விக்கி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்திய அரசாங்கம் எமது பிரச்சினை விடயத்தில் கவனமெடுத்து செயற்பட்டு வருகின்றது. ஜெனிவாவில் போர்க்குற்ற விசாரணை வந்துள்ளது. அத்துடன் வெளிநாடுகளும் எமது பிரச்சினையில் சாதகமான அணுகுமுறையினைக் கொண்டிருக்கும் நிலையில் தென்னாபிரிக்கா அதனை குழப்பமுயற்சிக்கக் கூடாதென வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தென்னாபிரிக்க உபஜனாதிபதி சிறில்ரமபோஷ தலைமையிலான குழுவினரை நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க

## காணாமற்போனோர் குறித்து 4நாளில் 129பேர் சாட்சிய பதிவு

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்காவது நாளாக நேற்று இடம் பெற்றன.

கடந்த நான்கு நாட்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 129 பேர் சாட்சியமளித்துள்ளனர்.

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்றைய அமர்வுகள் இடம்பெற்றதுடன் இந்த அமர்வில் விசாரணைக்காக 50 பேர் அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் 30 பேர் மட்டும் நேற்று தமது சாட்சியங்களை பதிவு செய்தனர்.

இதன்போது தமது உறவுகள் காணாமற்போன விதம் தொடர்பில் மக்கள் சாட்சியம் வழங்கினர்.

உள்ளே

க.பொ.த. (உயர்தரம்) பரீட்சைக்கான நேர அட்டவணை

## பாப்பரசர் பிரான்ஸிஸ் மன்னிப்புக் கோரவேண்டும்

### பொதுபலசேனா கோரிக்கை

இலங்கை வாழ் பௌத்தர்களிடம் பாப்பாண்டவர் மன்னிப்புக கோர வேண்டுமென பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொடஅத்தே ஞான சார தேரர் கோரியுள்ளார்.

காலனித்துவ ஆட்சிக் காலங்களில் கிறிஸ்தவர்களினால் பௌத்தர்களுக்கு எதிராக மேற்கொண்ட அநீதிகள், அடக்கு முறைகளுக்காக பாப்பாண்டவர் இவ்வாறு மன்னிப்புக் கோர வேண்டுமென வலியுறுத்தி உள்ளார்.

பாப்பாண்டவர் இலங்கைக்கு விஜயம் செய்யும் வரையில் காத்திருப்பதாகவும், இந்தக் குற்றச் சாட்டுக்களுக்கு எவ்வாறு பதில

19 ஆம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்சினை தீர்விற்கு நடுநிலை தென்னாபிரிக்காவிற்கு ஆதரவு

### சம்பந்தன் தெரிவிப்பு

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தென்னாபிரிக்கா நடுநிலை வகிக்க முன்வந்தால் அதற்கு முழுமையான ஆதரவை வழங்குவோம் என்று தென்னாபிரிக்க துணை அதிபர் சிறில் ரமபோஷவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சிறில் ரமபோஷ தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை 7.15 மணி தொடக்கம் 8.45 மணி வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகளை கொழும்பில் தாஜ் சமுத்ரா விடுதியில் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக, கருத்து வெளியிட்ட இரா.சம்பந்தன்,

19 ஆம் பக்கம் பார்க்க

# அரச காணி பகிர்ந்தளித்தல் விசேட கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

மணியம் தோட்டம், பூம்புகார் ஆகிய பகுதிகளில் அரச காணிகளில் குடியிருப்போருக்கு அவற்றை அவர்களின் உடமையாக்குவதற்கான முன் ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பான விசேட ஆலோசனைக் கூட்டம் இன்று காலை மணியம்தோட்டம் கர்த்தர் ஆலய வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், ஜே/89, ஜே/90 ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 327 குடும்பத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த நிகழ்வு மதியம் 2.00 மணி வரை நீடிக்கும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர், பிரதேச செயலக உதவித் திட்டப்பணிப்பாளர், காணித்திணைக்கள அதிகாரிகள் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

தூய கார்மேல் அன்னை ஆலயக் கொடியேற்றம் இன்று 5.00 மணிக்கு பங்குத் தந்தை ஆர்.எக்ஸ். சகாயநாயகம் அடிகளாரால் ஏற்றப்படும்.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் நவநாள் திருப்பலி நடைபெற்று எதிர்வரும் 16 ஆம் திகதி திருநாள் திருப்பலி யாழ்.மாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் காலை 5.30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. (27)

# மது அருந்தியவர் மரணம்

## வவுனியாவில் சம்பவம்

வவுனியா நகரிலுள்ள கள்ளுத் தவறணையொன்றில் கள்ளு அருந்திக்கொண்டிருந்த முதியவரொருவர் திடீரென மரணமான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இவரது மரணம் தொடர்பான விசாரணை வவுனியா பொது வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் முன்னிலையில் நடைபெற்றபோது விசாரணையின் இறுதியில் மாரடைப்பினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சூசைப்பிள்ளையார் குளத்தைச் சேர்ந்த என்.இராமசாமி எனும் 56 வயதுடையவரே இவ்வாறு மரணமானவராவார்.

# பல்துறை விற்பன்னர்களாக கிராமியப் பெண்கள் மாறவேண்டும்



(அச்சுவேலி)

மகளிர்கள் சமுதாயத்தில் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களாகக் காணப்பட்ட அன்றைய காலம் கரைந்து தற்காலத்தில் உலகளாவிய ரீதியில் பெண்கள் நாட்டை ஆட்சிசெய்பவர்களாகவும், பலதுறைகளில் அதிகாரம் மிக்கவர்களாகவும் வளர்ச்சியடைந்துள்ளனர்.

இந்நிலையில் எமது கிராமங்களில் உள்ள பெண்களும் சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து தமது குடும்பங்களைக் கட்டியெழுப்புவதுடன் கிராம வளர்ச்சிக்கும் கல்வித்துறை, விளையாட்டுத்துறை போன்றவற்றின் வளர்ச்சிக்கும் பங்களிக்க வேண்டும்.

இந்த வகையில் அச்சுவேலி மேற்கு மகளிர் விவகாரக் குழுவினர் மிகச் சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றனர் என ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்தார்.

அச்சுவேலி மேற்கு மகளிர் விவகாரக் குழுவினரால் நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் உரையாற்றுகையில்,

எமது கிராம மட்டங்கள், பிரதேச மட்டங்களில் நடைபெறும் இம் மகளிர்களின் திறன்களும், அவர்களின் தலைமைத்துவமும் வெளிக்கொண்டு வரப்படுவதுடன் பெண்களின் ஆளுமையும் விருத்தியடையும்.

வீடுகளில் முடக்கப்பட்டிருந்த பெண்களின் திறமைகள் இன்று உருவம் பெற்று சமுதாயத்தில் எழுந்து நின்று சமுதாய வளர்ச்சியின் சுமையினையும், பொறுப்பினையும் தானும் ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும் சில விரும்பத்தகாத சம்பவங்கள் தற்போதும் ஆங்காங்கே நடைபெற்றுக்கொண்டேயுள்ளது.

இவ்வாறான சம்பவங்களினை பெற்றோர்கள் விழிப்புணர்வுடனும் வளர்ந்து வரும் நவீன உலகின் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைச் சரியான முறையில் கையாள்வதனூடாகவும் தவிர்த்துக்கொள்ள முடியும் எனத் தெரிவித்ததுடன் மகளிர் அமைப்பினால் கோரிக்கை விடப்பட்ட காணி மற்றும் கட்டடத்திற்கு விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரதீபன், வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவரும், வலி.கிழக்கு ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளருமான ஜங்கரன், வலி.தென்மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித்தலைவர் அரிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



உயரப்புரம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்று நடைபெற்றபோது விருந்தினர்கள் அதிபர் கு.திலீபனால் அழைத்து வரப்படுவதையும், புதிதாகக் கட்டப்பட்ட தண்ணீர்த் தாங்கியை க.நந்தகுமார் திறந்து வைப்பதையும், பிரதம விருந்தினர் க.தேவராஜா, மாணவி ஒருவருக்குப் பரிசளிப்பதையும் காணலாம். (137)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1072

திகதி 07.07.2014

வெற்றி எண்கள் — ஆங்கில எழுத்து

11 16 30 62 Y

ஜக்பொட் பரிசு ரூ. 3,29,09,000/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 3,29,09,000/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 12 | 50,000/= | ரூ. 6,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 256 | 1,000/= | ரூ. 2,56,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 445 | 1,000/= | ரூ. 4,45,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11732 | 60/= | ரூ. 7,03,920/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6125 | 40/= | ரூ. 2,45,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154918 | 20/= | ரூ. 30,98,360/= |
| ஆங்கில எழுத்து | 22576 | 20/= | ரூ. 4,51,520/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 67,99,800/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா. 33,211,440/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.07.10 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3733)


# தங்கம்மா அப்பாக்குட்டியின் 6 ஆம் ஆண்டு குருபூசை

## தெல்லிப்பளையில் சிறப்பாக இடம்பெற்றது



தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய முன்னாள் தலைவர் அமரர் அன்னை சிவத்தமிழ் செல்வி துர்க்காதுரந்தரி பண்டிதை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆறாவது ஆண்டு குருபூசை தினம் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நேற்றுப் பகல் நடைபெற்றது. ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அன்னையின் ஐங்கோண மண்டபத்தில் வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து அன்னையின் திருவுருவச் சிலைக்கு ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வ.அகிலேஸ்வரக் குருக்கள் உட்படப் பலர் மலர்மாலை அணிவித்தார்கள்.

வழமை போன்று இம்முறையும் இந்து ஆலயங்களின் பிரபல்யமான மூத்த இந்து சிவாச்சாரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த வேதாகம வித்தகர் சிவஸ்ரீ ச.சோமசுந்தரக் குருக்கள், உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் ஆலய பிரதம குரு கிரியா கீர்த்தி சிவஸ்ரீ வை.சபாரத்தினக் குருக்கள் ஆகியோர் துர்க்கையம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ வ.அகிலேஸ்வரக்குருக்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

இருவருக்கும் நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளினால் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. தொடர்ந்து ஆலய பரிபாலன சபையினரால் பொற்கிழி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக்

ரீசைக்கிள் (மீள்சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3395)

### வீடு விற்பனைக்கு

அதிக பாதுகாப்பான இடத்திலுள்ள கூரைக்கு சீற் போட்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. அரச ஊழியர், வங்கி, ஊழியர், பென்சன் பெறுவோர் போன்ற நிரந்தர வருமானம் உள்ளோர்க்கு முன்னுரிமை வழங்கப்படும். விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். க.சீவறட்ணம் (சிவராதா) றிஜிஸ்ரார் சம்பந்தர் ஒழுங்கை சுதுமலை தெற்கு.

### காணவில்லை

G.தலவகொட்டவ என்பவரது மோட்டார் சைக்கிளின் காப்புறுதிப் பத்திரமும், வரி அனுமதிப்பத்திரமும் (NPXX 6110) யாழ்.நகரப் பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

0771099066

# சமாந்தரமாக வீதியில் செல்லும் மாணவர்களைத் திருத்த முன்வரவேண்டும்

## பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் காலை, மாலை நேரங்களில் வீதிகளில் சமாந்தரமாக செல்வதால் தினமும் சிறுசிறு விபத்துக்கள் நடைபெற்றுவருவதாக பிரயாணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி குறிப்பாக கே.கே.எஸ்.வீதியில் துவிச்சக்கர வண்டிகளில் செல்லும் மாணவர்கள் கைகளைக் கோர்த்தவண்ணம் சமாந்தரமாக இரண்டு, மூன்று பேராக வீதிகளில் செல்வதால் வாகனங்கள் மற்றும் பொதுமக்கள் பயணிக்க முடியாது பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் குற்றச்சாட்டியுள்ளனர்.

மேலும் மாணவர்கள் வீதியால் இவ்வாறு செல்வதை தடுத்துநிறுத்த எவரும் முன்வருவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தினமும் கே.கே.எஸ். வீதியில் சமாந்தரமாகச் செல்லும் பாடசாலை மாணவ, மாணவிகளைப் பார்த்து வீதியால் பயணிப்போர் நீங்கள்படிக்கும்பாடசாலைகளில் சமாந்தரமாகச் செல்லுமாறா கற்பிக்கின்றார்கள்? என மாணவர்களை நோக்கி பேசுவதுடன் மட்டும் நிறுத்தி விடுகிறார்களே தவிர அவர்களைத் திருத்த சம்மந்தப்பட்ட எவரும் முன்வருவதில்லை.

இதனால் எதிர்கால சந்ததியினர் மேலும் மோசமான நிலையை எட்டுவார்களோ என கவலை தெரிவிக்கப்படுகின்றது.


எனவே இவர்களின் நலன்கருதி இவர்களை நல்வழியில் நடாத்த அதிகாரிகள் கவனத்துடன் செயற்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (66)

# சுகாதார சேவைகள் சங்கத்தின் 60 ஆவது நிறைவு விழா

சிறிலங்கா ஜனரஜய சுகாதார சேவைகள் சங்கத்தின் 60 ஆவது நிறைவு விழா கடந்த 5 ஆம் திகதி கண்டி இந்து கலாசாரமண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் தொழிற்சங்கத்திற்காக உழைத்து ஓய்வு பெற்ற 60 தொழிலாளர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் யாழ்.கிளையின் சங்க உறுப்பினரும் ஆலோசகருமான யோ.பிரான்சிஸ் சேவியர் பாராட்டிக்கௌரவிக்கப்பட்டார். (48)



பண்ணையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் சிறைச்சாலையின் நிர்மாணப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. தற்சமயம் கூரை வேலைகள் வரை நிர்மாணப்பணிகள் முடிவடைந்திருப்பதனைக் காணலாம். யாழ்.சிறைச்சாலை தற்சமயம் யாழ்.பிரதான வீதிப்பகுதியில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

# மாற்றுவலுவுடைய பயனாளிகளுக்கு வாழ்வாதாரத்திற்கு நிதியுதவி

(கரணவாய்)

மாற்றுவலுவுடையோருக்கான தேசிய செயலகம் கரவெட்டி அல்வாய் பகுதியில் வாழும் மாற்றுவலுவுடைய இருபயனாளிகளுக்கு வாழ்வாதார உதவியாக நிதியை வழங்கியுள்ளது.

இதன்படி அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட உதயரத்தினம் ஜங்கரன் என்பவருக்கு வீடு திருத்துவதற்காக 75 ஆயிரம் ரூபாவும், உடுப்பிட்டியைச் சேர்ந்த எஸ்.ரதிச்சந்திர என்பவருக்கு சுயதொழிலை மேற்கொள்ள 25 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இவ் இருபயனாளிகளையும் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (18)

# ஒலிபெருக்கி சத்தங்களால் மாணவர்களுக்கு பாதிப்பு

தென்மராட்சி பகுதிகளிலுள்ள வைச ஆலயங்களில் திருவிழாக்கள், கும்பாபிஷேகம், வேள்விகள் எனப் பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறு நிகழ்வுகள் நடைபெறும் போது ஒலிபெருக்கியில் அதிகளவான சத்தத்துடன் பாடல்களை ஒலிக்கவிடுவதனால் ஆலயங்களைச் சூழவுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுவதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது உயர்தரப் பரீட்சைக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு ஒலிபெருக்கி சத்தம் இடையூறாக அமைவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.


எனவே ஆலய நிர்வாகத்தினர் மாணவர்களின் நன்மை கருதி ஒலிபெருக்கியின் சத்தத்தை குறைத்து திருவிழாக்களை நடாத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கும்பாபிஷேகம்

மாதகல் நுணசை கூடல் விளாத்தி அருள்மிகு ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் இன்று மு.ப. 10.15 மணி முதல் நண்பகல் 11.15 மணி வரை இடம்பெறவுள்ளது.

நேற்று காலை 8 மணி முதல் மாலை 9 மணி வரை பக்தர்களின் எண்ணைக்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழா... தமிழா...






'என்ன, எப்ப பார்த்தாலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் வடக்கு மாகாணசபையையும் சொறிஞ்சு கொண்டிருக்கிறீர். உமக்கு அவங்களைச் சொறியாட்டில் பத்தியப்படாதாக்கும். நீங்கள் எப்பிடித்தான் அவங்களைப் பற்றி எழுதிக் கிழிச்சாலும் சனங்கள் அவங்கட பக்கந்தான் நிக்கும். அரசாங்கம் இனவாதமாக நடக்கிற வரைக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வெற்றிதான்.' எண்டு என்னைக் கண்டவுடன வெழச்சார் பத்தண்ணை.

பத்தண்ணை ஒரு பழுத்த அரசியல்காய். ஆனால், ஒரு கட்சிக்கும் ஆதரவில்லை. ஒருதருக்கும் வாக்குப்போடுகிறதும் இல்லை. ஒரு தேர்தலிலயும் பங்கெடுக்காத ஆள். ஆனால், இந்த மாதிரி அரசியல் அபிப்பிராயங்களைச் சொல்லிறதிலயும் ஆரோடயும் அரசியலைப்பற்றி விவாதிக்கிறதிலயும் ஆள் வலு விண்ணன். அந்த நேரம் ஆளை நீங்கள் பாத்தீங்கள் எண்டால், இவரையெல்லோ தலைவராக்க வேணும். இவரைத்தான் பேச்சுவார்த்தைகளுக்கு அனுப்போணும் எண்டு நினைப்பியள். அந்த அளவுக்கு ஆளின்ரை அரசியல் முழக்கங்கள் இருக்கும்.

இப்ப பத்தண்ணை, என்னோட ஏறிப்பாயிறதுக்கு என்ன காரணம்?

அரசாங்கத்தின் இனவாதத்தை நான் எழுதிக்கிழிக்கேல்லை. அதை எதிர்க்கேல்லை எண்டு நினைக்கிறாரோ....

இல்லாட்டிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பற்றித் தொடர்ந்து தாக்கி எழுதிக்கொண்டிருக்கிறன் எண்டு கோவப்படுகிறாரோ...

இல்லாட்டிக்கு கூட்டமைப்பின்ரை பொறுப்பில்லாத் தனங்களைப் பற்றியும் அதின்ரை பொய்த்தனங்களைப் பற்றியும் எப்பிடித்தான் எழுதினாலும் இந்தத் தமிழ்ச்சனங்களின்ரை கண்ணிலையும் காதிலையும் அதெல்லாம் விழாது எண்டு நினைக்கிறாரோ...!

இல்லாட்டிக்கு இலங்கையில உணவுப்பயிர் வளராட்டிலும் இனவாதப் பயிர் நல்லா வளரேக்க ஆரையும் குறைசொல்லி ஆகப்போகிறது ஒண்டுமில்லை எண்டு நினைச்சாரோ...தெரியேல்ல.

ஆனால், நாங்கள் எவர்தான் தப்புப் பண்ணினாலும் அதைச் சுட்டிக்காட்டி எழுதுவம். பேசுவம். எதிர்ப்பம். நாலு சனங்களுக்கு உண்மையான நிலைமையை விளக்குவம். இதைத்தான் நாங்கள் செய்யேலும். இதைக் கட்டாயம் செய்யோணும். எனக்காக மட்டுமில்லை, என்ரை பிள்ளைகளின்ரை எதிர்காலத்தைப் பாதுகாக்கிறதுக்காக, அடுத்த வீட்டுப்பிள்ளைகளின்ரை பாதுகாப்புக்காகவும் அவையளின்ரை எதிர்கால நன்மைக்காகவும் இதையெல்லாம் நாங்கள் கட்டாயம் செய்யோணும்.

சும்மா வீரக்கதைகளையும் பழங்கதைகளையும் பேசிப்பேசி நாங்கள் எப்பவும் அடிமைகளாக இருக்கேலாது.

வீரக்கதைகளைப் பேசினவையளில முக்கால்வாசிப்பேர் நாட்டை விட்டே போயிடுவினம்.

அப்பிடி இருந்தாலும் அவைக்குத் தோதான தேசிய அரசியல்ல குதிச்சிடுவினம். இதுகளை நம்பிக்கொண்டிருக்கிற சனங்கள்தான் நெரிபடுகிறதும் துன்பப்படுகிறதும்.

தமிழா... தமிழா எண்டு நரம்பைச் சுண்டி ரத்தத்தைச் சூடாக்கிப்போட்டு அவனவன் அந்தச் சூட்டிலயே குளிர்காயிறான்.

இதாலதான் நான் சனங்களுக்கு உண்மையான நிலவரம் என்ன எண்டு அறியுங்கோ எண்டு எழுதிறன்.

அரசியல்ல இருக்கிற ஆக்களைச் சீண்டி எழுதிறன். அவையளின்ரை சுத்துமாத்துகளை அம்பலப்படுத்திறன். இதை ஒருதராவது மறுக்கட்டும் பார்ப்பம்.

அப்பிடி மறுத்தால், அந்த மறுப்பை அவை ஆதாரமாக மறுத்தால், அது அவைக்கு வெற்றிதானே.

ஏனெண்டால், இது சனங்களை வைச்சுப் பிழைப்பு நடத்துகிற அரசியல்வாதிகளைப் பற்றிய சங்கதிகள்.

உயிரைக் குடுத்துப் போராடுகிறவர்களைப் பற்றி எழுதேக்க கொஞ்சம் நிதானமாக யோசிக்கத்தான் வேணும்.

இவை ஒரு மசிரையும் குடுக்கிற ஆக்களில்லை. சனங்களிட்ட இருந்து சுளை சுளையாக எடுக்கிற – பிடுங்கிற ஆக்கள்.

அப்பிடிச் 'சனங்களிட்ட இருந்தும் அரசாங்கத்திட்ட இருந்தும் சுளை சுளையாகப் பிடுங்கிற ஆக்களைப் பற்றி எழுதிறதில என்ன தப்புப் பத்தண்ணை?' எண்டு கேட்டன்.

'தம்பி, நீர் என்னதான் சொன்னாலும், எப்பிடித்தான் சொன்னாலும் எங்கட தமிழ்ச்சனங்களுக்கு லேசில நல்ல விசயங்கள் ஏறாது. அவைக்கு மந்த புத்தி. அவையைப் பொறுத்தவரையில் தங்கட மூக்கு மட்டுமில்லை, முகம்தான் சிதைஞ்சு போனாலும் எதிரிக்கு – மகிந்தருக்கு (அரசாங்கத்துக்கு) சகுனம் பிழைக்கோணும் எண்டு யோசிக்கிற ஆக்கள். இதெல்லாம் புறக்குடத்துத் தண்ணிதான்' எண்டு அலுத்தார்.

பத்தண்ணை நல்லாய் களைச்சுத்தான் போனார்.

அவரும் இந்த அம்பது அறுவது வருசமாக எத்தினையோ அரசியல் விளக்கங்களை எல்லாம் இந்தத் தமிழ்ச்சனங்களுக்கு குடுத்திருக்கிறார்.

ஆனால், எல்லாத்தையும் கேட்டுப்போட்டு கடைசி நேரத்தில எல்லாம் ஒண்டுக்குப் பின்னுக்கு ஒண்டாக செம்மறிக்கூட்டத்தைப் போல தலையைக் கவிண்டு கொண்டுபோய்... கீறிப்போட்டுப் போய்விடுகுதுகள்.

எங்கயாவது ஒருத்தன் நிண்டு தமிழா தமிழா எண்டால் காணும்... உடனயே நரம்பெல்லாம் சிலிர்க்க சும்மா நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு போய்... சுவரில மோதிப்போட்டு நிக்குதுகள்.

இதாலதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை நீர் தாக்காமல் இந்தச் சனங்களின்ரை ஏமாளித்தனத்தை மாத்திறதைப்பற்றி யோசியும் எண்டு சொல்லுறார் பத்தண்ணை.

பத்தண்ணை, சும்மா சொல்லப்பிடாது, நீங்கள் ஒரு அரசியல்மேதைதான்.

பிறரிடம் உள்ள நூறு குறைகளைச் சுட்டிக்காட்டுவதைவிட நம்மிடம் இருக்கும் ஒரு குறையையாவது போக்க வேண்டும். - புத்தர்

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## 'கழற்றி' விடப்பட்ட தென்னாபிரிக்கா!

தென்னாபிரிக்க உப ஜனாதிபதியும் இலங்கைக்கான விசேட பிரதிநிதியுமான சிறில் ரமபோச நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடிவிட்டு நேற்றே கொழும்பு திரும்பியிருக்கிறார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ரமபோசவுடனான சந்திப்பின் போது, நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பங்கெடுக்கச் செய்வதற்கு வலியுறுத்த வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளார்.

இனப்பிரச்சினை தொடர்பில் நாட்டின் அனைத்துக் கட்சிகளுடனும் உரிய கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு பலமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் அவர்கள் தட்டிக்கழித்தே வருகின்றனர். கடந்த காலங்களிலும் இவ்வாறு கிடைக்கப்பெற்ற நல்லவாய்ப்புக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவற விட்டிருந்தனர் என்பதையும் அமைச்சர் டக்ளஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடனான சந்திப்பின்போது, அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவில் உங்கள் பிரச்சினையைப் பேசித் தீர்வைக் கண்டுகொள்ள முடியாதா என்று ரமபோச வினவியுள்ளார்.

அதைத் தவிர வேறு வழியில் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேசத்திடம் வேறு உபாயமெதுவுமில்லை என்பதே தென்னாபிரிக்க உப ஜனாதிபதி முதலமைச்சருக்கு விளங்கப்படுத்த முயன்றதாகும்.

ஆனால், தெரிவுக்குழு, பேச்சு, தீர்வு என்று பொறிக்குள் மாட்டிக் கொண்டு விட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் வாழ்வுக்கும் அடுத்த தேர்தலுக்கும் வரப்போகும் இன்னல்களை தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் அல்லவா அறிவார்கள்!

13வது திருத்தத்தின் அடிப்படையிலேயே ஒரு தீர்வுக்குப் பேசுவதென்பதைக் கூட்டமைப்பு நினைத்துப்பார்க்க முடியுமா? ஆனால் யதார்த்தமென்னவோ அதுதான். அதைத்தான் சர்வதேச நாடுகள் தீர்வு பற்றிப் பேசும்போதெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றன. அதைவிடுத்து வேறொரு தீர்வு பற்றி எந்தவொரு சர்வதேச நாடும் எந்தவொரு சிறு குறிப்பையும் எந்தவொருபோதிலும் வெளிப்படுத்தியதில்லை.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ, "சர்வதேசத்திடம் கிட்டத்தட்டத் தனிநாட்டை எடுத்துத் தந்துவிடும் 'ஐடியா' ஒன்றிருக்கிறது. அந்தத் தீர்வுப் பழத்தைக் கனிய வைப்பதற்கான அடிகளைத்தான் ஒவ்வொரு ஆண்டும் ஜெனிவா மாநாட்டில் அமெரிக்க நாடுகள் மெல்ல மெல்ல அடித்து வருகின்றன... கனியும் காத்திருங்கள்" என்ற கதையை விடாமல் சொல்லி வருகிறார்கள்.

• இந்தக் கதையில்தான் அவர்கள் இன்னும் பத்துப் பதினைந்து வருசங்களுக்காவது தேர்தல்களை ஓட்ட வேண்டும்; "நம்புங்கள் தமிழீழம் நாளை கிடைக்கும்" என்ற உணர்ச்சி ஆவேசத்தில் மக்களை ஏமாற்றி வைத்திருந்தே வாக்குகளைப் போட வைக்க வேண்டும்.

தெரிவுக்குழு, 13வது திருத்தம் என்று என்று வெளிநாட்டினர் வாய்திறந்து விட்டால், முதலுக்கே மோசமாகி விடாதா? முதலமைச்சருக்கு ரமபோச வழங்கிய அதிர்ச்சி அதுதான்.

துடிதுடித்துப் போன முதலமைச்சர் ரமபோசவிடம் சொல்லியிருக்கிறார்: "மேற்குலகும் இந்தியாவும் எமக்குச் சாதகமான அணுகுமுறையில் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் தென்னாபிரிக்கா சமாதானம்–தெரிவுக்குழு–பேச்சுவார்த்தை முயற்சிகள் என்று அவற்றைக் குழப்பிவிட வேண்டாம்" என்பதாக.

எப்படியோ, ஒருவாறு தென்னாபிரிக்க பேச்சுவார்த்தை முயற்சியையும் 'கழற்றி' விட்டாச்சு. இதோ இன்னும் நாலைந்து மாதத்தில் ஜெனிவாத் திருவிழா ஆரம்பித்துவிடும். "இலங்கை அரசின் கழுத்து இறுகுகிறது பாருங்கள்" என்று வேடிக்கை காட்டிக்கொண்டே அடுத்த தேர்தலை ஜெயித்துவிடலாம்!

- ஆசிரியர்

# உலக விவசாய நிதியம்; மகிந்தவின் கோரிக்கை ஏற்பு

(கொழும்பு)

உலக விவசாய நிதியம் உருவாக்கவேண்டும் என்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட உலக உணவு மற்றும் விவசாய நிறுவனம் அதனை அமைப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்ட உணவுப் பாதுகாப்பு போஷணை மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்ற தலைப்பிலான மாநாட்டின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கையே தற்போது நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 7 - 11 ஆம் திகதிகளில் நடைபெற்ற ரஷ்யாவின் பீட்டர்ஸ் பர்க் நகரில் நடைபெற்ற உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் 7ஆவது அமர்வில் மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் இக் கோரிக்கையை நிறைவேற்றும் நோக்கில் மீண்டும் முன்வைக்கப்பட்டது.

இதனை உலக நீர்வாழ் உயிரின அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு திட்டம் ஏற்றுக்கொண்டது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன முன்வைத்த இக்கோரிக்கையின் அடுத்த கட்டமாக இவ்வருடம் யூன் மாதம் 9-13 ஆம் திகதிகளில் ரோமில் நடைபெற்ற ஐ.நா. உணவு மற்றும விவசாய அமைப்பின் மீன்பிடி தொடர்பான அமைப்பின் 31ஆவது மாநாட்டில் இது உள்வாங்கப்பட்டதுடன் இதன் போது அந்த நிதியத் திற்கு மகிந்த ராஜபக்ஷ உலக நீர்வாழ் உயிரின உற்பத்தி நிதியம் என்று பெயரிட அனுமதி கிடைத் துள்ளது.

இது தொடர்பாக உலக உணவு மற்று விவசாய அமைப்பின் அங்கத்துவ நாடுகள் பாராட்டுக்களை தெரிவித்துள்ளன.

# சோபிததேரர் விமலுடன் சந்திப்பு ஜனாதிபதித் தேர்தலுக்கு புதுவியூகம்

(கொழும்பு)

வீடமைப்பு, பொறியியல் மற்றும் நிர்மாணத்துறை அமைச்சரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்சவுக்கும், கோட்டே ஸ்ரீ நாகவிகாரை மாதுலுவாவே சோபித தேரருக்கும் இடையில், கோட்டையிலுள்ள தேசிய முன்னணியின் காரியாலயத்தில் சந்திப்பு இடம் பெற்றது.எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்குவதற்கு தான் தயார் என்று மாதுலுவாவே சோபித்த தேரர் அறிவித்திருக்கின்ற நிலையிலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

# 300 சட்டவிரோத ஆவணங்கள் கடத்தல்; சாரதி ஒருவர் மடக்கிப் பிடிப்பு

(கம்பளை)

கம்பளை மரியவத்த பிரதேசத்தில் 300 இற்கும் அதிகமான ஆவணங்களுடன் வைத்து சாரதியொருவரை நேற்று கைது செய்ததாக கம்பளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் போது குறித்த சாரதி தன்வசம் வைத்திருந்த பிறப்பு சான்றிதழ்கள், மரண சான்றிதழ்கள், வாகன புகை பரிசோதனை சான்றிதழ்கள், தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் உள்ளடங்கலாக 300 இற்கும் அதிகமான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஆசனத்தின் கீழ்ப்பகுதியில் 100இற்கும் அதிகமான தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததுடன் குறித்த ஆவணங்கள் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

# – எதிர்கால இலங்கையில் – தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நாமும் கட்டுரைப்போட்டிக்கு ஆக்கம் கோரல்

"எதிர்கால இலங்கையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நாமும்" என்ற தலைப்பில் அகில இலங்கை ரீதியான கட்டுரைப்போட்டியொன்றை நடத்த கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

இலங்கையில் தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப்பட்டு மூன்று தசாப்தங்களுக்கும் மேலான நிலையில் அது கடந்து வந்த பாதையை ஆய்வு செய்யும் நோக்கில் கலை, கலாசார அமைச்சினால் இந்தக் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

கலாசார மற்றும் கலை விவகார அமைச்சின் வழிகாட்டலில் கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை உபகலைச் சபையின் அரச ரூபவாஹினி கலை அமைப்பு ஆகியவை இணைந்து இக்கட்டுரைப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளன.

கனிஷ்ட, சிரேஷ்ட மற்றும் திறந்த போட்டிகளாக நடத்தப்படவுள்ள இக்கட்டுரைப்போட்டியில் கனிஷ்ட பிரிவில் 12 வயதுக்குக்குறைந்த மாணவர்களும் சிரேஷ்ட பிரிவில் 13-18 வயதுக் கிடைப்பட்ட மாணவர்களும், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் திறந்த பிரிவிலும் கலந்து கொள்ள முடியும்.

அனைத்து பிரிவுகளும் "எதிர்கால இலங்கையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நாமும்" என்ற தலைப்பிலேயே கட்டுரை எழுதவேண்டும். மும்மொழிகளிலும் நடைபெறவுள்ள இக்கட்டுரைப்போட்டியில் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் கட்டுரைகளை எழுதி அனுப்ப முடியும். ஆனால் ஒருவர் ஒரு மொழியில் ஒரு கட்டுரையை மட்டுமே எழுதி அனுப்ப முடியும்.

A4 அளவிலான தாளில் தெளிவான கையெழுத்தில் எழுதி அனுப்ப வேண்டும். அல்லது அச்செழுத்திட்டு அனுப்பப்படும் பிரதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கனிஷ்ட பிரிவில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் 75-100 சொற்களும், சிரேஷ்ட பிரிவு போட்டியாளர்கள் 200-250இற்கு இடைப்பட்ட சொற்களும் திறந்த பிரிவில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் 450 - 500 சொற்களும் கொண்ட கட்டுரைகளை அனுப்ப வேண்டும்.அனைத்து கட்டுரைகளுடனும் முதலெழுத்துக்களுடான முழுப்பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், போட்டி இலக்கம், பிறந்த திகதி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கமும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் அதிபர் அல்லது வகுப்பாசிரியரது கையெழுத்துடன் கட்டுரைகளை அனுப்புதல் வேண்டும். திறந்த பிரிவில் கலந்துகொள்ளும் போட்டியாளர்கள் தம்மால் உறுதிப்படுத்தப்பட்ட கட்டுரைகளை அனுப்ப வேண்டும்.

இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் செயலாளர், அரச ரூபவாஹினி உபகலைச் சபை, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் மேற்பக்க மூலையில் கட்டுரைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

# பாலித்த தேவபெருமவின் இராஜினாமாவை ஏற்கமறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த தேவப்பெருமவின் இராஜினாமா கடிதத்தை, கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஏற்க மறுத்துவிட்டார்.

அளுத்கம சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைதுசெய்யா விட்டால் பொலிஸ்மா அதிபர் பதவி விலகவேண்டும் இல்லாவிட்டால் தான் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்வேன் என அவர் அண்மையில் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், நேற்று தனது இராஜினாமாக் கடிதத்தை ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில்விக்ர மசிங்கவிடம் கையளித்தபோது அதனை அவர் ஏற்க மறுத்துள்ளார்.

# மக்களை வெற்றுக் கனவுகளில் மூழ்கடிக்காமல், கூட்டமைப்பு இனியாவது செயற்பட வேண்டும்

2

**அபிமன்யு**

முன்னேஸ்வரம் பத்ரகாளி அம்மன் ஆலய மிருகபலி பூசைக்கு நீதிமன்றம் அண்மையில் தடை விதித்திருந்தது. அந்தத் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறு கோரி பத்ரகாளி அம்மன் ஆலயத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை விசாரித்தபோது தலைமை நீதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்: "ஹம்!.. மிருகபலி யாகத்திற்காக பத்ரகாளி அம்மன் ஆலயத்தினர் நீதிமன்றம் சென்று தீர்ப்புப் பெறுகிறார்கள். 13ஆவது திருத்தம் சம்பந்தமாக நீதிமன்றம் செல்ல மெத்தப் படித்த மேதைகள் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு வக்கில்லை!!.."



(நேற்றைய தொடர்ச்சி)

தமிழ் மக்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்புகளுடன் நீதியரசர் சி.வி விக்னேஸ்வரனின் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட வடமாகாண சபை அரசாங்கம் இது வரையில் கூறி வருவது-

- வடமாகாண சபையின் கவர்னராக இராணுவ அதிகாரியின் நியமனம் மாற்றப்பட வேண்டும். சரி!. இராணுவ அதிகாரியை மாற்றி விட்டு, பதிலாக இன்னுமொரு தீவிர சிங்களப் பேரினவாதியை மகிந்த ராஜபக்ஷ நியமிக்க முடியும். அது பரவாயில்லையா? அப்படியானால் எல்லாம் சரியாகி விடுமா?

அடுத்தது, வடமாகாணத்திலிருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்.

-அகற்றப்பட வேண்டுந்தான். சந்தேகமில்லை.

ஆனால், இப்பொழுதும் தனித் தமிழ்நாடுதான் தீர்வு என்றும், புலி ஆதரவுக் கோஷங்கள், புலிகளின் மீளாக்கத்திற்கான முனைப்புகள் என்றெல்லாம் பேச்சுக்களும், நடவடிக்கைகளும் ஆங்காங்கே நிலவுவதைச் சாக்காக வைத்து. மகிந்த ராஜபக்ஷ இராணுவ முகாம்களை மூடவோ, குறைக்கவோ போவதில்லை. இந்தப் போக்கும் சாக்கும் அவருக்கு வேண்டியிருக்கிறது. தற்போதைய நிலைமையை உடனடியாக அவர் மாற்றுவதற்கான சாத்தியம் இல்லை.

மேலும், நிலவளம், பொலிஸ் அதிகாரம் மாகாண சபை அரசாங்கத்திற்குத் தரப்படவில்லை.

உண்மை!-இவைகள் தரப்பட வேண்டியவைதான். ஆனால், தரப்படாத அதிகாரங்களைக் கேட்டுக் கொண்டு மட்டும் நாட்களை விரயப்படுத்திக் கொண்டிருப்பதற்குப் பதிலாக, அவற்றைக் கோரிக் கொண்டே, ஆனால் அதற்காகத் தற்காலிகமாகவாவது அரசாங்கத்துடன் முரண்பட்டுக் கொண்டிராமல், ஏற்கனவே தரப்பட்ட பல அதிகாரங்களையும், சட்டங்களையும் பயன்படுத்தி வடமாகாண சபை அரசாங்கமும், அதன் அமைச்சர்களும், மக்கள்நலன் சார்ந்த பல திட்டங்களை ஏற்படுத்திச் செயற்படுத்த முடியாதா?

ஏற்கனவே இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி, வடமாகாண அரசாங்கம் என்னென்ன திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்?, என்னென்ன திட்டங்களைச் செயற்படுத்தியிருக்கிறார்கள்?, அரசாங்கத்திலிருந்தும் இதர வருவாய்களிலிருந்தும் எவ்வளவு பணம் கிடைக்கப்பெற்றிருக்கிறது?, என்னென்ன திட்டங்களில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது?, என்னென்ன திட்டங்களைச் செயற்படுத்த முடியாதிருக்கிறது?, அதற்கான காரணங்கள் என்ன? என்பவற்றை வடமாகாண அரசாங்கம் தெளிவாகப் பட்டியலிட்டுத் தெரிவிக்க வேண்டும். ஏன் இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை?

13ஆவது திருத்தத்திற்கு எதிராக அரசாங்கம் செயற்படுகிறது என்றால், எந்தச் சரத்துகளுக்கு எதிராகச் செயற்படுகிறது என்பதை விளக்கி அவற்றிற்கு சரியான வியாக்கியானங்கள் கோரி, அவற்றை முறையாக நடைமுறைப் படுத்தும்படி நீதிமன்றங்களுக்கு எடுத்துச் சென்றிருக்கிறார்களா? அப்படியானால், அவை எவை? என்பதை வடமாகாண அரசாங்கம் பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும்.

இது பற்றி கேள்விகள் எழுப்பப்பட்டால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு நெருக்கமாக இருப்பவர்களிடமிருந்தும் தெளிவான பதில்கள் இல்லை. "பல காரியங்கள் செய்யப்படுகின்றன; 'கருமங்கள்' ஆற்றப்படுகின்றன; எல்லாவற்றையும் எல்லாருக்கும் சொல்லமுடியாது" என்ற சொதப்பல்கள்.

"வடமாகாணசபையின் முதன்மைச் செயலாளர், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர். தனது கடமைகளைச் செய்ய முடியாது வடமாகாண அரசாங்கம் முட்டுக்கட்டை போடுகிறது என அவர் நீதிமன்றத்தில் முறையிட்டிருக்கிறார். அதன் முடிவைப் பார்த்திருக்கிறோம்" என்றும் ரி.என்.ஏ.யினர் தரப்பில் நீதிமன்றத்தை இதுவரை அணுகாததின் காரணமாகவும் கூறப்படுகிறதாம். - "எங்களுக்கு நல்ல குழந்தை ஒன்று வேண்டும், ஆனால், யாரோ கர்ப்பமுற்றிருக்கிறார்கள், அந்தக் குழந்தை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கவிருக்கிறோம்" என்பதைப் போலல்லவா இருக்கிறது இது. அலுங்காமல் நலுங்காமல் அடைய விரும்பும் குழந்தைப் பேறு!..

வேறொரு பதில்:- நீதிமன்றம் அரசாங்கத்திற்கே சார்பாக இருக்கும்.

சரி, இருக்கலாம். அதற்காக நீதிமன்றத்தைச் சட்டரீதியாக அணுகும் எமது அடிப்படை உரிமையையும் கைவிடுவதா? சரியான வாதங்களை முன்வைக்கும் சட்டத்தரணிகள் எம்மத்தியில் இல்லையா?. சி.வி.விக்னேஸ்வரன், இரா. சம்பந்தன, சுமந்திரன் ஆகியோரே சட்டத்தரணிகள்தானே. சி.வி. விக்னேஸ்வரன் முன்னாள் நீதியரசர். சுமந்திரன் இன்னும் அதிக ஊதியம் பெறும் சட்டத்தரணியாக நீதிமன்றங்களில் ஆஜராகிக் கொண்டிருக்கும் பிரமுகர்.

இதில் வேடிக்கை ஒரு சமீபத்திய செய்தி:-இந்து ஆலயங்க்ளில் செய்யப்படுகின்ற மிருகபலி யாகத்தை முழுமையாகத் தடைசெய்ய முடியாது என்று இலங்கையின் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் அறிவித்துள்ளார். மிருகபலி தொடர்பாக பிக்குமாரின் தேசிய சங்க சம்மேளனம் தாக்கல் செய்த வழக்கு ஒன்றை விசாரித்த இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் சிலாபத்தில் உள்ள முன்னேஸ்வரம் பத்ரகாளி அம்மன் ஆலய மிருகபலி பூசைக்கு அண்மையில் தடை விதித்திருந்தது. அந்தத் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறு கோரி பத்ரகாளி அம்மன் ஆலயத்தினரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை விசாரித்த போதே தலைமை நீதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்:

-ஹம்!.. மிருகபலி யாகத்திற்காக பத்ரகாளி அம்மன் ஆலயத்தினர் நீதிமன்றம் சென்று தீர்ப்புப் பெறுகிறார்கள். 13ஆவது திருத்தம் சம்பந்தமாக நீதிமன்றம் செல்ல மெத்தப் படித்த மேதைகள் உள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு வக்கில்லை!!...

ஏற்கனவே இருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி, வடமாகாண அரசாங்கம் என்னென்ன திட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்?, என்னென்ன திட்டங்களைச் செயற்படுத்தி இருக்கிறார்கள்?, அரசாங்கத்திலிருந்தும் இதர வருவாய்களிலிருந்தும் எவ்வளவு பணம் கிடைக்கப்பெற்றிருக்கிறது?, என்னென்ன திட்டங்களில் எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது?, என்னென்ன திட்டங்களைச் செயற்படுத்த முடியாதிருக்கிறது?, அதற்கான காரணங்கள் என்ன? என்பவற்றை வடமாகாண அரசாங்கம் தெளிவாகப் பட்டியலிட்டுத் தெரிவிக்க வேண்டும். ஏன் இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை?

அட, 13ஆவது திருத்தந்தான் சரியில்லை, ஒன்றுக்கும் உதவாது என்றால், மாற்றாக என்ன தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்களின் பெரும்பான்மைப் பிரதிநிதிகளாக தமிழ்க் கூட்டமைப்பினர் சமர்ப்பித்திருக்கிறீர்கள்? என்று கேட்டால், பொத்தாம் பொதுவாக, "சுயநிர்ணய உரிமை,. கெளரவமான வாழ்வு, எமது மக்கள் சமத்துவமாகவும், சமபிரஜைகளாகவும் வாழ்வதற்கு அதிகாரங்கள் கூடிய அளவில் பகிர்ந்தளிக்க வேண்டும். இந்தியாவும், சர்வதேச சமூகமும் எமது கோரிக்கையின் நியாயப்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளது" என்ற வெற்று முழக்கம்!.-தமிழர்கள் தம் உரிமைகளைப் பெற போதுமானதா?

இப்பொழுது, இன்னும் ஒரு படி மேலே போய் "ஒரு நாட்டில் ஒரு காலத்தில் அநீதி ஏற்படலாம். ஆனால் எந்தவொரு நாட்டிலும் அந்த அநீதி தொடர்கதையாக இருக்க முடியாது" என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் முனிபுங்குவ வார்த்தைகள்!. இவர் இந்த வார்த்தைகளை முற்றிலும் நம்பித்தான் சொல்கிறாரோ தெரியவில்லை. ஆனால், "சிலர் சிலரை எல்லாக்காலமும் ஏமாற்றலாம். ஆனால் எல்லாரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்ற முடியாது" என்பது தமிழர்களைப் பொறுத்தவரையில் பொருத்தமற்றது என்பது நீண்ட கால அவரது அரசியல் அனுபவத்தில் அவருக்கு நன்றாகத் தெரியும் போலிருக்கிறது!.

தமிழர்களைப் பெரும்பான்மையாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான். அவர்கள் இலங்கை அரசியல் யாப்பில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தை இப்போதைக்கு மையமாகக் கொண்டு தமிழர்களின் இன்னல்களையும், அவலங்களையும் தீர்க்க, வாழ்வாதாரங்களைச் செப்பனிட, நேர்மையானதும் தீர்மானகரமானதுமான சகலவித அரசியல், சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் விட்டால், அது சிங்களப் பேரினவாதிகளுக்கே சாதகமாக அமையும்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி மாற்றத்தின் பின்னரோ, அல்லது மகிந்த ராஜபக்ஷ சீனாவிற்கும், மற்றும் அமெரிக்கா, மேற்கு நாடுகளின் நலன்களுக்குச் சாதகமற்ற நாடுகளுக்கும் வழங்கும் ஆதரவு நீர்த்துப்போகும் பட்சத்திலோ, இந்தியா மற்றும் இதர சர்வதேச சமூகங்கள், தமிழர் சம்பந்தமான அக்கறைகளைக் குறைக்கும். தமிழர்களின் இன்றைய இன்னல்கள் நீங்காததோடு மேன்மேலும் அதிகரிக்கும் இலங்கையில் தமிழர்களின் அடையாளம் மேன்மேலும் மங்கும்.

மிகவும் துரதிர்ஷ்டவசமாக இதுதான் நடக்கப்போகிறது. எமது தலையில் நாமே மறுபடியம் மண்ணை அள்ளிக் கொட்டிய நிலைமைக்குத்தான் இட்டுச் செல்லப்போகிறது.

தமக்கு ஒரு விடிவைத் தருவார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நம்பிக்கை வைத்திருக்கும் அனைவரும், "மகிந்த ராஜபக்ஷ அரசு ஒன்றையும் தராது" (இதைச் சொல்வதற்காகவா தேர்தல்களில் எங்கள் வாக்குகளை அவர்களுக்கு அளித்தோம்?) என்று மட்டும் சொல்லிக் கொண்டிராமல், "சர்வதேசம் நாம் விரும்பும் குழந்தையைப் பெற்றுத் தந்து விடும்" என்ற வெற்றுக் கனவுகளில் மூழ்காமல், இனியாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டிய அரசியல், சட்ட நடவடிக்கைகள், மக்கள் போராட்டங்கள் ஆகியவற்றை முன்னெடுக்கக் காத்திரமான, வலிமையான, உந்துதல்களையும் அழுத்தங்களையும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும், இலங்கையில் வாழும் தமிழர்களும் அவர்களுக்கு ஆணித்தரமாகக் கொடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால், இலங்கைத் தமிழ்மக்களுக்கு, அதுவும் குறிப்பாக இலங்கையில் வாழும் ஏழைத் தமிழர்களுக்கும் அவர்களது சந்ததியினருக்கும் வஞ்சம் புரிந்தவர்களாகி விடுவோம்.

# மக்களின் வாக்களிக்கும் உரிமையில் தலையீடு செய்ய அமெரிக்கா முயற்சி

## ஊடகத்துறை அமைச்சர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டின் தேர்தல் முறைமை மக்களின் வாக்களிக்கும் உரிமை ஆகியனவற்றில் தலையீடு செய்ய அமெரிக்கா முயற்சிக்கின்றது. யாரின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக அமெரிக்கா இவ்வாறு தலையீடு செய்கின்றது என்பது புரியவில்லை என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல குற்றம் சுமத்தியுள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்ட விதம் குறித்த அனுபவம் காணப்படுகின்றது. இவற்றின் ஊடாக நாட்டுக்கு எதிராக செயற்படும் தரப்பினர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வாக்காளர்கள் புத்தி சாதுரியமானவர்கள். அளிககப்பட்ட வாக்குகள், செல்லுபடியான வாக்குகள் குறித்து கடந்த கால தகவல்களின் மூலம் விபரங்களை புரிந்து கொள்ள முடியும்.

மக்கள் வாக்களிப்பது நாட்டின் உள்விவகார பிரச்சினையாகும். இந்த விடயங்களில் வெளிநாடுகள் தலையீடு செய்ய வேண்டிய அவசியம் கிடையாது.

போர் வெற்றியைத் தாங்கிக் கொள்ள முடியாது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இவ்வாறு இலங்கை விவகாரங்களில் தலையீடு செய்கின்றன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அல்ஜசீரா ஊடகவியலாளர் புலனாய்வு பிரிவால் விசாரணை

அல்ஜசீரா ஊடகத்தின் ஊடகவியலாளர் டினோக் கொலம்பகே, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இந்த விசாரணை இடம்பெற்றதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்

அளுத்கம மற்றும் பேருவளை பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து இந்த விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது ஒன்பது பேர் கொல்லப்பட்டதாக இவர் தெரிவித்திருந்தார்.

இவ்விடயம் குறித்து டினோக் கொலம்பகே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களுக்கு மன்னிப்பு

(கொழும்பு)

சிறி ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் நன்னடத்தை தவறியமை தொடர்பாக தண்டனை வழங்கப்பட்ட மாணவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என அப்பல்கலைக்கழக உபவேந்தர் உட்பட நிர்வாக குழு அறிவித்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி முதல் அவர்களுடைய தண்டனைகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் எவ்வித நிபந்தனைகளும் அற்ற வகையில் - வகுப்புத் தடை நீக்கப்பட்டுள்ளது என நிர்வாகக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த மாணவர்களின் பெற்றோரது வேண்டுகோளுக்கமைய அவர்களுடைய உடல் உள நலத்தைக் கருத்திற்கொண்டே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என பல்கலைக்கழக ஊடகப் பேச்சாளர் கலாநிதி பிரணீத் அபயசுந்தர வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சீனாவின் ஒன்றிணைந்த மகளிர் அமைப்பின் அழைப்பை ஏற்று சீனாவுக்குச் சென்றுள்ள முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் மாலை பீஜிங் நகரில் பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

## தேசத்துக்கு மகுடம் ஆரம்ப வைபவம்

(கொழும்பு)

தேசத்திற்கு மகுடம் -2014 ஆரம்ப வைபவம் நாளை மு.ப 10.00 மணிக்கு வெலிகம - கொட்டவிலவத்தையில் ஆரம்பித்து வைக்கப்படும்.

அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி. நாமல் ராஜபக்ஷ இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பெயர் பலகையை திரை நீக்கம் செய்து வைப்பதோடு கண்காட்சிக் கூடத்திற்கான அடிக்கல்லையும் நாட்டி வைப்பார்.

## இளைஞர்களின் கைகளில் ஆயுதங்களைக் கொடுக்க மாட்டோம்

### நாமல் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

நாம் இளைஞர்களின் கைகளில் ஆயுதங்களைக் கொடுக்க மாட்டோம் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.


ஏனைய கட்சிகளைப் போன்று இளைஞர்களுக்கு ஆயுதங்களை வழங்கி அவர்களை அணி திரட்டப் போவதில்லை. இளைஞர்களை ஒன்றிணைத்து சுபீட்சமான ஓர் சமூகத்தை கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.


எதிர் வரும் தேர்தலை இலக்கு வைத்து நாம் அரசியல் கூட்டம் நடாத்தவில்லை.


1989-90களில் சில அரசியல்வாதிகள் இளைஞர்கள் கைகளில் ஆயுதங்களை வழங்கினர். மேலும் சில அரசியல்வாதிகள் இளைஞர் யுவதிகளை போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு பயன்படுத்திக்கொண்டனர்.

எனினும், எமது நீலப்படைத் திட்டத்தின் கீழ் இளைஞர்கள் அபிவிருத்திப் பணிகளில் நேரடியாக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

எமது கட்சியிடம் ஆயுதங்கள் கிடையாது, இளைஞர் யுவதிகள் ஆயுதங்களைப் பயன்படுத்த அனுமதிக்க மாட்டோம் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கல்கமுவ பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.





2011/2013 கல்வி ஆண்டுக்கான டிப்ளோமாதாரிகள் 2,808 பேருக்கு நேற்று முன்தினம் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தலைமையில், கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் இந்த நியமனங்கள் வழங்கப்படுவதைக் காணலாம்

## ஐக்கிய தேசியக் கட்சி ஊவா தேர்தலில் தோல்வியுறும்

### அமைச்சர் அனுரபிரியதர்ஷன யப்பா தெரிவிப்பு

ஊவா மாகாண சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வியை சந்திக்கும் என அமைச்சர் அனுர பிரயதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

மொனராகலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் மாறிவிட்டார்கள் என்று ஐக்கிய தேசிய கட்சிக்குத் தெரியவில்லை.

அவ்வாறு அவரகள் தெரிந்து கொள்ளாமையே அவர்களின் தோல்விக்கான காரணம் மக்களைப் புரிந்து கொள்ளாதவரையில் அவர்களது தோல்வி தொடரும் என்றார்.

## 10 ஆயிரம் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பயிற்சிகள்

(கொழும்பு)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையுடன் இணைந்து ஓராக்கள் கோர்ப்பரேஷன் சிங்கப்பூர் லிமிடெட், கணனி விஞ்ஞான திட்டத்தை அறிமுகம் செய்வதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை நாடு முழுவதும் மேம்படுத்தப்பட்ட கணனி விஞ்ஞான நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

இந்த உடன்படிக்கைக்கு அமைவாக எதிர்வரும் இரு ஆண்டுகளில் 10,000 மாணவர்களைத் தயார்ப்படுத்தும் வகையில் நாடு முழுவதிலும் காணப்படும் 70 தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் தகவல் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை அதிகரித்துச் செல்லும் உயர் ஆளுமை வாய்ந்த ஊழியர்களுக்கான கேள்வியை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்திருக்கும்.

# பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கும் தரவன் கோட்டைகுடியிருப்பு மக்கள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் தரவன்கோட்டை குடியிருப்பு பகுதிகளில் வாழும் 50 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் உவர்புழுதி படலங்களினால் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிலம் உவராக சகதியாகவும் காணப்படுவதுடன் மழைகாலங்களில் இது மேலும் சகதியாக காணப்படுகிறது இதனால் தாம் கஷ்டத்துக்குள்ளாவதாகவும் அத்துடன் அடிப்படை வசதிகள் இல்லாமல் தாம் கஷ்டப்படுவதாக்வும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். குறிப்பாக குடிநீர், போக்குவரத்து வசதிகள் சீரற்றதாக காணப்படுவதுடன் பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர செயற்பாடுகளை மேற்கொள்வோர் நடந்தும் பணம் செலவழித்து வாகனங்களிலும் செல்ல வேண்டிய நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இவற்றைதவிர கழுதைகளும் இப் பகுதியில் பெருவாரியாக காணபபடுவதாகவும் தெரிவிக்கும் மக்கள் கழுதைகளின் தொல்லையால் தாம் அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். (140)

# ஆளுநரைச் சந்தித்தனர் சிறுவர் இல்ல சிறார்கள்



கல்விச் சுற்றுலா மேற்கொண்டிருந்த சிறுவர் இல்லங்களின் சிறார்கள் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இந்நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவிலுள்ள புனித பூமி, பாரதி மற்றும் கிளிநொச்சியிலுள்ள செஞ்சோலை ஆகிய சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த சிறுவர்களே தமது கல்விச் சுற்றுலாவின் ஒரு அங்கமாக வட மாகாண ஆளுநரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இதன் போது ஆளுநரால் சிறுவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது.

ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், சிறுவர் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் ரி.விஸ்வரூபன் ஆகியோரும இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# இறுவட்டுவெளியீடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கிழக்கு சம்பாவெளி வீரகத்தி விநாயகர் மீது பாடப்பெற்ற வீரகத்தி விநாயகர் இசைப்பாடல் இறுவட்டும் சித்திரத்தேர் சிறப்பு மலர் வெளியீடும் தேர் வெள்ளோட்ட நிகழ்வும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளன.

வேதாகம சிரோண்மணி பிரம்மஸ்ரீ தே.கௌரிசங்கர்குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆலய பரிபாலசபைத் தலைவர் ச.சீவரத்தினம், வைத்தியகலாநிதி ஆறுமுகம், செல்வி.கலையரசி ஆகியோர் மங்கள விளகேற்றவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி உதவிப்பிரதேச செயலர் செல்வி நிரஞ்சனா நவரட்ண கலந்து கொள்ளவுள்ளார். இறுவட்டு வெளியீட்டு ஆசியுரையை ஆலய பிரதம குரு தே.கௌரிசங்கர் வழங்கவுள்ளார். நூலின் முதற் பிரதியை உஷன் கந்தசாமி கோயில் தர்மகர்த்தா கு.விமலதாஸன் வழங்கவுள்ளார். தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு, பாடல் நயப் புரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.அருந்தாகரன் வழங்குவார்.

# போக்குவரத்துக்கு இடையூறாகும் மணல் ஏற்றும் டிப்பர் வாகனம்

(கரணவாய்)

வடமராட்சி புறாப்பொறுக்கி தொடக்கம் மந்திகைச் சந்திவரையுள்ள 750 வீதியூடாகச் செல்லும் டிப்பர் வாகனப் போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்வீதியூடாக காலை 6 மணி முதல் 9 மணி வரை மணல் ஏற்றுவதற்கென டிப்பர் வாகனங்கள் பயணத்தை மேற்கொள்கின்றனர். இந்நிலையில் இவ்நேர இடைவெளிகுள் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள் பயணம் செய்கின்ற நிலையில் டிப்பர் வாகனங்கள் செல்வதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

மேலும் டிப்பர் வாகனங்கள் மண்டான்முள்ளி பாதையூடாக பயணம் செய்வதன் மூலம் விபத்துக்களைத் தடுக்கலாம் எனவும் இது குறித்து உரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர். (18)

# அனுமதி அட்டை வழங்கல்

யாழ்.இந்துக் கல்லூரியில் இவ் வருடம் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

மாணவர்களுக்கான அனுமதி அட்டை இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வழங்கப்பட விருக்கிறது. இவ் வருடம் பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து யாழ்.இந்து மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (48)

ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர் தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்...

10.07.2014




- வடக்கில் ஆயுதம் கேட்கும் புலிகள்
- ரமபோஷா சாதிப்பாரா?
- மோடியின் 100 நாட்கள்...
- பறப்பதைப் பிடிக்க நினைக்கும் கூட்டமைப்பு



உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

நன்றாக இருந்திருக்கும்

சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

# ஆர்ஜன்ரீனா, நெதர்லாந்து அரையிறுதியில் இன்று பலப்பரீட்சை




உலகக் கிண்ண கால் பந்தாட்டத்திற்கான முதலாவது அரை இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற அணி எது என்று தெரிந்துவிட்ட நிலையில், இரண்டாவது அரை இறுதிப்போட்டி இன்று புதன்கிழமை (இலங்கை நேரப்படி வியாழன் அதிகாலை 1.30 மணி) ஆர்ஜன்ரீனா, நெதர்லாந்து அணிகளுக்கிடையே நடைபெறுகின்றது. ஆர்ஜன்ரீனா இரண்டு தடவைகள் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளதும், நெதர்லாந்து மூன்று தடவைகள் உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் விளையாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. 1974இல் இரண்டாவது சுற்றில் ஆர்ஜன்ரீனாவை 2 - 1 கோல் கணக்கில் நெதர்லாந்து வீழ்த்தியது.பதிலுக்கு 1978 உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனா 3 - 1 கோல் கணக்கில் நெதர்லாந்து அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது. 2002இல் நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் ஆர்ஜன்ரீனாவை 2 - 1 கோல் கணக்கில் நெதர்லாந்து வீழ்த்தியிருந்தது இறுதியாக, 2006 உலகக் கிண்ணப் போட்டியில், ஒரே குழுவில் இடம்பெற்ற இரு அணிகளும் கோல் அடிக்காமையால் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டு அணிகளும் முதலாவது சுற்றில் தங்களது குழுக்களில் தலா 9 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பிடித்திருந்தன. குழு நிலைப் போட்டிகளில் நெதர்லாந்து அணி10 கோல்களையும் ஆர்ஜன்ரீனா அணி 6 கோல்களையும் அடித்ததுடன் தலா 3 கோல்களையும் விட்டிருந்தன. அடுத்தடுத்த போட்டிகளில் 2 கோல்களை நெதர்லாந்தும் 2 கோல்களை ஆர்ஜன்ரீனாவும் அடித்துள்ளதுடன், நெதர்லாந்து 1 கோலையும் விட்டுள்ளது. நெதர்லாந்து அணியில் 7 பேரும்ஆர்ஜன்ரீனா அணியில் 5 பேரும் கோல்கள் அடித்துள்ளனர். ஆர்ஜன்ரீனா அணித்தலைவர் லயனல் மெஸ்ஸி 4 கோல்களையும்,நெதர்லாந்து அணித்தலைவர் றொபின் வான் பேசி,அர்ஜன் றொபின் ஆகியோர் தலா 3 கோல்களையும் அடித்துள்ளனர்.

2010 உலகக் கிண்ண சம்பியனான ஸ்பெயின் அணியை எதிர்த்து நெதர்லாந்து ஆடிய முதலாவது ஆட்டத்தில் நெதர்லாந்து 5 - 1 கணக்கில் வெற்றி பெற்றது மட்டுமல்லாமல், பின் புறமிருந்து வந்த பந்தை,தண்டப் பரப்பிற்கு வெளியே நின்று, அதன் அணித்தலைவர் வான் பேசி, பறந்து, தலையால் அடித்த கோலும் கால்பந்தாட்ட வரலாற்றில் சாதனைகளாகும். நெதர்லாந்து - கொஸ்ராறிக்கா கால் இறுதிப் போட்டியின்போது, மேலதிக 30 நிமிடத்திலும்கூட எந்த அணியும் கோல்போடாத நிலையில், 30 வது நிமிடத்தில் நெதர்லாந்து அணியின் பயிற்சியாளர் லூயி வன் கால் தமதுகோல்காப்பாளரை மாற்றம்செய்து வி்ப் பரீட்சையில் வெற்றிகண்டார். இது பலரது விமர்சனத்துக்குள்ளானாலும், 1974இலிருந்து உலகக் கிண்ணத்தை நெருங்கிவரும் நெதர்லாந்துக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

நடைபெற்று முடிந்த தலா 5 போட்டிகளில், பந்தைத் தமது அணிவசம் வைத்திருப்பதிலும், கோல் கம்பத்தை நோக்கிப் பந்தை அடிப்பதிலும் ஆர்ஜன்ரீனாவே முன்னிலை வகிக்கிறது. எதிரணியினர் மீது குற்றம் புரிவதில் நெதர்லாந்து அணியானது ஆர்ஜன்ரீனாவிலும் பார்க்க இரண்டு மடங்காக உள்ளது. இரண்டு அணிகளின் கோல் காப்பாளர்களும் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் மிகவும் அபாரமாக ஆடியுள்ளார்கள். இரண்டு அணிகளும் சம பலம் கொண்டவையானாலும் மைதானத்தில் பெரும்பாலான பார்வையாளர்களின் ஆதரவு ஆர்ஜன்ரீனாவின் பக்கமே இருக்கும்.உலக கால்பந்தாட்ட நாயகன் மெஸ்ஸி,கொலம்பிய வீரர் றொட்றிகஸ் அடித்த 6 கோல்களிலும் பார்க்க,தாம் அதிக கோல்கள் அடித்து சாதனை படைக்கவேண்டும் என்பதற்காக மிகக் கடுமையாக முயற்சிசெய்வார் என்பதில் சந்தேகமில்லை. சர்வதேச தரப்படுத்தலில் முதலாம் இடத்திலிந்த ஸ்பெயின் அணியை வெற்றிகண்ட நெதர்லாந்துக்கு, 5ஆம் இடத்திலுள்ள ஆர்ஜன்ரீனா ஒரு சவாலா? எனவும் அபிப்பிராயம் உண்டு. மொத்தத்தில் இன்றைய போட்டி மிக விறுவிறுப்பாகவும், இரசிகர்களுக்கு விருந்தாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.



**எஸ். அன்ரனிப்பிள்ளை கிளிபேட்**

தலைவர்: யாழ். 'கால்பந்தாட்ட லீக்

## கொலம்பியா அணிக்கு உற்சாக வரவேற்பு

உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி வரை முன்னேறிய உற்சாகத்துடன் தாயகம் திரும்பிய கொலம்பிய வீரர்களுக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் 1962 இல் முதன்முறையாக பங்கேற்றது கொலம்பிய அணி. இதில் முதல் சுற்றுடன் திரும்பியது. பின் 1990இல் மீண்டும் பங்கேற்ற கொலம்பியா, ரவுண்ட்-16 வரை சென்றது. 1994, 1998இல் லீக் சுற்றுடன் நடையை கட்டியது.

16 ஆண்டுகளுக்குப் பின், மறுபடியும் பங்கேற்ற இந்த அணி, இம்முறை கிரீஸ் (3-0), ஐவரி கோஸ்ட் (2-1), ஜப்பான் (4-1) அணிகளை சாய்த்து, ரவுண்ட்-16 போட்டியில் உருகுவேயை (2-0) வீழ்த்தியது.

இதனையடுத்து, உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் முதன் முறையாக காலிறுதிக்கு முன்னேறி வரலாறு படைத்தது. தவிர, கொலம்பிய அணியின் சிறப்பான செயற்பாடு காரணமாக, 5ஆவது இடத்தைப் பெற்று அசத்தியது. கடந்த 1994இல் அமெரிக்காவில் நடந்த தொடரில், சேம் சைட் கோல் அடித்ததன் காரணமாக, கொலம்பிய வீரர் எஸ்கோபர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் பின், இங்கு கால்பந்து வளர்ச்சி மெல்ல மெல்லச் சரிந்தது. இப்போது இளம் வீரர் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் அசத்தலால், மீண்டும் புத்துயிர் பெற, கொலம்பியாவில் ஒரே கொண்டாட்ட மயமாக உள்ளது. இத்தொடரில் அதிக கோல் அடித்த வீரர்களில் முதலிடம் பெற்றுள்ள ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் (6 கோல்), கோல்டன் பூட் விருதுக்கான போட்டியில் இன்னமும் முதலிடத்தில் தான் உள்ளார். இதையடுத்து, நாடுதிரும்பிய கொலம்பிய வீரர்கள் திறந்த பஸ்சில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். சாலையின் இருபுறமும் ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்து வரவேற்க, பஸ் மெல்ல ஊர்ந்து தான் செல்ல முடிந்தது. பின் அங்கிருந்த மேடையில் ஏறிய வீரர்கள், உற்சாக மிகுதியில் ஆட்டமும், பாட்டமுமாக கலக்கினர்.




## ரொனால்டோ ஜாலி

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரிலிருந்து போர்த்துக்கல் வெளியேறியதால் கவலையை மறக்க ரொனால்டோ தனது காதலி இரினாவுடன் நேரத்தை செலவிடுகிறார். உலகக்கிண்ண தொடரில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் ரொனால்டோ சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. அதனால் அவர் அணியும் ரவுண்ட் -16இல் தொடரை விட்டு வெளியேறியது. இதனால் மனமுடைந்து போன ரொனரல்டோ தற்போது அந்தக் கவலையை மறக்க தனது காதலி மற்றும் மொடல் அழகியாக உள்ள இரினாவுடன் நேரத்தை செலவிட்டு வருகின்றாராம்.

இந்நிலையில் ரொனால்டோவும் இரினாவும் கைத்தொலைபேசியில் எடுத்துக் கொண்ட புகைப் படத்தை வெளியிட்டுள்ளனர். உலகக்கிண்ண வெளியேற்றம் பற்றி இரினா கூறுகையில், மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் மற்றும் ரொனால்டோ என்ன செய்கிறார் என்பது பற்றி எனக்கு கவலை இல்லை. சிலர் நம்மை விரும்பலாம். சிலர் வெறுக்கலாம். ஆனால் நாம் வலிமையாக இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.


## பிரான்ஸ் வீரர் முதலிடம்

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரின் சிறந்த வீரருக்கான பட்டியலில் பிரான்ஸின் பென்சிமா முதலிடத்தைத் தட்டிச் சென்றார். முன்னணி வீரர்களான மெஸ்சி, முல்லர் போன்ற நட்சத்திரங்கள் இப்பட்டியலில் இடம் பெறாதது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

உலகக் கிண்ணக் கால்பந்து தொடரில் சிறந்து விளங்கும் வீரர்கள் குறித்து ஒவ்வொரு சுற்று முடிவிலும் ஆய்வு செய்யப்படுகிறது. இதற்கு நவீன தொழில்நுட்பம் மூலம் வீரர்களின் அனைத்து புள்ளி விபரங்களும் சேகரிக்கப்படும். பந்தை எப்படி பரிமாறுதல், கோல் அடித்த விதம், கோல் அடிக்க உதவியது, அணிக்குச் சாதகமாக செயற்பட்டாரா என்பது போன்றவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். காலிறுதி பேர்ட்டிகள் வரையிலான கணக்கெடுப்பில் பென்சிமா முதலிடம் பிடித்தார். இவர் 10இற்கு 9.79 புள்ளி பெற்றார். சிறந்த முன்கள வீரரான இவர், மொத்தம் 3 கோல்களை அடித்தார். ஹேறாண்டுரொஸ் (2 கோல்), சுவிட்சர்லாந்துக்கு (1) எதிராக அசத்திய போதும், ஈகுவடோர்,நைஜீரியா, ஜேர்மனிக்கு எதிராக சோபிக்கவில்லை. அதே நேரத்தில் கொலம்பியாவின் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ் பங்கேற்ற 5 போட்டிகளிலும் குறைந்தது ஒரு கோல் என, மொத்தம் 6 கோல்கள் அடித்தார். இவருக்கு இரண்டாவது (9.74 புள்ளி) இடமே கொடுக்கப்பட்டுள்ளது. 4 கோல் அடித்த பிரேசிலின் நெய்மர் (9.53) 8ஆவது இடத்தில் உள்ளார். 3 கோல்கள் அடித்த நெதர்லாந்தின் ரொபன் (9.59) 6ஆவது இடத்தில் இருக்கிறார்.

காலிறுதி வரை அசத்திய ஜேர்மனியின் தோமஸ் முல்லர் (4 கோல்), ஆர்ஜன்ரீனாவின் மெஸ்சி (4 கோல்) ஆகியோர் முதல் பத்து வீரர்களுக்குள் இடம் பெறாதது ஏமாற்றம் தான். இத்தொடரின் முடிவில் வெளியிடப்படும் இறுதி பட்டியலில், சர்ச்சைக்கு இடம் அளிக்காத வகையில் சிறந்த வீரர்களை சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) தேர்வு செய்ய வேண்டும் என்பதே இரசிகர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

# மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா கிண்ணம் வென்றது கரைச்சிப் பிரதேசம்





கிளிநொச்சி மாவட்ட இளைஞர் விளையாட்டு விழாவின் வெற்றிக் கிண்ணத்தை கரைச்சிப் பிரதேச செயலகம் கைப் பற்றிக் கொண்டது.


கிளிநொச்சி மாவட்டத்தின் 26ஆவது மாவட்ட இளைஞர் விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய மாகவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட இளைஞர்கள் கழகங்களைச் சேர்ந்த வீர,வீராங்கனைகள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

புள்ளிகள் அடிப்படையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவு முதலாம் இடத்தையும் பூநகரி அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப் பினர் சந்திரகுமார், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் சரத்சந்திரபால, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய சம்மேளனத் தின் பொருளாளர் இசங்க சதுரங்க, கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலைய உதவி பொலிஸ் பரிசோதகர் பெரேரா, இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் திட்ட முகாமையாளர் வேல்குமார், முல்லைத்தீவு மாவட்டத்தின் இளைஞர் சேவை அதிகாரி சறோஜா, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளி நொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெயவீர தென்னக் கோன் மற்றும் விளையாட்டு வீரர்கள், விளையாட்டு கழக உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## கோப்பாயின் சாதனை வீரன்



(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வீரர் இ. இசைவாணன் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார்.

யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடை யிலான தடகளப் போட்டியில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றே இவர் தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார். இவர் இப்போட்டியில் 11.43 தூரம் எறிந்து மாகாண மட்டத்தில் சாதனையை முறியடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் தட்டெறி தல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை இசைவாணன் கைப்பற்றிக் கொண்டமை யும் குறிப்பிடத்தக்கது.

தேசிய போட்டியில் பதக்கம் வெல் லும் வாய்ப்பு இசைவாணனுக்கு நிச்ச யம் உண்டு. தேசியப் போட்டி அவர் சாதிக்க வேண்டும் என பாடசாலைச் சமூ கம் பிரார்த்தித்து வருகின்றது. (48)

## பதிவுக்கு முந்துங்கள் கிண்ணத்தை வெல்லுங்கள்

(வடமராட்சி)

வடமராட்சி மாலு சந்தி மைக்கல் விளை யாட்டுக்கழகம் யாழ். மாவட்ட மென் பந்து கிரிக்கெட் அணிகளுக்கிடையில் மாபெரும் மென்பந்து கிரிக்கெட் தொடரை விரைவில் நடாத்தவுள்ளது.

பத்து ஓவர்களைக் கொண்ட இம் மென்பந்து கிரிக்கெட் தொடரில் பங்கு கொள்ள விரும்பும் அணிகளை எதிர் வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். பதிவு-களை மேற்கொள்ள விரும்புவோர் தலை வர் / செயலாளர் மைக்கல் விளையாட் டுக்கழகம் அல்வாய் என்ற முகவரிக்குப் பதிவு செய்யவோ அல்லது 0776690208 அல்லது 0771129379 அல்லது 0779333068 என்ற தொலைபேசி இலக்கங் களுடனோ தொடர்பு கொண்டு பதிவு-களை மேற்கொள்ளவோ முடியும் என வும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியில் கிண்ணத்தை வெல் லும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில் கள் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (11)

## மென்பந்து கிரிக்கெட்டில் கார்மேல் போய்ஸ் சம்பியன்

(ஈச்சமோட்டை)

அலனின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

கிறீங்கிங்ஸ் சனசமூக நிலையத்தினால் நடாத்தப்பட்ட அணிக்கு ஆறு பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. ஐந்து பேர்களைக் கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணியும் போர்ஸ்டார் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய குருநகர் கார்மேல் போய்ஸ் அணி 4.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 37 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மது 15, அலன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அலன், சாந்தன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 38 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய போர்ஸ்டார் அணி 4.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது.

இதில் எந்தவொரு வீரரும் இரட்டை இலக்க எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்ளவில்லை. பந்து வீச்சில் அலன் மூன்று, மது, அஜன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இதன் மூலம் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி 11 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகன், தொடர் நாயகன் விருதை கார்மேல் போய்ஸ் அணியின் அலன் பெற்றுக்கொண்டார். (48)

## காலிறுதியில் ஆவரங்கால் மத்தி

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் மின்னொளியில் நடாத்தி வரும் மாபெரும் கரப் பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு ஆவரங்கால் மத்தி அணி முன்னேறியுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனு சணையுடன் இடம்பெற்று வரும் இப்போட்டித் தொடர் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெற்று வருகின்றது. நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பி பிரிவுக்கான போட்டியில் ஆவரங்கால் மத்தி அணியும் கெருடாவில் விவேகானந்தன் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஆவரங்கால் மத்தி அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் மூன்று போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் பி பிரி வுக்கான காலிறுதிப் போட்டியில் புத்தூர் கலை மதி பி எதிர் சண்டிலிப்பாய் வசந்தசிறி, மீசாலை சீமா எதிர் அச்சுவேலி கலைமகள் அணிகள் மோதவுள்ள அதேவேளை, ஏ பிரிவுக்கான போட்டியில் புத்தூர் கலைமதி ஏ எதிர் அச்சுவேலி ஸ்ரார் அணிகள் மோதவுள்ளன.

## இன்றைய ஆட்டங்கள்

(லண்டன்)

இங்கிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் இன்று நொட்டிங்கொமில் ஆரம்பமாகவுள்ளது. இரு அணி களுமே முதல் போட்டியில் சாதிக்கவேண்டும் என்ற தாகத்துடன் களமிறங்கவுள்ளதால் இப்போட்டித் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும் என கிரிக்கெட் வல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வலுவான அணியை கொண்டிருப்பதால் எந்தச் சவால் களையும் எதிர்கொள்வோம். இங்கிலாந்து அணியுடன் முதல் முறையாக ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் மோதவிருப்பது எங்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தவில்லை. எங்கள் செயற்பாடு களத்தில் வெளிப்படும் என இந்திய அணிக் கப்டன் டோனி தெரி வித்துள்ளார்.

(அம்பாந்தோட்டை)

இலங்கை, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று காலை 10.00 மணிக்கு அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே, நடை பெற்ற முதலாவது போட்டியில் தென்னாபிரக்க அணி வெற்றிபெற்றுள்ளது. இப்போட்டியில் இலங்கை அணி வெற்றியைப் பெற்றுக்கொள்ளவேண்டிய பெரும் நெருக்கடி யில் உள்ளது. இப்போட்டியில் இலங்கை அணி தோல்வி யடையும் பட்சத்தில் தென்னாபிரிக்க அணி தொடரைக் கைப்பற்றிக்கொண்டுவிடும். எனவே, இப்போட்டி விறுவிறுப்பு நிறைந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## இரண்டு வருடப் போட்டித் தடை

வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணிக்கு 2 வருடங்கள் போட்டித் தடையை பருத்தித்துறைக் கால்பந்தாட்ட லீக் விதித்துள்ளது. அத்துடன் வதிரி டயமன்ஸ் அணியின் 2 வீரர்களுக்கு 6 மாதங்களுக்கு போட்டித் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. கால்பந்தாட்டப் போட்டியின் போது கைகலப்பில் ஈடுபட்ட காரணத்தினால் இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக லீக் அறிவித்துள்ளது. வடமராட்சி கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழகம் கடந்த 26ஆம் திகதி நடத்திய கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றில், ஆதிசக்தி அணியை எதிர்த்து டையமன்ஸ் அணி மோதியது. இப்போட்டியில் டயமன்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. போட்டி முடிவடைந்த பின்னர் டயமன்ஸ் அணியின் வீரர்கள் இருவருக்கும் ஆதிசக்தி அணி வீரர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதனால் ஆத்திரம் கொண்ட ஆதிசக்தி வீரர்களும், ஆதரவாளர்களும், டயமன்ஸ் அணி வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினார். இதன் காரணமாக, டயமன்ஸ் அணியின் 4 வீரர்கள் காயங்களுக்குள்ளாகினர். குறித்த தாக்குதல் சம்பவத்தினை பருத்தித்துறைப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கட்டுக்குள் கொண்டு வந்தனர். தொடர்ந்து இது தொடர்பிலான விசாரணைகளை பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக் மேற் கொண்டு வந்தது. விசாரணைகளின் முடிவில் குறித்த கைகலப்புச் சம்பவங்களுடன் தொடர்புடைய டயமன்ஸ் அணியின் 2 வீரர்கள், மற்றும் ஆதிசக்தி அணி ஆகியவற்றிற்கு தடையுத்தரவினைப் பிறப்பிக்க உத்தரவிட்டது.

# புலிகளின் மீறல் சம்பவங்களை முன் வைப்பதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமை ஏற்க வேண்டும்

5

— டி. பி. எஸ். ஜெயராஜ் —

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூனினால் நிறுவப்பட்ட தருஸ்மன் குழுவின் அறிக்கையில் மோதலின் இறுதிக்கட்டத்தின்போது எல்.ரீ.ரீ.ஈ. செய்த சில செயல்களைப் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது.

"மோதல் வலயத்தில் பயங்கர ஆபத்து இருந்ததுக்கு மாறாக, பொதுமக்கள் அந்த இடத்தை விட்டு வெளியேற எல்.ரீ.ரீ.ஈ அனுமதி மறுத்து, அவர்களை பணயக் கைதிகளாகப் பயன்படுத்தியது, சில நேரங்களில் அவர்களின் பிரசன்னத்தை தங்களுக்கும் மற்றும் முன்னேறி வரும் இலங்கை இராணுவத்துக்கும் இடையில் ஒரு மனித தடுப்பு வியூகமாக பயன்படுத்தியுள்ளது.

யுத்த காலம் முழுவதும் கட்டாய ஆட்சேர்ப்பு நடைமுறைப் படுத்தப் பட்டு வந்துள்ளது, ஆனால் இறுதிக் கட்டங்களில் 14 வயதுள்ள இளையவர்கள் உட்பட அனைத்து வயதைச் சேர்ந்தவர்களையும் ஆட்சேர்ப்பு செய்வதை பெருமளவு தீவிரப் படுத்தியது.

எல்.ரீ.ரீ.ஈ. தங்கள் சொந்த பாது காப்புக்கான கிடங்குகளை வெட்டு வதற்கும் மற்றும் வேறு வேலை களுக்கும் பொதுமக்களைக் கட்டாயப் படுத்தி செய்வித்தது, அதன்படி போராளிக்கும் மற்றும் பொதுமக்க ளுக்கும் உள்ள வேறுபாட்டை தெளிவற்றதாக்குவதற்கு பங்களிப்புச் செய்திருப்பதுடன் பொதுமக்களுக்கு கூடுதல் தீங்கினையும் வெளிப்படுத்தி உள்ளனர்.

தோல்வியடையப் போகிறோம் எனத் தெளிவாகத் தெரிந்த ஒரு யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற் காக .இவை அனைத்தும் மேற் கொள்ளப்பட்டன. எல்.ரீ.ரீ.ஈ. விடயத் துக்காகவும் அதன் மூத்த தலை மைத்துவத்தை பாதுகாக்கும் முயற்சிக் காகவும் எல்.ரீ.ரீ.ஈ.யின் பலிபீடத்தில் அநேக பொதுமக்கள் தங்கள் உயிர்களை தியாகம் செய்துள்ளனர்".

"பெப்ரவரி 2009 முதல் மோதல் வலயத்தை விட்டு தப்பியோடும் பொதுமக்கள்மீது எல்.ரீ.ரீ.ஈ தாறுமாறாக துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது, இது இறுதிக்கட்ட போரில் பெதுமக்களின்



Elilan, LTTE Trincomalee district political head, LTTE Trincomalee district commander Vasanthan

இறப்பு எண்ணிக்கையை கணிசமானளவு உயர்த்தியுள்ளது.

பெரும் குழுக்களாக கூடியிருந்த உள்ளக இடம்பெயர்ந்த மக்களின் (ஐ.டி.பி) அருகாமையில் வைத்து அது பீரங்கிச்சூடு நடத்தியுள்ளது அல்லது இராணுவ உபகரணங்களை ஐ.டி.பி. யினரின் அருகில் அல்லது பொதுமக்கள் குழுமும் இடங்களான மருத்துவமனை போன்றவற்றில் களஞ்சியப் படுத்தி வைத்தது.

இறுதிக்கட்ட போர் முழுவதும் மோதல் வலயத்துக்கு வெளியில் எல்.ரீ.ரீ.ஈ அதன் கொள்கையான தற்கொலை தாக்குதல்களை தொடர்ந்து நடத்தியது. அதன் முந்தைய கட்ட மோதல்களுடன் ஒப்பிடுகையில் இத்த கைய தாக்குதல்களை நடத்தும் அதன் திறன் குறைவாக இருந்தபோதும், மோதல் வலயத்துக்கு வெளியில் உள்ள பொதுமக்கள்மீது சில எண்ணிக்கையான இத்தகைய சில தாக்குதல்களை அது நடத்தியிருந்தது."

தருஸ்மன் குழு அறிக்கையின் நிறைவேற்றுச் சுருக்கம் ஆறு முக்கியவகை மீறல் குற்றச்சாட்டுகளை எல்.ரீ.ரீ.ஈக்கு எதிராக பட்டியல் இட்டுள்ளது. அதன் எடுத்தாள்கை கீழே தரப்பட்டுள்ளது -

"இறுதிக் கட்ட போருடன் தொடர்பு டைய எல்.ரீ.ரீ.ஈ. மீறல் சம்பந்தமான நம்பகமான சில குற்றச்சாட்டுகள் எல். ரீ.ரீ.ஈ.க்கு எதிராக உள்ளதாக இந்த குழு தீர்மானித்துள்ளது, வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய ஆறு முக்கிய வகையான சாத்தியமான தீவிர மீறல்கள்:

1. பொதுமக்களை மனித தடையாக பயன்படுத்தியது

2. எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து வெளிறே முயன்ற பொதுமக்களை கொன்றது

3. பொதுமக்களின் அருகில் இராணுவ உபகரணங்களை பயன்படுத்தியது

4. சிறுவர்களை கட்டாயமாக படைக்கு ஆட்சேர்ப்பு செய்தது

5. கட்டாய வேலை மற்றும்......

6. தற்கொலை தாக்குதல் மூலம் பொதுமக்களை கொன்றது.

மேலே குறிப்பிட்டவைகளில் இருந்து இறுதிக்கட்ட போரின்போது தமிழ் பொதுமக்களுக்கு எதிராக எல்.ரீ.ரீ.ஈ. புரிந்துள்ள செயற்பாடுகள் பற்றி விசாரணை செய்ய அதிகம் இடம் இருக்கிறது என்பதற்கான தெளிவுகள் அப்பட்டமாகத் தெரிகின்றன.

வெளிச் சக்திகளால் தமிழர்களுக்கு நீண்டகாலமாக இழைக்கப்பட்ட தீமைகள் பற்றி பேசிவரும் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களும் மற்றும் கருத்து தெரிவிப்பவர்களும், இப்போது அவர்களுக்குள் இருக்கும் தீமைகளின் பக்கம் திரும்ப வேண்டும்.

ரி.என்.ஏ. தலைவர் என்ற வகையில் சம்பந்தன் பாரளுமன்றத்தில் தெளிவாகச் சொல்லியிருப்பது "தங்களின் சொந்தப் பெயரில் நடத்தப்பட்ட குற்றங்களைப் பற்றி தமிழ் மக்கள் தமக்குள்ளேயே ஒரு சுய பரிசோதனை செய்யவேண்டும்" என்று.

இதைப்பற்றி ஒருவர் என்ன சொல்ல முடியும்? ஐ.நா. விசாரணையால் வழங்கப் பட்டுள்ள இந்த வாய்ப்பினை சுய பரிசோதனை செய்வதற்காக உட்புறமாக திருப்பி தேடல் நடத்த எவ்வாறு பயன்படுத்தலாம்?

உண்மையில் இது விரும்பத்தகாத ஒரு பணி ஆனால் திரும்பவும் இலங்கைத் தமிழ் மக்களின் அங்கீகரிக் கப்பட்ட அரசியல் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த சுமையை தங்கள் தோள்களில் ஏற்றி இதற்கு தலைமையேற்க வேண்டும்.

கோழிகளைப்போல கொக்கரிக்கவோ அல்லது வான்கோழிகளைப் போல களகளக்கவோ செய்வதை விடுத்து. முக்கியமான சாட்சிகளை ஐ.நா. விசா ரணை குழு முன்னிலையில் அரசாங்க மீறல்களைப் பற்றி சாட்சியமளிப்பதற்காக அனுப்புவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும், எல்.ரீ.ரீ.ஈ.யின் பங்களிப்பையும் மற்றும் அதன் நடத்தையும் சுய பரிசோதனை செய்யும் முயற்சிக்கு ரி.என்.ஏ முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(தொடரும்)

# பெரியவர்களின் இலட்சணம்!



நடைப்பயிற்சி மேற்கொண்ட போது, தெருவில் கிடந்த பஞ்சை எடுத்து, பத்திரப்படுத்தச் சொல்லி, மறுநாள் அதை ஞாபகமாக வாங்கி, ராட்டையில் நூல் நூற்பதற்கு காந்தி பயன்படுத்திக் கொண்டார் என்ற நிகழ்ச்சி பிரசித்தமானது. எவ்வளவுதான் அற்ப பொருளாயிருந்தாலும், மனிதனின் உழைப்பு அதில், இருக்கிறது. அதை மதிக்க வேண்டும் என்பது தான், இதன் கருத்து.

பிரான்ஸ் நாட்டில் நடந்த, ஒரு சம்பவம்:

வறுமையில் உழலும் ஒரு சிறுவன், வேலை தேடி ஒரு நிறுவனத்திற்குப் போனான். அதன் நிர்வாகி வேலை இல்லை என்று கூறி, கையை விரித்தார். சிறுவன் திரும்பிப் போகும் போது, வாசலைக் கடந்தவன், குனிந்து, கீழே கிடந்த எதையோ எடுத்தான்.

தற்செயலாக, அதைப் பார்த்த நிர்வாகிக்கு, "எதை எடுத்தான்... நிறுவனத்துக்குச் சொந்தமான விலையு யர்ந்த பொருளாக இருக்குமோ..." என, சந்தேகப்பட்டு, கூப்பிட்டு விசாரித்தார்.

அவன் எடுத்துக் காண்பித்தான் அவர் உள்ளம் நெகிழ்ந்தது.

அற்பத்திலும் அற்பமான குண்டூசி. அதை மதித்து, சட்டையில் குத்திக் கொண்டான். அந்தப் பையனுக்கு, வேலை தரப்பட்டது.

அந்தச் சிறுவன்தான் பிற்காலத்தில், வங்கியாளர்களில், பெரிய கோடீசுவரராகத் திகழ்ந்த பைலட்!

# டாக்சி டாக்சி...!

அமெரிக்காவில் உள்ள சிகாகோ மாநிலத்தில், 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட டாக்சி ட்ரைவர்கள் உள்ளனர். அவர்களில் சரி பாதி, இந்தியர்களாம்! மீதிப் பாதியில், பாகிஸ்தானியர்களும், தெற்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களும் தான் கணிசமாக உள்ளனர் என அமெரிக்க வார இதழ் ஒன்று தெரிவிக்கிறது.

எல்லா செலவும் போக, வாரத்திற்கு 500 டொலர் (சுமார் 65 ஆயிரம் ரூபா) வரை, சம்பாதிக்கின்றனராம்! இவர்கள், பொதுவாக சொந்தமாக டாக்சி வாங்கி ஓட்டுவதில்லை; வாடகைக்கு எடுத்து ஓட்டுகின்றனர். வார வாடகை, 250 முதல். 270 டொலர்.

இந்த டாக்சி ட்ரைவர்களில் பலருக்கு, ஆங்கிலம் பேசத் தெரியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவைச் சேர்ந்த முபீன் ஹுசைன் என்பவர், பல்கலைக் கழகத்தில், எம்.பி.ஏ. பட்டம் பெற்றவர். தற்போது டாக்சி ஓட்டுகிறார். இவரைப் போன்ற பல டாக்சி ட்ரைவர்கள் இருக்கின்றனர்

"எம்.பி.ஏ., படித்த நீங்கள், நல்ல உத்தியோகம் பார்க்கலாமே..." என கேட்டால், "படித்து முடித்த உடன், ஒரு வங்கியில் வேலை கிடைத்தது. ஆறு மாதம் வேலை செய்தேன். காலை, 9:00 மணி முதல் மாலை, 5:00 மணி வரை திரும்பத் திரும்ப கூட்டுவது, கழிப்பது, பெருக்குவது... சே... அந்த வேலை எனக்கு ஒத்து வரவில்லை. இந்தத் தொழிலில் நேரம், காலம் கிடையாது. நினைத்த நேரத்தில் வண்டியை எடுக்கலாம், நிறுத்தலாம்..." என்கிறார்.

வெள்ளைக்காரர்கள் அதிக ஆர்வம் காட்டாத, டாக்சி ட்ரைவர், பஸ் ட்ரைவர். நடத்துனர், லொறி ட்ரைவர் போன்ற வேலைகளில், ஆசியர்கள் நுழைந்து. பெருகி வருகின்றனர் எனக் குறிப்பிடுகிறது அக்கட்டுரை.



# விளங்கிக் கொள்ளாவிட்டால், விலகிக் கொள்ளட்டும்!!

பெருமரம் சரிந்து விழும் போது வீராதிவீரன் வாத்தியார் வந்து முதுகைக் கொடுத்து மரத்தை தூக்கி நிறுத்தி மக்களைக் காப்பாற்றுவார். விசிலடித்து அவர் வீரம் விதந்து தமிழ்நாட்டினது முதலமைச்சர் பதவியையே தூக்கி அவரின் பாதத்திற்கு காணிக்கையாக்குவோம்.

கண் தெரியாத தங்கச்சி மேல் கார் மோதி இரத்த வெள்ளத்தில் துடித்துக் கொண்டிருப்பார். (தங்கச்சியின் பெயர் அனேகமான படங்களில் சாந்தி என்று இருக்கும்). அண்ணன் சிவாஜி ஓடி வந்து ஒரு வயதில் தங்கச்சிக்கு தாலாட்டு பாடினது, இரண்டு வயதில் கை பிடித்து நடை பழக்கியது, மூன்று வயதில் மூக்கு துடைத்து விட்டது என்று மூச்சு இரைக்க இரைக்க அரைமணி நேரத்திற்கு அழுது புலம்புவார்.

ஏற்கனேவே பாதி உயிர் போயிருக்கும் தங்கச்சி சிவாஜியின் முகத்தை குளோஸ் அப்பில் பார்த்த அதிர்ச்சியில் மீதி உயிரையும் விடுவார். "இவனல்லோ நடிகன்" என்று கண்ணைக் கசக்கியபடி தமிழின் தலை சிறந்த நடிகன் என்ற பட்டத்தைக் கொடுப்போம்.

தமிழ்ப்பெண் என்று காட்சிப்படுத்தப்படும் தமிழ்ப்படக் கதாநாயகி ஜப்பானிய சுமோ வீரன் எதிராளியோடு போய் மோதுவது போல, கதாநாய கனை பெருமார்பு கொண்டு மோதுவது தமிழ்ப்பெண்ணின் காதலாக காட்டப்படும். எந்த நேரமும் மாமா என்றோ, மச்சான் என்றோ அசடு வழிந்து கொண்டு ஆணின் பின்னால் திரிந்து அவனிடம் காதல் பிச்சை கேட்பது தான் தமிழ்ச்சினிமாவில் காட்டப்படும், தமிழ்ப்பெண்ணின் வாழ்வின் இலட்சியம் என்று கொச்சைப்படுத்துவார்கள்.

அண்ணன் அட்டைக்கத்தியால் போட்ட சண்டைக்கு முதலமைச்சர் ஆக்கியவர்கள், அண்ணி அண்ணனோடு போட்ட சுமோ சண்டைக்காக அண்ணியையும் முதலமைசர் ஆக்கி நன்றிக்கடன் தீர்த்தோம்.

உழைக்கும் மக்களின் பெயர்களான சங்கிலி, மாடசாமி போன்ற பெயர்கள் கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு செய்யும் கொடூர வில்லன் நடிகர்களிற்கு வைக்கப்படும். சிவப்பான கதாநாயகர்களிடம் இந்த கறுப்புத்தமிழர்கள் அடிவாங்கி சாவார்கள்.

இப்படி தமிழரை தமிழ் வாழ்க்கையை கேவலப் படுத்தும், கொச்சைப்படுத்தும் தமிழ்சினிமாவை பார்க்கும் போது நமது "தமிழ் உணர்வாளர்களின்" மீசை துடிப்பதில்லை. இப்படி கேவலப்படுத்தும் நடிகர்களையோ இயக்குநர்களையோ உணர்வாளர்கள் கேள்வி கேட்பதில்லை. தமிழ்ப்படம் என்னும் கேலிக்கூத்தின் தரம் பற்றி இவர்களிற்கு கவலை பிறப்பதில்லை.

பிரசன்ன விதானகே என்னும் கலைஞன், இலங்கையின் முற்போக்கு சக்திகளின் ஆதர வாளன், இலங்கைத் தமிழ்மக்களின் துயரங்களை, சிங்கள மக்களின் வறுமையை, இலங்கை ஆளும் வர்க்கத்தினரின் அநியாயங்களை தன் படைப்பு மூலம் யதார்த்தமாக கலையழகுடன் பேசுவது இவர்களிற்கு பிரச்சினையாக இருக்கிறது.

பிரசன்ன விதானகே வணிக சினிமா எடுத்து தன் வாழ்வை வளமாக்கியிருக்கலாம். இலங்கை அரசாங்கத்திற்கு பிரச்சினை ஏற்படுத்தாத படங்களை எடுத்திருக்கலாம். ஆனால் அவர் ஒரு உண்மையைச் பேசுகின்ற கலைஞன். அதனால் அவரின் படங்கள் அவருக்கும், அவரின் தயாரிப் பாளர்களிற்கும் நட்டத்தையும், நெருக்கடிகளை யுமே கொடுத்திருக்கின்றன. அவரின் படங்கள் இலங்கையில் தடை செய்யப்பட்டன. பின்பு வழக்கு வைத்து தடையை விலக்கிக் கொண்டார். "பிறகு" திரைப்படம் ஒரு சில முறைகள் மட்டுமே இலங்கையில் திரையிடப்பட்டது.

இப்படியான ஒரு கலைஞனையும் அவனது படத்தையும் தான் இலங்கை அரசிற்கு சார்பானது என்று அவதூறு சொல்கிறார்கள். இதிலே இந்தப் படம் உலகத்தரத்திற்கு இல்லை என்று காமெடி வேறு பண்ணுகிறார்கள்.

கமல் சார், ரஜினி சார், சங்கர் சார் என்று அப்பட்டமான வியாபாரிகளை தூக்கிப் பிடிப்பவர்கள் கலை என்பது கடுகளவு கூட இல்லாத படங்களை பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக பாராட்டி எழுதுபவர்கள், தரம் பற்றி பேசுகிறார்கள்.

புதிய தலைமுறை நிகழ்ச்சியில் பேசிய நாம் தமிழர் அமைப்பைச் சேர்ந்தவர் "பிறகு" திரைப்படத்தின் தரத்தைப் பற்றி பேசியது தான் இந்த வருடத்தின் கண்றாவி காமெடியாக இருந்தது. முதலில் நாம் தமிழரின் தலைவர் சீமானை குறைந்தபட்சம் ஒரு மலையாளப்படத்தின் தரத்திற்காவது ஒரு படத்தை எடுக்கச் சொல்லி விட்டு பின்பு மற்றவர்களை தரமாக படம் எடுப்பது எப்படி என்று பாடம் நடத்தலாம்.

தன் திரைப்படமொழி மூலம் இனப்பிரச்சினை தமிழ், சிங்கள மக்களின் உறவுகள் பற்றி பேசிய பிரசன்ன விதானகேயிடம் இனப்படுகொலை பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று இவர்கள் கேள்வி கேட்கிறார்கள். பிரசன்ன விதானகே என்ன இலங்கை அரசின் பிரதிநிதியா?




பிரசன்ன விதானகே மறுமொழி சொல்வது ஒருபக்கம் இருக்கட்டும். இலங்கைத் தமிழ் அகதிகளை முகாமில் அடைத்து வைத்திருக்கும் ஜெயலலிதாவிடம் அகதிகளை ஏன் அடைத்து வைத்திருக்கிறீர்கள் என்று எப்போதாவது கேட்டிருக்கிறார்களா?

சிங்களவர் எடுத்த படம், சிங்களமொழிப் படம் என்று பச்சையான இனவாதம் பேசுகிறார்கள். பிரசன்ன விதானகே சிங்கள உணர்வாளர் என்ற நிலையில் இருந்து என்றைக்குமே படம் எடுத்ததில்லை. மனிதாபிமானத்தையும், யதார்த்தத்தையும் பேசிய படைப்புக்கள் அவருடையவை.

இலங்கையின் மக்கள் அடக்குமுறைகளிருந்து விடுபட முன்னுள்ள ஒரேவழி ஒடுக்கப்படும் மக்களின் ஒன்றிணைவு மட்டுமே. பிரசன்ன விதானகே போன்ற கலைஞர்களின் படைப்புக்கள் பொதுமக்கள் முன் ஒற்றுமைக்கான தேவையை பேசுகின்றன. தமிழ்மக்களின் மேல் அக்கறை கொண்டவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இவற்றை விளங்கிக் கொள்ள வேண்டும். விளங்கிக் கொள்ளாவிட்டால் விலகிக் கொள்ளட்டும்.

**(நன்றி: புதிய ஜனநாயக மக்கள் முன்னணி)**

# மனித உரிமை ஓர் மெய்யியல் நோக்கு

ஆர். நிலக்ஷன்
மெய்யியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்.




நவீன அரசுகளில் மனிதனின் நல்வாழ்வுக்கு உரிமைகளே அடிப்படையாக விளங்குகின்றன. அதிலும் பொதுவாக எந்த ஒரு மனிதனும் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் தன் வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்ளவும் அவனுக்கு உரிமைகள் தேவைப்படுகின்றன.

மனித உரிமை என்பது மனித னாகப் பிறந்த எல்லோரிற்கும் உரித்தான அடிப்படை உரிமைக ளும் சுதந்திரங்களுமாகும். இந்த உரிமைகள் மனிதர்கள் மனிதர்க ளாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்கு கிடைத்த அடிப்படை யான, விட்டுக்கொடுக்க இயலாத, மறுக்க முடியாத உபகரணங்களாக கருதப்படுகின்றன.

குடிசார் மற்றும் அரசியல் உரிமைகளுள் வாழும் உரிமை, சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், சட்டத்தின் முன் சமநிலை, நகர்வுச் சுதந்திரம், பண்பாட்டு உரிமை, உணவுக்கான உரிமை, கல்வி உரிமை என்பன மனித வாழ்வில் முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன.

1945ஆம் ஆண்டு சான்பிரான் சிஸ்கோ நகரில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்தில் மனித உரிமை சாசனம் ஒன்றை இயற்றுவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் சாசனம் ஐக்கிய நாடுகள் சபை பொதுச் சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. 30 வகையான உறுப்புரைகளும் உள்ளடக்கப்பட்டன.

மனித உரிமைகளின் முதலாவது உறுப்புரை "அனைத்து மனிதர்களும் கௌரவம் மற்றும் உரிமைகளோடு சுதந்திரமாகவும் சமமாகவும் பிறக்கி றார்கள். அவர்களுக்கு பகுத்தறிவும் மனச்சாட்சியும் உள்ளன. ஒருவருக் கொருவர் அவர்கள் சகோதர மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும்" எனக் கூறுகிறது.

"எவ்வாறு சமூக வாழ்வு நிலை பெற அரசாங்கம் பிறந்ததோ அவ்வாறே தனிமனிதனின் வாழ்வை வளமாக்குதல் உரிமையின் கடனாகும்" என்றார் அரிஸ்ரோட்டில். "உரிமைகள் இன்றி, மனிதனிற்கு வேறு ஏதும் இருந்தும் பயனில்லை" என்பார் லாஸ்கி.

உரிமையை பொதுவாக நாட்டுச் சுதந்திரம், தனிமனித சுதந்திரம் எனவும் நோக்கலாம். இவற்றுள் தனிமனித சுதந்திரத்தினுள்ளே மனித உரிமைகள் உள்ளடங்கியுள்ளன.

உரிமைகளின் தொகுப்பே விடுதலை அல்லது சுதந்திரம் என்று கூறப்படும். இதன் அடிப்படையில் தான் மனிதனுடைய எல்லாவித உரிமைகளும் அமையப் பெறுகின்றன. அதனால் தான் விடுதலை உரிமைகளின் தாய் என லாஸ்கி கூறக்காணலாம்.

சிவில் அரசியல் உரிமைகள்

i. சிந்தனை செய்தல் மனச் சாட்சியைப் பின்பற்றுதல் தங் களது மதங்களைப் பின்பற்றுதல்

ii. கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம்

iii. அமைதியாக ஒன்று கூடுதலும் தொழிற் சங்கங்களை ஆரம்பித்தல்

iv. அரசியல் பங்கேற்றலும், வாக்குப் போடுவதற்குமான உரிமை

v. வாழ்வதற்குள்ள உரிமை பாதுகாக்கப்படல்

vi. எவரும் சித்திரவதைக்கோ அல்லது கொடூரமான மனிதாபிமான மற்ற இழிவான நடத்தைக்கோ அல்லது தண்டனைக்கோ ஆளாகக் கூடாது.

vii. அடிமைத்தனத்திற்கு உள்ளாக்கப்படல் ஆகாது.

viii. நடமாடும் சுதந்திரம் ஒருவருக்கு இருக்க வேண்டும்

ix. சட்டத்திற்கு முன்னால் சகலரும் சமம்

அதுபோல சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகளாக,

i. போதுமான வாழ்க்கை வசதியிருத்தல் (உணவு, உடை, உறை யுள் உள்ளிட்டவை)

ii. தொழில் செய்யும் உரிமையும் அதனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும்

iii. வேலைக்கேற்ற சம்பளம்

iv. சமூகப் பாதுகாப்பிற்கான உதவி

v. பாதுகாப்பனதும், சுகாதாரமுமான வேலை செய்யும் உரிமை

vi. கல்வி பெறுவதற்கான உரிமை

vii. தாய்மாருக்கும் குழந்தைமாருக்குமான விசேட பாதுகாப்பு ஒழுங்கு

viii. பட்டினியிலிருந்து விடுபடுவதற்கான அடிப்படை உரிமை

சகலரும் கலாச்சார வாழ்வியலில் பங்கு கொள்வதற்கு, மனித உரிமைகள் சட்டத்தை அமுல்படுத்தல் ஒவ்வொரு தேசத்தினுடைய பொறுப்பாகும். மனித உரிமை விடயங்களை அடிப்படை உரிமைக்குள் கொண்டு வந்து சட்ட அங்கீகாரத்தை தமது மக்களுக்கு பெற் றுக் கொடுக்க வேண்டியது ஒவ்வொரு அரசின் முதற் பொறுப்பாகும்.

மனித உரிமைகள் பிரகடனம் உரு வாக்கப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையிலும் உலகளாவிய ரீதியில் அடிப்படை உரிமைகள் எந்தளவு பாதுகாக்கப்படுகிறது என்பது விமர்சனத்திற்குரியது.

சில ஆசிய நாடுகள் குறிப்பாக இஸ்லாமிய நாடுகள் அனைத்துலக மனித உரிமைகள் சாசனம் மேற்குலக நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது எனவும் எமது பாரம்பரியங் களும் சமய கருத்துக்களும் பொருந்தாது எனக் கூறி வருகின்றனர்.

எனினும் நாடுகளுக்கிடையிலான யுத்தம், உள்நாட்டு மோதல்கள், வர்த்த கப் போராட்டங்கள் போன்றவைகள் நிகழும் சந்தர்ப்பத்திலேயே அனேகமான மனித உரிமைகள் மீறப்படுகின்றன.

தனிப்பட்ட அளவில் நமக்கு நம் உரிமைகள் உரியவை அதே போல பிறருடைய உரிமைகளை நாம் மதிக்க வேண்டும். இதற்கு சட்டங்களினால் மாத்திரம் பரிகாரம் காணமுடியாது அனைவரினது மனப்பாங்கிலும் மாற்றம் வந்தால் மாத்திரமே உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

# மெனிக்பாமில் 86 குடும்பங்கள் வீட்டுத்திட்டவசதிகளின்றி அவலம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் வெங்கள செட்டிக்குளம் மெனிக பாம் பகுதியில் வாழும் 86 குடும் பங்களுக்கு நிரந்தர வீட்டுத் திட்ட வசதிகள் எதுவும் இது வரை வழங்கப்படாமையால் இக்குடும்பங்கள் பல்வேறு சிர மங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மெனிக்பாம் கதிர்காமம் முகா மிற்கு அருகாமையில் அமைந் துள்ள குறித்த பகுதியில் 86 குடும்பங்கள் நிரந்தர வீட்டுத் திட்ட வசதிகள் இன்றி தற்கா லிக கொட்டகைளில் வாழ்ந்து வருவதாக இந்த மக்கள் தெரி விக்கின்றனர். வவுனியா மெனிக் பாம் பகுதியை அண்டிய பிர தேச மக்களுக்கு வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப்பட்டுள்ள நிலை யில் இக்கிராமத்தில் வாழும் தமக்கு மட்டும் இதுவரை வீட்டுத்திட்ட வசதிகள் வழங்கப் படாதிருப்பது பாரபட்சம் காட்டப் படும் நிலையா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பாக வெங்கள செட்டிக்குள பிரதேச செயலரி டம் கேட்கப்பட்ட போது அடுத்த கட்டத்தில் வீட்டுத்திட்டம் வழங் கப்படும் என தெரிவித்த நிலை யிலும் 2015 ஆம் ஆண்டுக்குள் இந்திய வீட்டுத்திட்டம் பூர்த் தியாகவுள்ள நிலையிலும் தமக்கு எப்போது கிடைக்கும் என மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவிக் கின்றனர்.

எனவே வீட்டுத்திட்ட வசதிக ளின்றி நாளாந்தம் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கும் தமக்கு வீட்டுத்திட்டத்தை வழங்க உரியவர்கள் ஆவன செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியா லயத்தின் முத்தமிழ் விழா எதிர்வரும் திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலை பிர தான மண்டபத்தில் தமிழ்மன்றத்தலைவர் செல்வி ர.அறிவழகி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப் பாணம் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் கல்விவலய தமிழ் பாட உதவிக்கல் விப்பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் தமிழ்மன்றப்போஷகரும் கல்லூரி அதிபருமாகிய இ.பசுபதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள் ளார்கள். முத்தமிழ் விழாவில் இயல் இசை நாடக நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (63)

## பக்கவாத்திய சகிதம் இன்னிசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந் துள்ள தொண்டைமானாறு சந்நிதியான் ஆச் சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை யினால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின் றன.

இதில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஆலய பூசை முடிவுற்றதும் பக்கவாத்திய சகிதம் இன் னிசை நிகழ்வு இடம்பெறும்.

## பருத்தித்துறை - யாழ்.பேருந்துகள் ஒழுங்கற்ற முறையில் சேவை

(அச்சுவேலி)

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் இ.போ.ச.இல 51 பேருந்தா னது ஒழுங்கற்ற முறையில் சேவையில் ஈடுபடுவ தாக பயுணிகளால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது காலை 8 மணிக்கு பருத்தித்துறை பேருந்து தரிப்படத்தில் இருந்து புறப்படும் பேருந்தே இவ்வாறு ஒழுங்கற்ற முறையில் சேவையில் ஈடுபடுகின்றது. இதனால் அப்பேருந்திற்காக காத் திருக்கும் அவ்வழித்தடப் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்து ஏமாற்றமடைகின்றனர்.

குறிப்பாக தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வோர் மற்றும் அரச, தனியார் நிறுவனங்க ளில் பணிபுரிவோர் பருவகாலச் சீட்டைப் பெற்றே இ.போ.ச. பேருந்துகளில் பயணத்தை மேற் கொள்கின்றனர்.

இதனால் அவர்கள் இ.போ.ச. பேருந்துகளி லேயே பயணிக்க வேண்டிய கட்டாயதேவை உள்ளது. இவ்வாறு ஒழுங்கற்ற பேருந்துச் சேவையால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் குறித்த நேரத்திற்கு அலுவ லகங்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் செல் லாது நேரம் தவறிச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் பயணிகள் தரப்பில் சுட்டிக்காட் டப்படுகிறது.

எனவே, பயணிகளின் நன்மை கருதி குறித்த பேருந்துகளை தொடர்ந்து ஒழுங்கான முறையில் சேவையில் ஈடுபடுத்த உரிய தரப்பினர் நடவடிக் கைகள் மேற்கொள்ள வேண்டும் எனப் பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

## ஹோட்டல் முகாமைத்துவகற்கை யாழில் புதிய மையம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் தமிழ் மாணவர்களின் நன்மைகருதி லண்டனில் இருந்து வருகை தந்த முகாமைப் பணிப்பாளர் ஹோட்டல் துறை பரீட்சகர் எஸ்.செந்திலிங்கம் ஹோட்டல் திறன் அபிவிருத்தி பாடசாலை ஒன்றினை முன்மாதிரியாக யாழ்ப் பாணத்தில் அமைத்துள்ளார்.

மேற்படி லங்கா திறன் அபி விருத்தி ஹோட்டல் பாட சாலையை கிறீன் கிறாஸ் ஹோட்டல் முகாமைத்துவப் பணிப்பாளர் தியாகராஜா ஜெக சீலன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு திறந்து வைத்தார்.

லண்டன் திறன் அபிவிருத்தி பாடசாலை முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.செந்திலிங்கம் தலைமையில் புதிய பாடசாலை திறப்பு விழா இடம்பெற்றது.

6 மாதம், ஒரு வருடம் ஆகிய காலங்களில் ஹோட்டல் முகாமைத்துவ டிப்ளோமா கற் கையை பயிலும் மாணவர்களுக்கு லண்டன் ABC விருது (UK - ABC - AWARD) வழங்கப்படும்

இதன் தலைமை அலுவலகம் சிவன்கோவில் வீதி, திருநெல் வேலி எனும் முகவரியில் ஹோட் டல் கற்கை நெறிகள் ஆரம்பித் துள்ளன. எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ப வர்களுக்கு மட்டும் 50 வீதம் கழிவில் கற்கைநெறி வசதி வழங்கப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு அதிபர் ஜூட் பிரதீபனுடன் 077 8153187, 077 1286382, 021 4546 008 எனும் தொலைபேசிகளில் தொடர்பு கொள்ளலாம். (92)

## றமழான் நற்சிந்தனை



இஃதிகாஃப் (மஸ்ஜித்தில் தங்கியிருப்பது) இருப்பவருடைய விஷயத்தில் அவர் பாவங்களை விட்டும் பாதுகாக்கப்படுகின்றார். நற் செயல்கள் அனைத்தையும் செய்பவரைப் போன்று நன்மைகள் அவ ருக்கு எழுதப்படுகின்றன. நூல் - மிஷ்காத் (105)

## முரசின் இன்றைய பலன்

(09.07.2014 புதன்கிழமை)



ஐய வருஷம் ஆனிமாதம் 24 ஆம் திகதி.
துவாதசி / அமிர்தசித்தம்.
அனுச நட்சத்திரம் மு.இ. 10.46 வரை. பின் கேட்டை.
இராகு காலம 11.58 - 01.28 வரை. சுபநேரம 04.28 - 04.58 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.


| | |
|---|---|
| மேடம் | இணையத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது யாராவது உளவுபார்ப்பது பற்றி எச்சரிக்கையாக இருங் கள், வெளியூர் உறவுகள் வருகை தருவதினால் குடும்பத் தில் ஆனந்தம் களைகட்டுதல். |
| ரிஷபம் | அமங்கல நிகழ்வில் உதவிக்கரம் கொடுத்தவர்களுக்கு நன்றி கூறுதல், மக்களின் உயர்ச்சி கேட்டு மட்டில்லா மகிழ்வு கொண்டு பாராட்டுதல். |
| மிதுனம் | பேச்சு சாதுரியத்தினால் நாடிவந்த பிரச்சினையை முற்ற விடாது ஐஸ்கட்டிபோல் கரையச் செய்தல், சேமிப்பு மனப்பான்மை ஏற்பட்டதால் ஆடம்பரப்பொருட்களைக் கைவிட்டு விடல். |
| கடகம் | புதிதாக நட்புக் கொள்ள வந்தவரை எடைபோட்டு நம்பகத் தன்மையை அளவிடுங்கள், பழைய ஒப்பந்தம் மனதிற்கு உவகை அளித்ததால் புதியதில் ஈடுபட முன்வரல். |
| சிம்மம் | எதிர்பாராது ஏற்பட்ட சுபகாரிய நிகழ்விற்காக ஆபரணங் கள் அடகு வைத்தல், தொழிலை அபிவிருத்தி அடையச் செய்ய புதிய யுக்தியைக் கையாள முஸ்தீபு. |
| கன்னி | உயர் அந்தஸ்த்தில் உள்ளவர்களின் நட்பின் விளைவாக நன்மை கிட்டுதல், நீண்ட காலம் பிரிந்திருந்தவர் மீண்டும் குடும்பத்துடன் வந்து சேருதல். |
| துலாம் | வெளியூர் மணமகனின் மேல் சந்தேகக்கேடு தக்க வைத்த தால் திருமண முயற்சியைக் கைவிடல், வீண் வாக்குவாதம், விதண்டாவாதங்களைத் தவிர்த்துக் கொள்வதினால் மனநிம்மதி ஏற்படல். |
| விருச்சிகம் | நீண்டகாலம் புத்திர பிராப்தி இன்மையினால் மருத்துவ ஆலோசனையை நாடல், மனதைவாட்டிக் கொண்டிருக் கும் குழப்பம் நீங்கியதனால் உற்சாகத்துடன் செயற்படுதல். |
| தனுசு | வாடகை வீட்டைவிடுத்து புதிதாக அமைத்த சொந்த மனையில் குடியேற ஆயத்தங்கள் செய்தல், கடன் பளு தீர்ந்ததால் மனதில் தேங்கியிருந்த கவலை நீங்குதல். |
| மகரம் | கவனக்குறைவுடன் வாகனத்தைச் செலுத்திய வேளை வந்த விபத்தினின்றும் தப்பிவிடல், வேலைப்பளு வில் மூழ்கியதினால் உடல் நலக்குறைவு தக்க வைத் தல். |
| கும்பம் | துணைவரின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதால் துயர வெள்ளம் தேங்குதல், மாணவர் வீசாவில் வெளி நாட்டில் கற்க இனிதான செய்தி கிட்டல். |
| மீனம் | அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த முயற்சி இறுதியில் வெற்றியை அளித்தல், பங்குத்தொழிலை முறித்து விட்டு தனித்தியங்கும் எண்ணம் மேலிடல். |



கரவெட்டி விக்னேஸ்வராக் கல் லூரி மாணவர்களின் கல்விக் கண் காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இரவீந்திரன் கல்லூரி அதிபர் எம்.கனகலிங்கம் தலைமை யில் அழைத்துச் செல்லப்படுவதையும் விருந்தினர்கள் கண்காட்சியைப் பார்வையிடுவதையும் காணலாம். (01)

# சிறார்களின் திறன்களை வளர்க்க அனைவரும் பாடுபட வேண்டும்

## - ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் வேண்டுகோள் -



எங்கு திறமைகள் இருக்கின்றதோ அங்குதான் வசதிகள் பற்றாக்குறையாக இருக்கும். அந்த நிலையைத்தான் இப்பகுதியிலும் காணமுடிகின்றது. இந்தச் சிறுவர்களது வரவேற்பு நிகழ்வு என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றது. இச் சிறு வர்களது கல்வி மேம்பாட்டிற்காக இப் பகுதியில் சிறுவர் பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு மிக விரைவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக தீர்வு பெற்றுத்தருவேன. என அமைச்சரின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கே.வி.குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்தார்.

முன்பள்ளி சிறுவர்களின் விளையாட்டு திறன்களை வளர்ப்பதற்காக நடாத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வு தெல்லிப்பளை சித்தியம்புளியடி கலைச் செல்வி முன்பள்ளி மைதானத்தில் எம்.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய ஒருங்கிணைப்பாளர் வி.கே.ஜெகன் மேலும் தெரிவிக்கையில்.

இந்தப்பகுதி மக்களின் கல்விக்கு அத்திவாரமாக விளங்கும் பாலர் பாடசாலையை மட்டுமல்லாது அதனுடன் இணைந்திருக்கும் சனசமூக நிலையம் மற்றும் சிறுவர் பூங்கா, சுற்றுமதில் கட்டல் ஆகியவற்றிற்கான நிதியையும் அமைச்சருடாக பெற்றுத்தந்து இப்பகுதியை அனைத்து வகையிலும் மேம்பாடடையச் செய்து தருவதாகவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வலிவடக்கு ஈழ மக்கள் ஜனநாயக்க் கட்சி அமைப்பாளர் அன்பு மற்றும் வலி தெற்கு அமைப்பாளர் வலன்ரயின ஆகியோருடன் கௌரவ விருந்தினர்களாக கட்டுவன் மகா வித்தியாலய அதிபர் த.வாசுகி, பனை தென்னைவள பொது முகாமையாளர் க.சுதாகரன், சிறப்பு விருந்தினர்களாக நா.கணேசன், க.சிவஞானம், கிராம உத்தியோகத்தர் எஸ்.சாரங்கன், சி.முருகையா, ச.செல்வரஞ்சன் ஆகியோர் கலந்து கொண்டனர.

# வீதியில் கழிவுகளைக் கொட்டுவதால் பாதிப்புக்களை எதிர்கொள்ளும் மக்கள்

யாழ்ப்பாணம் மடத்தடி வீதியில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவது பற்றி அப்பகுதியை அண்டியுள்ள மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் வெற்று மதுப் போத்தல்கள் மற்றும் எஞ்சிய உணவுக்கழிவுகளை வீசுவதால் வீதிப்பகுதி முழுவதும் அவை பரவிக் காணப்படுகின்றன. இதனால் அப்பகுதியால் பயணம் செய்யும் பாதசாரிகள் மற்றும் ஏனைய வாகனப் பயணிகள் பல்வேறு சிரமத்தின் மத்தியில் பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வீதிகளில் காணப்படும் உணவுக்கழிவுகளைக் கட்டாக்காலி நாய்கள் மற்றும் பறவைகள் எடுத்துச் சென்று அயல்வீடுகளில் போடுவதால் அவை நாற்றமெடுகின்றன. இதனால் தொற்றுநோய்கள் பரவும் அபாயநிலை காணப்படுவதாகவும் மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே குறித்த பகுதியில் கழிவுப்பொருட்களைக் கொட்டுவதை உடன்நிறுத்தி சுகாதாரமான வாழ்விற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும். என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் .(85)

# சமய அறிவுப்போட்டி முடிவுகள்

நல்லூர் ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜராஜேஸ்வரி தேவஸ்தானத்தின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு ஆலய பரிபாலன சபையினால நடாத்தப்பட்ட சமய அறிவுப்போட்டி - 2014 முடிவுகள் வருமாறு:-

மேல்பிரிவு:-

ந.இந்துசா, தி.தமிழினி, வே.சுஞ்சிகா, செ.கஜானா, வி.நிலுக்சிகா

கீழ்ப்பிரிவு:-

ந.சனோஜா, ஜெ.அர்ச்சுனன், த.பிரவீன், பா.அருள்ராம்


சான்றிதழ் பெறுபவரின் விபரம

கீழ்ப்பிரிவு:-

எம்.பிரசாந், ம.தினேஸ்வரன், ப.சிந்துஜன், இ.மதுர்சன், த.புருசோத்மன், கே.நிலக்சன், றொ.நிருபன், ஜெ.சங்கீதன், ரி.வித்தியாகரன், நா.சுபாத்தியன், கி.நிலாவினி, எஸ்.கஜனிகா, பி.அருள்ராம், வி.சுதர்சன், ம.ஹரிகரன், ஜெ.கஜதீபன், ம.துசானிகா, பா.நிலக்சனா, பா.பிரவீனா

மேல்நிலை பிரிவு

ப.மதிசன், என்.சுபகேதன், கே.நியோஜன், தே.தர்சினி, ஜெ.தனுசன் மு.பர்மிலா, சி.சுகாசினி, த.வான்மதி, ர.கார்த்திகாயினி, ஜெ.லாவண்யா, நே.நிருஷா, இ.லக்சிகா, ப.பானுஜன்



கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி பழையமாணவர் சங்கம் கல்லூரியில் கல்விகற்கும் வசதி குறைந்த மாணவர்களுக்கு சுமார் 40,000 ரூபா பெறுமதியான பாதணிகளை அன்பளிப்புச் செய்த நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்தலைவர் எஸ்.செல்வரத்தினம் பாதணிகளை மாணவர்களுக்கு வழங்குவதைக் காணலாம். (01)


# பார்த்தீனிய ஒழிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச செயலாளர் பிரிவில் பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

551 ஆவது படைப்பிரிவினரின் எள்ளங்குளம் இராணுவ பொறுப்பதிகாரியின் வழி காட்டலுக்கு இணங்க கரவெட்டி பிரதேச செயலக உத்தியோகத் தர்கள் கிராம அலுவலர்கள், இராணுவத்தினர் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மேலும் .இந்த பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகளில் மக்களும் சேர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# ஆயுர் வேதம்



## அதிக பசி... அதிக எடை!

அதிக நடைப்பயிற்சியின் பொழுது ஸமானன் எனும் வாயு வயிற்றுக்குள் அதிகம் பரவி ஜாடராக்னி எனப்படும் பசித் தீயைத் தூண்டிவிடச் செய்கிறது. அதனால் பசி, தாகம் அதிகரிக்கிறது.

மரத்தின் பொந்தில் உள்ள நெருப்பு, காற்றுடன் சேர்ந்து வளர்ந்து மரத்தையே எரிப்பதுபோல், வயிற்றுக்குள் உள்ள ஜாடராக்னியும் வாயுவுடன் சேர்ந்து வளர்ந்து உடல் பருமனுள்ள மனிதனை மிகுந்த துன்பத்திற்கு உள்ளாக்குகிறது.

காற்றின் உதவிகொண்டு கொழுந்துவிட்டெரியும் ஒரு குடிசையை மணல் மற்றும் தண்ணீர் விட்டு அணைப்பதை நீங்கள் பார்த்திருக்கக் கூடும். அதே போன்றதொரு நிலை வயிற்றினுள் ஏற்பட்டால் நிலம் மற்றும் நீரின் ஆதிக்கம் கொண்ட உணவினால் மட்டுமே குணம் பெறலாம்.

ஆனால் இதிலுள்ள கஷ்டமென்னவென்றால் இந்த இருவகை பஞ்ச மஹாபூதங்கள் உடலில் ஊட்டத்தை ஏற்படுத்தும் தன்மையுடையவை என்பதால் உடல் மேலும் பெருக்கக் கூடும்.

அதனால் உண்ணும் உணவு இதே ஆதிக்ய பூதங்களுடையதாக இருந்து ஸமானவாயு ஜாடராக்னியைக் குறைத்து உடலையும் இளைக்கச் செய்யக் கூடியவையாக இருந்தால் எத்தனை நன்மை தரும்? அப்படியொரு உணவு இருக்கிறதா? என்றால் அரிதான வகைகள் இருப்பதாக ஆயுர்வேதம் கண்டறிந்துள்ளது.

யவை என்ற வாற்கோதுமை உடல் பருமன் மற்றும் நீரிழிவு உபாதையில் மிகவும் சிலாக்கியமான உணவு. அரிசி, கோதுமை கலப்பின்றி தனி யவையே மிக நல்ல குணம் தருகிறது. சற்று தாமதித்து ஜீரணமாகக் கூடியது. குடலில் வறட்சியை ஏற்படுத்தக் கூடியது. உடல் வலுவைத் தரும். நீரிழிவு, கொழுப்பு அடைப்பு உள்ளவர்களுக்கு மிகவும் ஏற்றது. உடலில் உள்ள கொழுப்பைக் கரைக்கும்.

மேலும் இது நெய்ப்பு இல்லாதது. குளுமை. இனிப்புச் சுவை, மலமிளக்கி, விந்துவை வளர்க்கக் கூடியது. தாதுக்களுக்கு உறுதியைச் செய்யும். சிறுநீர் உபாதையைக் கண்டிக்கும்.

இதேபோன்று கம்பு, தினை, கேழ்வரகு போன்றவையும் பாசிப்பயறு, மைசூர் பருப்பு போன்ற பயறு வகைகளும் நல்லதே. கேழ்வரகை முளை கட்டி குத்திப் புடைத்து பின் இதன் மாவை கஞ்சி, களி, கூழ், தோசை, அடை முதலியவற்றில் உணவாக்கிக் கொள்ளலாம்.

அதுபோல தினை கொழுப்பு, ஊளைச் சதை சேரவிடாது. சிறுநீரை அதிகம் வெளியேற்றி தசைகளை இறுகச் செய்யும். இதனை சோறாக்கிச் சாப்பிடலாம். கஞ்சியாக்கிச் சாப்பிட வீக்கம், நீர்தேக்கம் வடியும். லேசாக வறுத்து மாவாக்கித் தேனுடன் சாப்பிட களைப்பு நீங்கும்.

கம்பு தானியத்தை சோறாகவோ கூழாகவோ மோர் சேர்த்துச் சாப்பிட்டு வர உடல் கொழுப்பை அதிகப்படுத்தாமல் குடல் எரிவு, கொதிப்பை அகற்றும்.

முட்டை வடிவிலுள்ள பார்லியை சீமை யவை என்பார்கள். குணத்தில் யவையை ஒத்தது. இதன் முழு அரிசியைக் கஞ்சியாக்கி அதன் தெளிவைப் பருக சிறுநீரை அதிக அளவில் பெருக்கி வெளியேற்றும். தாகத்தை அடக்கும். நாவறட்சியைப் போக்கும். தொடர்ந்து உணவாக்கிக் கொள்ள உடல் இளைக்கும்.

தேன் கலந்த நீர், தெளிந்த மோர் போன்றவை உணவிற்குப் பிறகு பயன்படுத்த உடல் இளைக்கப் பயன்படும். கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் எனப்படும் த்ரிபலாசூரணத்தைத் தேனில் கலந்து இரவில் படுக்கும் முன் சாப்பிடுவதால் பசியை மட்டுப்படுத்தி கொழுப்பையும் குறைக்கப் பயன்படும்.

முன்குறிப்பிட்ட யவை தானியத்தை நெல்லிக்காய் சூரணத்துடன் சேர்த்து தேனில் கலந்து சாப்பிட்ட பிறகு நடைப்பயிற்சியைச் செய்தல் அதிகப் பருமனை குறைக்கும் ஒரு சிறந்த உபாயமாகும்.

கவலைப்படுதல், உடற்பயிற்சி, வாந்தி பேதிக்குக் கொடுத்து உடலைச் சுத்தம் செய்தல், குறைவாகத் தூங்குதல் போன்றவற்றை உடலுக்கு ஏற்றவாறு கடைபிடித்தலும், வறட்சியளிக்கக் கூடிய ஏலாதி சூரணத்தை உடலில் பூசி நீராடச் செய்வதன் மூலமாகவும் உடலை நம்மால் இளைக்கச் செய்ய முடியும்.



## கதிர்காமத்திற்கு சென்ற 50 பேர் அதிஷ்டவசமாக உயிர்தப்பினர்

(கொழும்பு)

கதிர்காமத்தில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று பாரிய விபத்து ஒன்றிலிருந்து தப்பியுள்ளது.

நேற்று முன்தினம் 50 யாத்திரீகர்களுடன் சென்ற தனியார் பேருந்து ஒன்று சியம்பலாந்துவ 'ஹெட ஓயா' பாலத்தில் விபத்துக்குள்ளானது.

பேருந்து பாலத்தில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு வேலியில் மோதி தரித்து நின்றதால் பாரிய விபத்தும், உயிர்ச் சேதங்களும் தடுக்கப்பட்டுள்ளன.

பேருந்தில் பயணித்த எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

# 27 நாடுகள் பங்கேற்கும் தெங்கு அபிவிருத்தி மாநாடு



தெங்கு அபிவிருத்தி அமைச்சு- ஆசிய பசுபிக் தெங்கு உற்பத்தி நாடுகளுடன் இணைந்து ஏற்பாடு செய்த 46ஆவது உலக தென்னை கொக்கோடெக் மாநாடு மற்றும் கண்காட்சி நேற்று முன்தினம் கொழும்பில் ஆரம்பமானது

.பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் ஆரம்பமான இம்மாநாட்டில் 27 நாடுகளைச் சேர்ந்த 156 பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

இம்மாநாட்டில் கலந்துக் கொண்ட அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார சின்னம் வழங்கி கௌரவித்தார்.

தெங்கு ஆராய்ச்சியாளர்கள்- முதலீட்டாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் கலந்துகொள்ளவுள்ள இம்மாநாட்டின் முதல் நான்கு தினங்களும் தெங்கு அபிவிருத்தி- உற்பத்தி- பாதுகாப்பு என்பன தொடர்பான பல்வேறு கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

நேற்று முன்தினம் 7ஆம் திகதி தொடக் கம் 11ஆம் திகதி வரை மாநாடு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற வுள்ளது சிறந்த- நிரந்தரதன்மை வாய்ந்த தெங்கு உற்பத்திக்கான கொள்கை திட்டமிடல் மற்றும் தொழில்நுட்பம என்ற தொனிப்பொருளில் இம்மாநாடு நடை பெறுகிறது.

# தொற்றுநோய்களைத் தடுக்க கிணறுகளுக்கு "குளோரின்"

(யாழ்ப்பாணம்)

யாழ். வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கிணறுகளுக்கு குளோரின் இடுவதற்காக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு1,000 கிலோ குளோரின் வழங்கப்பட்டதாக பிரதேச சபையின் தவிசாளர் ச.சிவகுமார் தெரிவித்துள்ளார்

பிரதேச சபைக்குட்பட்ட நவாலி, சாவற்கட்டு ஆகிய கிராமங்களில் வயிற்றோட்டம் உள்ளிட்ட தொற்றுநோய்கள் கடந்த யூன் மாதம் பரவியிருந்தன. இதனால், அப்பகுதிகளிலுள்ள கிணறுகளுக்கு குளோரின் இட வேண்டும் என சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் தங்களிடம் கோரியதாகவும் அவர் கூறினார்.

இந்தக் கோரிக்கைக்கு அமைய பிரதேச சபையின் நிதிக் குழுவில் ஆராயப்பட்டு சிபாரிசு செய்யப்பட்டதை தொடர்ந்து, 1,000 கிலோ குளோரின் வழங்குவதற்கு பொதுச் சபை அங்கீகாரம் வழங்கியது. இந்த நிலையில், குளோரின் கொள்முதல் செய்யப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

# புனரமைப்பு பணியில் ஈடுபடுத்துவதற்காக அளுத்கமவில் இராணுவ முகாம்கள்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

அளுத்கமை அரசமர கூட்டுத்தாபன காணியில் தற்காலிக இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது என்று இராணுவ பேச்சாளரும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளருமான பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.


பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்ட ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்

அளுத்கம மற்றும் பேருவளை பிரதேசங்களில் கடந்த மாதம் இடம்பெற்ற வன்முறைகளை அடுத்து சேதமடைந்த கட்டடங்கள் மற்றும் வீடுகளை புனரமைக்கும் பணிகளில் இராணுவம் கடற்படை மற்றும் விமானப்படை வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

அவர்களின் உணவு மற்றும் தங்குமிட வசதிகளுக்காகவே இந்த தற்காலிக இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது என்றார்.

# பாலைமர தீராந்திகளை கடத்தியவர் கைது



(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி அரியப்பட்ட பாலைமர தீராந்திகளை வாகனமொன்றில் கொண்டுசென்றதாகக் கூறப்படும் இருவரை புத்தூர்ச் சந்தியில் நேற்று முன்தினம் இரவு கைதுசெய்ததாக அச்சுவேலி போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தூர் கிழக்கு மற்றும் கோவிலாக்கண்டிப் பகுதிகளைச் சேர்ந்த 23 மற்றும் 19 வயதுடைய இவர்கள் அச்சுவேலியிலிருந்து நீர்வேலிப் பகுதியிலுள்ள மரக்காலையொன்றுக்கு இத் தீராந்திகளைக் கொண்டு சென்றுகொண்டிருந்த போது, வீதிப் போக்குவரத்து கடமையிலிருந்த பொலிஸார் இடைமறித்துச் சோதனையிட்டனர்.

இதன்போது, இம்மரத் தீராந்திகளை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித தனர்.

# கடலாமை வெட்டியவர்கள் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைப் பகுதியில் கடலாமையொன்றை இறைச்சிக்கு வெட்டியதாகக் கூறப்படும் 02 பேரை கடற்படையினர் கைது செய்து தம்மிடம் ஒப்படைத்ததாக ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இவர்களிடமிருந்து 05 கிலோ கடலாமை இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

அனலைதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ரதீஸ்குமார் (வயது 30), திருச்செல்வம் மைக்கல்பெர்ணான்டோ (வயது 34) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஆமையை வெட்டிய பின்னர் அதன் ஓட்டைப் பழைய கிணறு ஒன்றினுள் போடுவதற்கு இவர்கள் சென்றுள்ளனர். இதை அவதானித்த கடற்படையினர் இவர்களை பிடித்து விசாரித்த போதே, இவர்கள் ஆமை வெட்டியமை தெரியவந்ததாகவும் பொலிஸார் கூறினர்.

# மது அருந்திய இளைஞன் மீது மொட்டையடிக்கப்பட்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உடுப்பிட்டி இமையாணன் பகுதியினைச் சோர்ந்த செல்வராசா தினேஷ் (வயது 24) என்பவர் இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்குள்ளாகி நேற்று முன்தினம் மாலை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் மதுபான சாலையில் மது அருந்திக் கொண்டிருந்த போது, அங்கு வந்த சிலர் மேற்படி நபரைத் தூக்கிச் சென்று பருத்தித்துறை கடற்கரையில் வைத்து அவருக்கு மொட்டை அடித்துள்ளனர்.

தொடர்ந்து அவரை சவரக் கத்தியினால் வெட்டியதுடன், தாக்குதல் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வர்த்தகரைத் தாக்கிய குற்றச்சாட்டில் கிராமசேவகர் உட்பட 4 பேர் கைது


(மட்டக்களப்பு)

சம்மாந்துறை, வீரமுனை பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரைத் தாக்கிய சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் கிராமசேவகர் ஒருவர் உட்பட 04 பேரை நேற்று முன்தினம் கைதுசெய்ததாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர.

சம்மாந்துறை வீரமுனை 02 கோவில் வீதியைச் சேர்ந்த சேகுமதி தவமதி என்ற இந்த வர்த்தகர், வீரமுனைப் பகுதியில் உள்ள ஸ்ரீசிந்தியாத்திரைப் பிள்ளையார் கோவில் திருவிழாவின்போது, வியாபாரத்துக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, பின்தொடர்ந்த 04 பேர் இவரைத் தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட நிலையில், தலைமறைவாகியிருந்த 04 சந்தேக நபர்களைக் கைது செய்ததாகவும் பொலிஸார் கூறினர்.


தாக்குதலுக்கு உள்ளான வர்த்தகர் சம்மாந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டார்.



# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2014

# கல்வி முரசு O/L

## கணிதம் - பகுதி I




## பகுதி - A

1. ரூபா 78 விலையான தொப்பி ஒன்று வாங்கிய மாணவன் கடைக்காரனுக்கு எவ்வளவு பணம் கொடுத்தால் மீதியாக ரூபா 22 கிடைக்கும்.

2. 2.5 m ஐ cm இல் தருக.

3. உருவில் a இன் பெறுமானம் யாது.





4. தீர்க்க. $\frac{6}{X} = 2$

5. கழிக்க. $1101_{இ} - 101_{இ}$

6. சுருக்குக. $(-0.2)^3$

7. அடைப்பு நீக்கிச் சுருக்குக. 7-2(X+3)

8. உருவில் $A \cap B$ என்ற பகுதியை நிழற்றுக.





9. 10,15,15,20,25,30,35 என்ற புள்ளிகளின் இடையம் யாது?

10. $\begin{pmatrix} 3 & 2 & 0 \\ 0 & -1 & -2 \\ 1 & 4 & 1 \end{pmatrix}$ தாயவரிசை தருக? எவ்வகைத் தாயம் எனத் தருக.


11. ஒரு நோயாளிக்கு மூன்று விதமான மருந்துவில்லைகள் கொடுக்கப்பட்டன. ஒன்று 20 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மற்றையது 25 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மூன்றாவது வில்லை 30 நிமிடத்துக்கு ஒரு தடவையும் உட்கொள்ள வேண்டும். காலை 8 மணிக்கு 3 விதமான மருந்து வில்லைகள் உட்கொண்டா்ல் மீண்டும் எந்த நேரத்தில் மூன்றும் ஒன்றாக உட்கொள்ள வேண்டும்?

12. ஒரு நிமிடத்தில் 120 m தூரம் செல்லும் ஒரு வாகனம் ஒரு மணித்தியாலத்தில் எத்தனை km தூரம் செல்லும்.

13. நாற்பக்கல் ABCD இல் X இன் பெறுமானம் யாது?





14. உருவில் $PQ \parallel SR$ ஆகும். PQRS ஒரு வட்டநாற்பக்கல் x, y இன் பெறுமானம் காண்க.




15. $x \leq -3$ உம் $x > 2$ என்ற சமனிலியை எண் கோட்டில் வரைக. $x > 2$ இல் நிறை எண்கள் இரண்டு தருக.

16. ABCD ஓர்நாற்பக்கல் $AD \parallel BC$ ஆகும். AC, BC என்பன O இல் இடைவெட்டுகின்றன.
   அ) முக்கோணம் BCD இற்கு சமமான முக்கோணி எது?
   ஆ) OCD முக்கோணிக்கு சமபரப்பான முக்கோணி எது?




17. ரூபா 85000 இற்கு ரூபா 8.50 விலைப்படி எத்தனை 10 ரூபாய் பங்குகள் வாங்கலாம்? பங்குகளின் மொத்தப் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?

18. 2x + 3y = 10 என்ற நேர்கோட்டில் கீழே தரப்பட்ட எந்த ஆள்கூறுகள் தரப்பட்ட நேர்கோட்டில் அமைந்திருக்கும்: $A\left(\frac{1}{2}, 3\right)$ $B(1, -3)$ $C(-1, 4)$


19. $\frac{2}{3}$, 2, 6 ..... பெருக்கல் விருத்தியில்
   அ) பொதுவிகிதம் என்ன?
   ஆ) n ஆம் உறுப்பை முதன்மை எண்களின் பெருக்கத்தின் சுட்டியாக எளிய வடிவில் தருக?

20. $S = \frac{n}{2}(a + l)$ ஆனது ஒரு கூட்டல் விருத்தியில் n ஆம் உறுப்புகளின் கூட்டுத் தொகை யாகும். a ஐ எழுவாயாக மாற்றுக?


21. 8 மனிதர் ஒரு வேலையை 7 மணித்தியாலத்தில் செய்து முடிப்பர்.
   அ) இவ்வேலை எத்தனை மனித மணித்தியாலங்கள் ஆகும்?
   ஆ) அந்த 8 மனிதர்களும் அவ்வேலையை ஆரம்பித்து $2\frac{1}{2}$ மணித்தியாலங்களின் பின்னர் மின்தடை காரணமாக வேலை நிறுத்தப்பட்டது. அப்போது எத்தனை மனி-மணித்தியாலம் வேலை செய்யபபடாமை இருந்தது.

22. மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தாது தீர்க்க. $\log\frac{12}{5} + 2\log x = lg60$


23. ஒரு வட்டத்தில் AB, DC என்ற இரு நாண்கள் X ஐ இடைவெட்டுகின்றன. AX=12 cm, CX=8cm, AD=15cm ஆகும். BC இன் நீளம் யாது?





24. உருளை திண்மமொன்றின் விட்டம் 2rஉம், உயரம் 3r உம் ஆகும். இரு வட்டப்பரப்புக்கும் வளைபரப்புக்கும் உள்ள விகிதம் எளிய வடிவில் தருக. (உருளையின் வளை பரப்பு $2\pi rh$)




25. A,B என்பன வட்டங்களின் மையங்கள் ஆகும். AC, BC வட்டங்களின் தொடலிகள் ஆகும்.
   1) கோணம் ACB இன் பருமன் யாது?
   2) $AC = 4\sqrt{2}cm,\ BC = 2cm$ எனின் AB இன் நீளம் என்ன?





26. உருவில் A இற்கு வடக்கே 15 km தூரத்தில் Bயும் மேற்கே 15km தூரத்தில் P யும் உள்ளது.
   அ) தரவுகளைப் படத்தில் குறிக்க?
   ஆ) B இல் இருந்து P இன் திசைகோள் யாது?




27. இருபடிச் சமன்பாடு தீர்க்க. $6x^2-3x=0$

28. I) AB என்பது காணியின் ஒரு எல்லையாகும்.
   I) O இல் இருந்து 7m தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை பருமட்டாக வரைக?




29. ஒரு சதுரத்தில் 3,3,2,5 என்ற இலக்கம் எழுதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 3 | 5 |
| 2 | 3 |

   அ) தீபன் எழுமாறாக 3 என்ற இலக்கம் தொடுகிறான். அவன் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?
   ஆ) தீபன் தொடும் சில நிமிட நேரத்தில் ராஜியும் வேறு ஒரு இலக்கம் தொடுகிறார். இருவரும் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?

30. அ) $1\frac{1}{2}l$ குளிர்பானத்தை 75ml கொண்ட குவளை எத்தனை பாவித்து முற்றாக நிரப்பலாம்?
   ஆ) குவளையின் கொள்ளளவு $1\frac{1}{2}l$ குளிர்பானத்தின் கொள்ளளவின் எத்தனை சதவீதமாகும்?





## பகுதி - B

01. சப்பாத்து சோடி ஒன்றின் உற்பத்தியில் மூலப்பொருளுக்கும் கூலிக்கும் உள்ள விகிதம 2:3 ஆகும். ஒரு சோடி சப்பாத்து உற்பத்தி செய்ய ரூபா 2000 செலவாகின்றது. உற்பத்தியாளன் 40% இலாபம் வைத்து விற்கின்றான்.
   1. மூலப்பொருள் செலவு யாது? கூலிச்செலவு யாது?
   2. உற்பத்தியாளன் அச்சோடிச் சப்பாத்தை விற்றவிலை யாது?
   3. மூலப்பொருள் 45% ஆலும் கூலிச் செலவு 10% ஆலும் அதிகரித்தால்
      I) புதிய மூலப்பொருள் செலவு யாது?
      II) புதிய கூலிச் செலவு யாது?
   4. புதிய உற்பத்திச் செலவு யாது?
   5. பழைய சதவீத இலாபம் பெற என்ன விலைக்கு விற்க வேண்டும்?

02. ஒருவன் தனது பயணத்தின் 3/5 பங்கை புகைவண்டியிலும் எஞ்சியதில் 1/3 பங்கை பஸ்வண்டியிலும் மிகுதியை நடந்தும் பயணம் செய்தான்.
   அ) புகை வண்டியில் பயணம் செய்தபின் இன்னும் எவ்வளவு பங்கு பயணம் செய்ய உள்ளது?
   ஆ) புகைவண்டி, பஸ்வண்டியில் பயணம் செய்த மொத்தப் பங்கு யாது?
   இ) நடந்து செல்வதற்கு முழுவதன் என்ன பங்கு மிகுதியாக உள்ளது?
   ஈ) நடந்து சென்ற தூரம் 8km எனின் பயணத்தின் மொத்தத் தூரம் யாது?
   உ) நடந்து சென்ற தூரம் முழுப் பயணத்தின் என்ன சதவீதம்?


03. ஒரு பாடசாலையில் உள்ள க.பொ.த (சாதாரணதரம்) வகுப்பில் உள்ள மாணவர் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி பார்ப்பது தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.




A- நாடகம்
B- நடனம்
C- சினிமாப்படங்கள்


   1. நாடகம், நடனம் மட்டும் பார்ப்போர் பகுதியை நிழற்றுக?
   2. சினிமாப்படங்கள் பார்ப்போர் எத்தனைபேர்?
   3. நாடகம் பார்ப்போர் 32 பேர் எனின் நாடகம் நடனம் மட்டும் பார்ப்போர் எத்தனை பேர்?
   4. குறைந்தபட்சம் இரு நிகழ்ச்சியாவது பார்ப்போர் எத்தனை பேர்?
   5. வகுப்பில் உள்ள மாணவர் தொகை 75 பேர் எனின் தரப்பட்ட ஒரு நிகழ்ச்சியினையும் பார்க்காதோர் நிகழ்வு யாது?

04. ஒரு பாடசாலை நுழைவாயிலில் ஒரு அலங்கார முகப்பு இரும்புக் கம்பிகளினால் ஆக்கப்பட்டுள்ளது. AR = BQ = 6m உம் PQ = 13m உம் AD = BC = 8m உம் DR = CT = 3m உம் RS = 5m உம் ஆகும்.




   1. அரைவட்டமொன்றின் விட்டம் என்ன?
   2. பைதகரசின் தேற்றத்தின்படி DP இன் நீளம் என்ன?
   3. நிழற்றிய பகுதியின் சுற்றளவு?
   4. நிழற்றிய புகுதிக்கு மின்வயர் மூலம் நிற மின்குமிழ்கள் 6m இற்கு ஒரு மின் குமிழாக எத்தனை மின்குமிழ்கள் பொருத்த வேண்டும்?
   5. நிறம் தீட்டிய பகுதியின் பரப்பு யாது?

05. மாணவர் குழு ஒன்று கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளை வலையுரு வரையம் ஒன்று காட்டுகிறது.




   அ) ஆயிடை 10-30 இல் எத்தனை மாணவர்கள் வகை குறிக்கப்படுகிறது?
   ஆ) இவ்வலையுரு வரையத்தில் எத்தனை மாணவர்கள் விபரம் எடுக்கப்பட்டது?
   இ) ஆகார வகுப்பு யாது?
   ஈ) இவ்வலையுரு வரையத்தில் மீடிறன் பல்கோணி ஒன்று அமைக்க?

01. ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வங்கி ஒன்றில் காணி கொள்வனவு செய்வதற்கு கடன்பெறலாம். ஆண்டுக்கு எளிய வட்டி 12 வீதம் ஆகும். | தனியார் வங்கி ஒன்றில் 150,000 ரூபா கடன் பெற்றால் 3 ஆண்டுகள் முடிவில் வட்டியாக ரூபா 49500 ஐக் கொடுக்கலாம். |

மேற்குறிப்பிட்ட தகவல்களுக்கு ஏற்ப வங்கியில்

அ. 100 ரூபா கடனுக்கு ஓர் ஆண்டு வட்டி யாது?

ஆ. எக்கடன் முதலுக்கு ஓர் ஆண்டு முடிவில் வட்டியாக 2400 ரூபா கொடுக்க வேண்டும்.

இ. 150,000 ரூபா கடன்பெற்ற ஒருவர் 3 ஆண்டுகள் முடிவில் கொடுக்க வேண்டிய வட்டி யாது?

ஈ. தனியார் வங்கியில் அறவிடப்பட்ட வருட வட்டி வீதம் யாது?

02. I. A என்ற அப்பிள் வியாபாரி 3 தட்டுகளில் 3 தரங்களில் அப்பிள் விற்பனை செய்கின்றார்.

| | பெரிது | நடுத்தரம் | சிறிது |
|---|---|---|---|
| முதலாவது தட்டில் | 6 | 4x | 12 |
| இரண்டாவது தட்டில் | 2 | 6 | 4 |
| மூன்றாவது தட்டில் | 2x | 4 | 8 |

அ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

II. B என்ற வியாபாரி

| | முதலாவது தட்டில் | இரண்டாவது தட்டில் | மூன்றாவது தட்டில் |
|---|---|---|---|
| பெரிது | 8 | 7 | y |
| நடுத்தரம் | y | 4 | 6 |
| சிறிது | 5 | 8 | 5 |

ஆ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

இ. $A+B=\begin{pmatrix}14 & 20 & 17\\ 9 & 10 & 12\\ 12 & 12 & 13\end{pmatrix}$ எனின் x,y இன் பெறுமானத்தைத் தருக.

ஈ. பெரிய அப்பிள் ஒன்று 40 ரூபா. நடுத்தர அப்பிள் ஒன்று 30 ரூபாவும் சிறிய அப்பிள் ஒன்று 25 ரூபா எனில் இரு வியாபாரிகளும் பெரிய அப்பிள் முழுவதும் விற்றால் ஒவ்வொருவரும் பெறும் பணத்தொகையைத் தனித்தனியாகக் காண்க.

03. $y=x^2-4x$ இன் வரைபை வரைவதற்கு x,y ஆகியவற்றின் பெறுமானங்களின் வெற்றிடப் பகுதியை நிரப்புக.

| $x$ | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 5 | 0 | -3 | --------- | -3 | 0 | 5 |

அ. x=2 ஆகும் போது y இன் பெறுமானம் காண்க.

ஆ. வரைபுத்தாளில் x-அச்சு, y- அச்சு வழியே பத்து சிறிய சதுரங்களை ஒரு அலகாகக் கொண்டு சார்பின் வரைபை வரைக.


இ. வரைபின் சமச்சீர் சமன்பாடு யாது?

ஈ. $y=x^2-4x$ இன் இழிவுப் பெறுமானம் யாது?

உ. y=x-3 என்ற நேர்கோட்டை அதே வரைபுத் தாளில் வரைக.

ஊ. $y=x^2-4x$ உம் y=x-3 உம் ஆகியன வெட்டும் x இன் ஆள்கூறு சமன்பாடு $x^2-5x+3=0$ திருப்திப் ஆக்குமெனக் காட்டுக.

04. a. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளில் 48 பேரிடம் கைத்தொலைபேசி இருந்தது. 43 பேர் பெண்களாவர். தொலைபேசி வைத்திராத பெண்கள் எண்ணிக்கை 27 ஆகும். தொலைபேசி வைத்திராத ஆண்களின் எண்ணிக்கை 35 ஆகும். இத்தரவுகளை தரப்பட்ட வெண் உருவில் குறித்துக் காட்டுக.




அ. தொலைபேசி வைத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை யாது?

ஆ. தொலைபேசி இல்லாத ஆண்களின் பகுதியை வென் உருவில் நிழற்றிக் காட்டுக.

இ. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

b. அ. வானூர்தி ஒன்றினால் எதிரிகள் முகாமுக்கு குண்டுகள் போடப்பட்டன. குண்டுகள் எதிரி முகாமுக்குள் சரியாக விழுவதற்கான நிகழ்தகவு 4/5 ஆகும். அடுத்தடுத்த இரு குண்டுகள் போடப்பட்டன. எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான அல்லது விழாதிருப்பதற்கான நிகழ்ச்சியைக் காட்டும் மரவரிப்படம் ஒன்று தருக.

1. இரு குண்டுகளும் எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

2. ஒரு குண்டு மட்டும் எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

3. குறைந்தபட்சம் ஒரு குண்டேனும் எதிரி முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

05. அ. அடியின் ஆரை 2r ஆகவும் உயரம் h கொண்ட உருளை வடிவத் திண்மத்தின் கனவளவு π,r,h இல் தருக.

ஆ. உருளை வடிவப் பகுதியில் ஆரை r ஆகவுள்ள அரைக்கோணப் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு πr இல் தருக.

இ. ஆரை 2r ஆகவும் உயரம் a ஆகவும் கொண்ட கூம்பின் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு π,r,a இல் தருக.

ஈ. a=4r ஆகவும் h=6r ஆகவும் இருப்பின் எஞ்சிய உருளைப் பகுதியின் கனவளவு $18\pi r^3$ எனக் காட்டுக.

உ. π=3.14,r=0.7 என்ற மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தி எஞ்சிய உருளைத் திண்மத்தின் கனவளவு யாது?

## பகுதி - C

06. cm, mm அளவிடையும், நேர்விளிம்பும், கவராயம் மட்டும் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி வரைக.

I. PQ=6cm, QR=7.2cm கோணம் $PQR=120^0$ ஆகுமாறு முக்கோணி PQR ஐ அமைக்க. அடிக்கோடு QR ஐ வரைக.

II. பக்கம் QR ஐ Qவில் செங்குத்து வரைக.


III. PQ இன் செங்குத்து இருசம கூறாக்கி வரைக.

IV. இரு நேர் வரைகளும் சந்திக்கும் புள்ளி O எனக் குறித்து OQ ஐ ஆரையாகக் கொண்டு வட்டம் வரைக. ஆரையை அறிந்து எழுதுக.

V. நீங்கள் வரைந்த வட்டத்துக்கும் QR இற்கும் உள்ள தொடர்பு.

07. அ. ஒரு வட்ட நாற்பக்கல் எதிர்க்கோணச் சோடி பற்றிய தொடர்பைக் காட்டும் தேற்றத்தை எழுதுக.

ஆ. உருவில் AB ஓர் விட்டம். AC ஓர் நாண். கோணம் CAB இன் இருசம கூறாக்கி AP ஆகும். AP=DP ஆக இருக்குமாறு நாண் AC ஆனது D வரை நீட்டப்பட்டுள்ளது. பின்வருவனவற்றை நிறுவுக.




I. கோணம் CPB=180-2x


II. கோணம் APD=180-2x

III. கோணம் $CPD=90^0$

IV. $\Delta APB=\Delta DPC$

09. a. நடுப்புள்ளித் தேற்றத்தின் மறுதலைத் தேற்றத்தைக் கூறுக.

1. உருவில் AB, AC இன் நடுப்புள்ளிகள் முறையே P,Q ஆகும். BC=CD வரை நீட்டப்படுமாறு AC ஆனது E ஆரை நீட்டப்படுவது CS=ES ஆகும். உருவை வரைந்து தரவுகளைக் குறிக்க.





2. $PQ//BC$ என நிறுவுக.

3. $CD//SR$ எனின் DR=ER என நிறுவுக.

4. PQRS ஓர் இணைகரமாகும்.

10. DB என்பது கிடைத்தளம் ஆகும். DC என்பது 20 m உயரமான கட்டடத்தில் C என்ற யன்னல் உண்டு. அதற்கு எதிரே BA என்ற மாடிக்கட்டடம் உண்டு.

I. உருவைப் பிரதி செய்து C இல் இருந்து பார்க்கும்போது மாடிக்கட்டட உச்சி A இன் ஏற்றக்கோணம் $45^0$ உம், அதன் அடி B இன் இறக்கக் கோணம் $35^0$ உம் எனக் குறிக்க.





II. DB இன் தூரம் என்ன?

III. AB இன் உயரம் என்ன?

IV. D இலிருந்து உச்சி A ஏற்றக்கோணம் (θ) யாது?





கைதடி லயன்ஸ் கழகத் தலைவராக நியமிக்கப்பட்ட லயன்ஸ் து.மகேந்திரனின் பதவியேற்பு நிகழ்வு கைதடி ஆயுர்வேத வைத்தியசாலை நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பதவியேற்ற மகேந்திரன் கௌரவிக்கப்படுவதையும், திருமதி மகேந்திரன் பெண் ஒருவருக்கு கண்ணாடி வழங்குவதையும் கலந்து கொண்டவர்களையும் காணலாம். (51)

# படி உற்பத்தியை மேம்படுத்த அமைச்சர் தலைமையில் ஆராய்வு



(யாழ்ப்பாணம்)

உள்ளூரில் கிடைக்கப் பெறுகின்ற பழங்களைப் பதப்படுத்தி அவற்றின் ஊடாக பழப் பானம் மற்றும் உணவுசார்ந்த உற்பத்திகளை முன்னெடுப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதன்போது, யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தில் அந்தந்த பருவகாலங்களில் கிடைக்கப் பெறுகின்ற பழ வகைகளான மாம்பழம், பலாப் பழம், விளாம்பழம் மற்றும் எலுமிச்சை பழம் என்பனவற்றைக் கொண்டு பான வகைகள் உள்ளிட்ட உணவுசார்ந்த உற்பத்திகளை முன்னெடுப்பது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அந்தவகையில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து பனை ஆராய்ச்சி நிறுவனமும் இணைந்து இவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுப்பது குறித்து ஆராயப்பட்டது.

அதன்படி இவ்வாறான பருவகாலங்களில் கிடைக்கப் பெறுகின்ற பழவகைகளை ஆய்வுகளுக்குட்படுத்தி அதன்பின் பதாக சுத்தம், சுகாதாரமானதாகவும் மருத்துவ குணாம்சங்களைக் கொண்டதாகவும் சகல வயதினருக்கும் ஏற்ற வகையிலும் ஆரோக்கியமான தயாரிப்புக்களை முன்னெடுப்பதற்கு அனைவரும் முழுமையான பங்களிப்பை வழங்க வேண்டுமென அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இவ்வாறான செயற்றிட்டங்களை கமநல மற்றும் விவசாயத் திணைக்களங்களினது பிரதிநிதிகளையும் உள்ளடக்கி முன்னெடுக்க வேண்டுமென்பதுடன் ஏற்கனவே இயங்கி வருகின்ற பழம்சார்ந்த தனியார் உற்பத்தி தொழிற்றுறையாளர்களது ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது முக்கியமானது என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இத்திட்டத்தை விரைவில் தொடங்குவதற்கான திட்ட அறிக்கையினை தமக்கு சமர்ப்பிக்குமாறும் துறைசார்ந்தோருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

இதன்போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் இரட்ணம் மலால, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதிப்பணிப்பாளர் சிவகெங்காதரன், தொழிற்துறை நிபுணர் நகுலேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்

# இளைஞர்களின் செயற்பாட்டால் விசனமடையும் மக்கள்

வடவரணி பேருந்து தரிப்பிடத்தில மதியவேளைகளில் இளைஞர் கோஸ்டி ஒன்று சோடா, மிக்சர் போன்ற உணவுப் பொருட்களை சாப்பிட்டு விட்டு படுத்துறங்குவதைக் காணமுடிகிறது.

இதனால் பிரயாணம் செய்ய வரும் பயணிகள் பாடசாலை மாணவ மாணவிகள் நிழல் இல்லாத நிலையில் வெயிலில் நின்று அருகில் உள்ள வர்த்தக நிலையத்தில் நின்றும் பிரயாணம் செய்ய வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் இத்தனை வருடங்களாக பஸ்தரிப்பிடம் இல்லாத நிலையில் நலன்விரும்பி ஒருவரின் முன்மாதிரியான செயற்பாட்டால் தனது சொந்தச் செலவில் இவ் பேருந்து தரிப்பிடம் அண்மையில் அமைக்கப்பட்டது. அப்படியான சூழலில் இவ் விணையர் கோஸ்டியால் பயணிகள் பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றனர்.

எனவே இவ்விளைஞர்களைத் தட்டிக்கேட்க யாரும் துணிவில்லாத நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் பேருந்து தரிப்பிடத்தை கண்காணிக்க வேண்டுமென பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். (150)

# புல்வெளி செபஸ்தியார் பெருவிழா ஆரம்பம்

புதுமைகள் பல கொண்ட புல்லாவெளி புனித செபஸ்ரியார் ஆலயப் பெருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு ஆரம்பமானது. திருவிழாத்திருப்பலி வணக்கத்துக்குரிய அருட்திரு அன்ரனி தாஸ் அவர்களினால் ஒப்புக் கொடுக்கப்பட்டது. திருவிழாத் திருப்பலியினைத் தொடர்ந்து புனித செபஸ்ரியாரின் திருப்பவனி இடம்பெற்று புனிதரின் ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

பெரும் திரளாகப் பொது மக்கள் நாலாபாகத்திலிருந்தும் வருகை தந்தனர்.

குறிப்பாக குருநகர், கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, குடத்தனை, தாழையடி ,செம்பியன்பற்று, போன்ற இடங்களில் இருந்தும் இன்னும் பல இடங்களில் இருந்தும் பக்தர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (48)

# கொழும்பிலிருந்து யாழ்.வந்த பேருந்து புத்தளத்தில் விபத்து

## 10 பயணிகள் காயம்



(புத்தளம்)

புத்தளம் – முந்தல் பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 10 பேர் காயமடைந்துள்ளனர். நேற்று அதிகாலை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து பேருந்து லொறியொன்றுடன் மோதியுள்ளது.

விபத்துக்குள்ளான பேருந்துக்குப் பின்னால் பயணித்த மற்றுமொரு பேருந்தும் அதனுடன் மோதியுளளது

விபத்தில் காயமடைந்தவர்கள் சிலாபம் மற்றும் முந்தல் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பேருந்தில் பயணித்தவர்களே விபத்தில் காயமடைந்துள்ளனர். விபத்துத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பூங்காவனத் திருவிழா

(கரணவாய்)

கரணவாய் அண்ணாசிலையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பூங்காவனத் திருவிழா இன்று 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. (18)


வாழ்க வளமுடன்

பெயர் : வ.ஹபீஷன்
முகவரி : சுதுமலை தெற்கு மானிப்பாய்



அகவை 1 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்

# அணு ஆயுத விவகாரம் நாடகமாடும் அமெரிக்கா

## குற்றஞ்சாட்டுகிறது ஈரான்



அணு ஆயுத விவகாரத்தில் இஸ்ரேல் மிக மோசமாக நடந்து கொள்வதைப் போலவும் அதை அமெரிக்கா தடுப்பது போலவும் நாடகமாடுவதாக ஈரான் குற்றஞ் சாட்டியுள்ளது.

ஈரானில் அணு ஆயுதங்கள் தயாரிக்கப்படும் விவகாரத்தில், இஸ்ரேல் ஈரான் மீது போர் தொடுக்க குறியாய் இருந்துள்ளது. ஆனால் அமெரிக்காவோ பொறுமை காத்து இறுதியில் பொருளாதாரத் தடை விதித்திருந்தது.

தற்போது ஈராக் விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடு அதிகளவில் இருந்துள்ளது இதனை முதலில் ஈராக் விரும்பினாலும் பின்னர் அதைக் கடுமையாக எதிர்க்க தொடங்கியுள்ளது.

இதுகுறித்து ரம்ஜான் இப்தார் விழாவில் மதத் தலைவர் ஆயத் துல்லா கொமேனி பேசுகையில், இஸ்ரேல் ஈரானைத் தாக்க முயல்வது போல நடிக்கிறது. அமெரிக்காவோ அதை தடுப்பது போல மிகப்பெரிய நாடகத்தை அரங்கேற்றுகின்றது.

ஆனால் இந்தத் தாக்குதலுக்கு மிகுதியாக பணம் செலவாகும் என்பதால் இருவருமே ஈரான் மீது தாக்குதல் நடத்தவில்லை என்றும் வேறு வழியில்லாமல் பொருளாதார தடை என்ற ஆயுதத்தை கையில் தூக்கியுள்ளன எனவும் கூறியுள்ளார்.

# ஹெலிகொப்டர் விபத்து 16 இராணுவத்தினர் பலி

(ஹனோய்)

தென் கிழக்கு ஆசிய நாடுகளில் ஒன்றான வியட்னாமில் நேற்று முன்தினம் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இராணுவ ஹெலிகொப்டரில் திடீரென இயந்திர கோளாறு ஏற்பட்டு, கிராமம் ஒன்றில் விழுந்து நொறுங்கியதில், அதிலிருந்த இராணுவ வீரர்கள், 16 பேர் இறந்தனர். நொறுங்கிய அந்த, "எம்.ஐ., 171 விமானம், ரஷ்ய தயாரிப்பாகும்.

இயந்திர கோளாறு தான் விபத்திற்குக் காரணம் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. அது போல், மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலிருந்து, புருனே நாட்டுக்கு, 109 பயணிகளுடன் சென்ற விமானமொன்று, புருனேயின், பந்தர் செரி பெகவான் விமான நிலையத்தில் தரையிறங்கும் போது திடீரென வழுக்கிச் சென்று விபத்துக்கு உள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

# சிக்காகோவில் துப்பாக்கிச் சூடு 14 பேர் பலி 80 பேர் காயம்

(சிகாகோ)



அமெரிக்காவின் மூன்றாவது பெரிய நகரமான சிக்காகோவில் வார விடுமுறை தினத்தன்று நடைபெற்ற துப்பாக்கி சூட்டில் 14 பேர் பலியானதுடன் 80 பேர் காயமடைந்தனர்.

அந்நகரில் கடந்த வியாழன் மாலையிலிருந்து திங்கள் அதிகாலை வரை ஐம்பதுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் நடைபெற்றன. இது ஒரு போதும் ஏற்கத்தக்கதல்ல என்று தெரிவித்த சிக்காகோ நகர பொலிஸ் கண்காணிப்பாளரான கேரி மெக்கார்த்தி துப்பாக்கி உபயோகிப்பவர்கள் பெருகியதே இச்சம்பவங்களுக்கு முக்கிய காரணம் என பழி சுமத்தினார். துப்பாக்கிச் சூடு நடத்திய 5 பேரைப் பொலிஸார் சுட்டதில் 2 பேர் கொல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மூன்று இடங்களில் பொலிஸார் துப்பாக்கியால் சுட்டவர்களை சுற்றிவளைத்த போது, அவர்கள் பொலிஸாரை நோக்கி துப்பாக்கியால் சுட ஆரம்பித்தனர். இதனாலேயே பொலிஸார் அவர்களை சுட நேர்ந்ததாக அவர் கூறினார். ஞாயிறன்று மட்டும் அந்நகரில் 21 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சீனாவுடன் பேச்சுவார்த்தை ஜப்பான் தயாராகவுள்ளது



சீனாவுடன் பேச்சு வார்த்தை நடத்த தயாராக இருப்பதாக ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவின் கான்பெர்ராவுக்கு சென்றுள்ள அவர் அங்கு நாடாளுமன்ற கூட்டு கூடத்தில் பேசும் போது மேலும் கூறியதாவது, ஜப்பானும் அவுஸ்ரேலியாவும் சேர்ந்து புதிய பொருளாதார கொள்கை, இராணுவ உடன்படிக்கைகளை ஏற்படுத்த வேண்டும்.

இரு நாடுகளும் முன்னேற்றப் பாதையில் எல்லை கடந்து செல்ல வேண்டும் என தெரிவித்தார்.

# அஸ்ரப் கானி வெற்றி



ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி தேர்தலின் இரண்டாம் சுற்று வாக்களிப்பில் அஸ்ரப் கானி வெற்றிப்பெற்றுள்ளார். இரண்டாம் சுற்று வாக்களிப்பு நிறைவடைந்துள்ள நிலையில் அஸ்ரப் கானி முன்னிலை பெற்றார்.

அப்துல்லாவுக்கும் அஸ்ரப் கானிக்கும் இடையில் போட்டி நிலவியது.

இந்த நிலையில், கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்ற இரண்டாம் சுற்று வாக்களிப்பின் முடிவில் அஸ்ரப் கானி 50 சதவீத்திற்கும் அதிகமான வாக்குகள்ளப் பெற்றுள்ளார். அப்துல்லாவுக்கு 45 சதவீத வாக்குகளே கிடைக்கப்பெற்றன.

# கச்சதீவு விவகாரம் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் தேவையில்லை

## மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவிப்பு

(மதுரை)

கச்சத்தீவு ஒப்பந்தத்தை இலங்கை மீறுவதால், அதை மறுபரிசீலனை செய்து, மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை பறிபோகாத வகையில் புதிய ஒப்பந்தம் செய்ய வேண்டும். இதை நான் மத்திய அமைச்சராக இருக்கும்போதே வலியுறுத்தி வருகிறேன் என முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

மதுரையில் நேற்று முன்தினம் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது, மத்தியில் பா.அரசு அமைந்த ஒரே மாதத்தில் பல மடங்கு விலைவாசி ஏறி உள்ளது. தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினரின் தாக்குதல் அதிகரித்துள்ளது. கச்சத்தீவு ஒப்பந்தத்தை இலங்கை மீறுவதால், அதை மறுபரிசீலனை செய்து, மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமை பறிபோகாத வகையில் புதிய ஒப்பந்தம் செய்யவேண்டும்.

கச்சத்தீவு விவகாரத்தைப் பொருத்தவரை, உச்சநீதிமன்றில் மத்திய அரசு தாக்கல் செய்துள்ள மனுவை, காங்கிரஸ் அரசு எடுத்த முடிவு என காரணம் சொல்லி பா.ஜ.க. தட்டிக்கழிக்ககூடாது. மீனவர் பிரச்சினைக்கு தீர்வுகாண முந்திய காங்கிரஸ் ஆட்சியில் இருநாட்டு பேச்சுவார்த்தை நடந்தது. இதை தொடர்ந்து நடத்தி தீர்வுகாண வேண்டும் என அவர் கூறினார்.

# பிரஹ்மோஸ் ஏவுகணை பரிசோதனை வெற்றி



(புவனேஸ்வர்)

மணிக்கு 290 கிலோ மீற்றர் வேகத்தில் சீறிப்பாய்ந்து எதிரிகளின் இலக்கைத் தாக்கி அழிக்கும் வல்லமை கொண்ட மேம்படுத்தப்பட்ட "பிரஹ்மோஸ்" ஏவுகணையை இந்தியா நேற்று வெற்றிகரமாக பரிசோதித்தது.

300 கிலோ எடையுள்ள போராயுதங்களைச் சுமந்து செல்லும் ஆற்றல் கொண்ட இந்த ஏவுகணை முந்தைய "பிரஹ்மோஸ்" ரக ஏவுகணைகளைக் காட்டிலும் வடிவமைப்பிலும், செயறற்றனிலும் மேம்படுத்தப்பட்டது ஆகும். பறக்கும் குறியீட்டு இலக்கை பொறுத்த வரை 3 மடங்கு கூடுதல் சக்தியுடனும், இயந்திர உந்து சக்தியில் முந்தைய "பிரஹ்மோஸ்" ஏவுகணைகளை விட 9 மடங்கு அதிக ஆற்றலுடனும் சீறிப்பாய்ந்து செல்லும் இந்த ஏவுகணை, ஒடிசாவின் கடல் பகுதியில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டதாக பாதுகாப்பு துறையின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

# எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு காங்கிரஸ்க்கு உரிமையுண்டு



(புதுடெல்லி)

மக்களவையின் எதிர்க்கட்சி வரிசையில் அதிக இடங்களைப் பிடித்துள்ள கட்சி, தேர்தலுக்கு முந்தையக் கூட்டணி என்ற வகையில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற காங்கிரஸ் கட்சிக்கு உரிமை உள்ளது என்று காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி குறிப்பிட்டார்.

இப் பிரச்சினை குறித்து இதுவரை பேசாமல் இருந்த சோனியா காந்தி, நேற்று முன் தினம் கூறியதாவது,

அதிக எண்ணிக்கையிலான எம்.பி.க்களை பெற்ற கட்சி காங்கிரஸ். அதேபோல் தேர்தலுக்கு முன்பே கூட்டணி அமைத்துள்ளோம். அந்த வகையில் பார்த்தாலும் அதிக இடங்களைப் பெற்றுள்ள கூட்டணி எங்களுடையது. இந்த அடிப்படையில்தான் எதிர்க்கட்சி தலைவர் பதவியைத் தரவேண்டும் என்று கோரி வருகிறோம்.

தேர்தல் தோல்வியை மறந்து, பதவிக்கு ஆசைப்படுவதாகக் கூறுகிறார்கள். இது உண்மையில்லை. தேர்தல் தோல்வியை ஒப்புக் கொள்கிறோம்.

அதை நாங்கள் உணர்ந்துள்ளோம் என்றார் சோனியா காந்தி. எனினும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி குறித்து சபாநாயகர்தான் முடிவு செய்வார் என்று பா.ஜ கூறுகிறது. கட்சியின் உத்தரவு படியே சபாநாயகர் நடந்து கொள்வார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை காங்கிரஸ் கட்சிக்கு தரக்கூடாது என்பதற்காக அவர்களின் நடவடிக்கைகள் இது என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் கமல்நாத் கூறினார்.

# க.பொ.த. (உ/த) பரீட்சைக்கான நேர அட்டவணை

| | උදය වරුව / முற்பகல் / Morning Session | සවස් වරුව / பிற்பகல் / Afternoon Session |
|---|---|---|
| | අගෝස්තු 05 අඟහරුවාදා / ஆகஸ்ட் 05 செவ்வாய்க்கிழமை / Tuesday, 05th August | |
| 1 | 0830 - 1130<br>10 සංයුක්ත ගණිතය I / இணைந்த கணிதம் I / Combined Mathematics I<br>0830 - 1030<br>78 අරාබි I / அரபு I / Arabic I | 1230 - 1430<br>09 ජීව විද්‍යාව I / உயிரியல் I / Biology I<br>21 ආර්ථික විද්‍යාව I / பொருளியல் I / Economics I<br>79 මැලේ I / மலாய் I / Malay I |
| | අගෝස්තු 06 බදාදා / ஆகஸ்ட் 06 புதன்கிழமை / Wednesday, 06th August | |
| 2 | 0830 - 1030<br>52 නර්තනය (දේශීය) I / நாட்டியம் (தேசிய) I / Dancing (Indigenous) I<br>53 නර්තනය (භරත) I / நாட்டியம் (பரதம்) I / Dancing (Bharatha) I<br>54 පෙරදිග සංගීතය I / கீழைத்தேய சங்கீதம் I / Oriental Music I<br>55 කර්ණාටක සංගීතය I / கர்நாடக சங்கீதம் I / Carnatic Music I<br>56 බටහිර සංගීතය I / மேலைத்தேய சங்கீதம் I / Western Music I | 1230 - 1530<br>09 ජීව විද්‍යාව II / உயிரியல் II / Biology II<br>21 ආර්ථික විද්‍යාව II / பொருளியல் II / Economics II<br>79 මැලේ II / மலாய் II / Malay II |
| | අගෝස්තු 07 බ්‍රහස්පතින්දා / ஆகஸ்ட் 07 வியாழக்கிழமை / Thursday, 07th August | |
| 3 | 0830 - 1130<br>10 සංයුක්ත ගණිතය II / இணைந்த கணிதம் II / Combined Mathematics II<br>52 නර්තනය (දේශීය) II / நாட்டியம் (தேசிய) II / Dancing (Indigenous) II<br>53 නර්තනය (භරත) II / நாட்டியம் (பரதம்) II / Dancing (Bharatha) II<br>78 අරාබි II / அரபு II / Arabic II | 1230 - 1430<br>08 කෘෂි විද්‍යාව I / விவசாய விஞ்ஞானம் I / Agricultural Science I<br>48 ග්‍රීක හා රෝම ශිෂ්ටාචාරය I / கிரேக்க உரோம நாகரிகம் I / Greek and Roman Civilization I<br>83 රුසියන් I / ருசியன் I / Russian I |
| | අගෝස්තු 08 සිකුරාදා / ஆகஸ்ட் 08 வெள்ளிக்கிழமை / Friday, 08th August | |
| 4 | 0830 - 1030<br>32 ව්‍යාපාර අධ්‍යයනය I / வணிகக் கல்வி I / Business Studies I<br>82 ජර්මන් I / ஜேர்மன் I / German I<br>86 චීන I / சீன மொழி I / Chinese I<br>0830 - 1130<br>51 චිත්‍ර කලාව I / சித்திரக்கலை I / Art I | 1400 - 1700<br>54 පෙරදිග සංගීතය II / கீழைத்தேய சங்கீதம் II / Oriental Music II<br>55 කර්ණාටක සංගීතය II / கர்நாடக சங்கீதம் II / Carnatic Music II<br>56 බටහිර සංගීතය II / மேலைத்தேய சங்கீதம் II / Western Music II |
| | අගෝස්තු 09 සෙනසුරාදා / ஆகஸ்ட் 09 சனிக்கிழமை / Saturday, 09th August | |
| 5 | 0830 - 1030<br>01 භෞතික විද්‍යාව I / பௌதிகவியல் I / Physics I<br>0830 - 1130<br>32 ව්‍යාපාර අධ්‍යයනය II / வணிகக் கல்வி II / Business Studies II<br>51 චිත්‍ර කලාව II / சித்திரக்கலை II / Art II<br>82 ජර්මන් II / ஜேர்மன் II / German II | 1230 - 1530<br>71 සිංහල I / சிங்களம் I / Sinhala I<br>72 දෙමළ I / தமிழ் I / Tamil I |
| | අගෝස්තු 11 සඳුදා / ஆகஸ்ட் 11 திங்கட்கிழமை / Monday, 11th August | |
| 6 | 0830 - 1130<br>08 කෘෂි විද්‍යාව II / விவசாய விஞ்ஞானம் II / Agricultural Science II<br>48 ග්‍රීක හා රෝම ශිෂ්ටාචාරය II / கிரேக்க உரோம நாகரிகம் II / Greek and Roman Civilization II<br>83 රුසියන් II / ருசியன் II / Russian II<br>86 චීන II / சீன மொழி II / Chinese II | 1230 - 1430<br>28 ගෘහ ආර්ථික විද්‍යාව I / மனைப் பொருளியல் I / Home Economics I |
| | අගෝස්තු 12 අඟහරුවාදා / ஆகஸ்ட் 12 செவ்வாய்க்கிழமை / Tuesday, 12th August | |
| 7 | 0830 - 1130<br>01 භෞතික විද්‍යාව II / பௌதிகவியல் II / Physics II<br>51 චිත්‍ර කලාව III / சித்திரக்கலை III / Art III | 1230 - 1530<br>71 සිංහල II / சிங்களம் II / Sinhala II<br>72 දෙමළ II / தமிழ் II / Tamil II |
| | අගෝස්තු 13 බදාදා / ஆகஸ்ட் 13 புதன்கிழமை / Wednesday, 13th August | |
| 8 | 0830 - 1030<br>24 තර්ක ශාස්ත්‍රය සහ විද්‍යාත්මක ක්‍රමය I / அளவையியலும் விஞ்ஞான முறையும் I / Logic & Scientific Method I | 1230 - 1530<br>28 ගෘහ ආර්ථික විද්‍යාව II / மனைப் பொருளியல் II / Home Economics II |
| | අගෝස්තු 14 බ්‍රහස්පතින්දා / ஆகஸ்ட் 14 வியாழக்கிழமை / Thursday, 14th August | |
| 9 | 0830 - 1030<br>02 රසායන විද්‍යාව I / இரசாயனவியல் I / Chemistry I<br>75 සංස්කෘත I / சமஸ்கிருதம் I / Sanskrit I<br>81 ප්‍රංශ I / பிரெஞ்சு I / French I | 1230 - 1530<br>24 තර්ක ශාස්ත්‍රය සහ විද්‍යාත්මක ක්‍රමය II / அளவையியலும் விஞ்ஞான முறையும் II / Logic & Scientific Method II |
| | අගෝස්තු 15 සිකුරාදා / ஆகஸ்ட் 15 வெள்ளிக்கிழமை / Friday, 15th August | |
| 10 | 0830 - 1030<br>14 සිවිල් තාක්ෂණවේදය I / குடிசார் தொழில்நுட்பவியல் I / Civil Technology I<br>15 යාන්ත්‍රික තාක්ෂණවේදය I / பொறிமுறைத் தொழில்நுட்பவியல் I / Mechanical Technology I<br>16 විදුලිය, ඉලෙක්ට්‍රොනික හා තොරතුරු තාක්ෂණවේදය I / மின், இலத்திரன், தகவல் தொழில்நுட்பவியல் I / Electrical, Electronic and Information Technology I<br>17 ආහාර තාක්ෂණවේදය I / உணவுத் தொழில்நுட்பவியல் I / Food Technology I<br>18 කෘෂි තාක්ෂණවේදය I / விவசாயத் தொழில்நுட்பவியல் I / Agro Technology I<br>19 ජෛව සම්පත් තාක්ෂණවේදය I / உயிர் வளத் தொழில்நுட்பவியல் I / Bio-Resource Techonology I<br>74 පාලි I / பாளி I / Pali I | 1400 - 1700<br>25 A ඉන්දීය ඉතිහාසය II / இந்திய வரலாறு II / History of India II<br>25 B යුරෝපා ඉතිහාසය II / ஐரோப்பிய வரலாறு II / History of Europe II<br>25 C නූතන ලෝක ඉතිහාසය II / நவீன உலக வரலாறு II / History of Modern World II |
| | අගෝස්තු 16 සෙනසුරාදා / ஆகஸ்ட் 16 சனிக்கிழமை / Saturday, 16th August | |
| 11 | 0830 - 1130<br>02 රසායන විද්‍යාව II / இரசாயனவியல் II / Chemistry II<br>75 සංස්කෘත II / சமஸ்கிருதம் II / Sanskrit II<br>81 ප්‍රංශ II / பிரெஞ்சு II / French II | 1230 - 1430<br>23 දේශපාලන විද්‍යාව I / அரசியல் விஞ்ஞானம் I / Political Science I |
| | අගෝස්තු 18 සඳුදා / ஆகஸ்ட் 18 திங்கட்கிழமை / Monday, 18th August | |
| 12 | 0830 - 1130<br>13 සාමාන්‍ය ඉංග්‍රීසි I / பொது ஆங்கிலம் I / General English I | 1230 - 1500<br>13 සාමාන්‍ය ඉංග්‍රීසි II / பொது ஆங்கிலம் II / General English II |

(மிகுதி நாளை...)

# அனர்த்தங்களை தவிர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும்

## யாழ். அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய வடமாகாணத்தில் நோய்கள், விபத்துக்கள், தற்கொலைகள், கொலைகள், வாள்வெட்டுக்கள் மற்றும் கலாசார சீரழிவுகள் என்பன மேலோங்கி விட்டன.

இதனால் ஊனமுற்றோர் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது.

எனவே சகல ஆபத்துக்களையும் தணிப்பதற்கு அரசாங்க அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட முன்வரவேண்டும் என யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் ச.ரவி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தி அலுவலர்களுக்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான விசேட செயலமர்வு யாழ். செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது உதவிப் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவி மேலும் பேசுகையில், 2012 முதல் 2020 வரை ஆபத்து குறைப்பினை மையமாகக் கொண்டு செயற்படுகின்றோம்.

ஆபத்துக்களை குறைப்பதற்கு 1டொலர் முதலீடு செய்தால், 7டொலர்களை சேமிக்க முடியும் என்ற அடிப்படையில் செயற்படலாம்.

யாழ். மாவட்டத்தில் மட்டும் 1059 வெள்ள அனர்த்த பிரதேசங்களை இனங்கண்டுள்ளோம்.

இன்றைய காலத்தில் வெள்ள அனர்த்தத்திற்கு முன்னர் நாம் ஓலை தகரம் என்பன மக்களுக்கு இலவசமாகக் கொடுத்தால் அதனை பொருத்தித் தருமாறும் எம்மைக் கேட்கின்றனர்.

இன்று இளைஞர் முதல் நடுத்தர மூத்த வயதினர்வரை சோம்பேறிகளாகிவிட்டனர்.

இந்த மனநிலை மாற்றும் அடைந்தால் மட்டும் உண்மையான அபிவிருத்திகளை பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார். (92)

# கருத்து சுதந்திரத்தை கட்டுப்படுத்துகிறது அரசு

## சிவில் அமைப்புகள் கண்டனம்

பாதுகாப்பு அமைச்சு, அரசுசாரா அமைப்புகளின் செய்தியாளர் மாநாடுகள் மற்றும் ஊடக அறிக்கைகள் போன்றவற்றை தடைசெய்யும் விதத்தில் விடுத்துள்ள உத்தரவு கருத்துச் சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் நடவடிக்கை என இலங்கையின் சிவில் அமைப்புகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் இந்த உத்தரவு, செயற்படும் ஜனநாயக நாடு என்ற வகையில் இலங்கைக்கும் அதன் சிவில் சமூகத்திற்கும் நேரடி அச்சுறுத்தலாகவும் சவாலாகவும் அமைந்துள்ளது என மாற்றுக்கொள்கை நிலையத்தின் நிறைவேற்று இயக்குநர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

பேச்சு மற்றும் கருத்து,ஒன்றுகூடல் சுதந்திரங்கள் மீது இது ஏற்படுத்தக்கூடிய மோசமான பாதிப்புகள், இந்த அரசாங்கம் ஜனநாயக ஆட்சிமுறையொன்றிற்கான அடிப்படையான விடயங்களை விளங்கிக்கொள்ள தயாராகவில்லை என்பதை புலப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஐ.நா. ஆராயும்

(கொழும்பு)

அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு இலங்கை அரசாங்கம் விடுத்துள்ள எச்சரிக்கை குறித்து ஐ.நா. கவனமாக ஆராயும் என்று, ஐ.நா. பொதுச்செயலரின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில், இந்த விவகாரம் குறித்து கேள்வி எழுப்பப்பட்டபோதே இவ்வாறு பதிலளித்தார்.

## இந்திய, சர்வதேச...

முற்பகல் 11 மணியளவில் யாழ். ரில்கோ விடுதியில் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு சந்திப்பு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்தியாவும், மேற்குலகும் முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளை தென்னாபிரிக்கா குழப்பாது என ரமபோஷ எம்மிடம் உறுதியளித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டதற்கிணங்க எமது நாட்டின் அனுபவத்தைக் கொண்டு எம்முடன் கலந்து செயற்பட தயாராக இருப்பதாகத் தெரிவிததனர்.

13ஆவது சீர்திருத்த சட்டம் யுத்தத்தை காரணம் காட்டி முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை வடக்கு மாகாணசபைத் தேர்தலைத் தொடர்ந்து காணி, பொலிஸ் அதிகாரம் போன்றவற்றை வழங்க முடியாதென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் காணி சுவீகரிப்பு அத்துமீறிய மீன்பிடி, பெண்களுக்கான பாதுகாப்பு, அண்மைய முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்கள், குறித்து தென்னாபிரிக்க குழுவிடம் எடுத்துக்கூறிய நாம், வடக்கு மாகாண பிரதம செயலாளர் முதலமைச்சரின் அங்கீகாரத்துடனேயே நியமிக்கப்படவேண்டுமென கூறியதாகவும் தெரிவித்தார். (பா, 25)

## ஆஸி. நோக்கிச்...

றத்தில் நேற்று உறுதிமொழி அளித்திருக்கிறது.

இந்த 153 பேரில் பெரும்பான்மையானவர்கள் தமிழர்கள். தாங்கள் இலங்கைக்குத் திரும்பிச் சென்றால் வழக்குகளைச் சந்திக்க நேரிடும் என்று அவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

## அரச...

முன்னர் விதிமுறை கொடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு கொடுக்கப்பட்ட விதிமுறைகளில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை. எனவே பழைய விதிமுறைகளை நினைவில் வைத்துக் கொண்டு செயற்படுமாறு நினைவூட்டியதாகத் தெரிவித்தார்.

## தெரிவுக்குழுவில்...

கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் அவர்கள் இவ் அழைப்புக்களை தட்டிக் கழித்தே வருகின்றனர். கடந்த காலங்களிலும் இவ்வாறு கிடைக்கப்பெற்ற நல்லவாய்ப்புக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தவறவிட்டிருந்தனர் என்பதையும் ரமபோஷவிடம் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது வலியுறுத்தினார்.

கடந்த காலங்களைப் போல் வாய்ப்புக்களை தவறவிட்டு எமது மக்களை அழிவுக்கும் துன்ப துயரங்களுக்குள் தள்ளிவிடாது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைவதற்கு அவர்களை வலியுறுத்த வேண்டுமெனவும் கூறியதோடு, தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெளிவுபடுத்தினார்.

முன்னதாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த தென்னாபிரிக்காவின் பதில் ஜனாதிபதியும் இலங்கைக்கான விசேட பிரதிநிதியுமான சிறில் ரமபோஷவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் சந்திரசிறி ஆகியோர் வரவேற்றனர்.

உலங்குவானூர்திகளில் வருகைதந்த சிறில் ரமபோஷ தலைமையிலான குழுவினர் துரையப்பா விளையாட்டரங்கிற்கு வருகைதந்த சமயம் அவர்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் சந்திரசிறி, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் தென்னாபிரிக்காவின் பதில் ஜனாதிபதி ரமபோஷவிற்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வரவேற்றனர்.

## இனப்பிரச்சினை...

தென்னாபிரிக்கப் பிரதிநிதிகளுடனான இந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமானதாக அமைந்தது.

அவர்கள் தமது நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகளை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வந்தனர் என்பது குறித்து எமக்கு விளக்கினர்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வை எட்டுவதற்கு தாம் முழு ஆதரவை வழங்குவோம் என்றும் தென்னாபிரிக்க குழுவினர் உறுதியளித்தனர்.

ஏற்கனவே தென்னாபிரிக்காவில் நாம் தீர்வு முயற்சிகள் குறித்து சந்திப்புக்களை நடத்தியிருந்தோம்.

இதன் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பும் அமைந்தது. இந்தப் பேச்சும் எமக்குத் திருப்திகரமாக அமைந்தது.

அவர்கள் தமது நாட்டுப் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்பட்டது என்பது குறித்து விளக்கினர்.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தென்னாபிரிக்கக் குழுவினர் நடுநிலை வகித்தால் நாம் அவர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

இங்கு பல தரப்பட்ட தரப்பினர் இருக்கின்றனர் அவர்களுடனும் விரிவாகப் பேசி ஓர் இணக்கத்திற்கு வருவதே முக்கியமானது என்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் தென்னாபிரிக்க குழு சார்பில் அந்நாட்டு உதவி ஜனாதிபதி சிறில் ரமபோஷ, உதவி வெளிவிவகார அமைச்சர் இப்ராகிப் இஸ்மாயில் இப்ராகிம், தற்போது ரமபோஷவின் சிரேஷ்ட ஆலோசகர் றூத் மேயர், ஐவர் ஜெனின், இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பு பிரதிநிதிகள் சார்பாக சம்பந்தனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## பாப்பரசர்..

ளிப்பார் என்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுபலசேனா இயக்கத்தின் கருத்துக்கு வத்திக்கான் எவ்வித பதிலையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# நவாலியில் திருப்பலி பூசை

(மானிப்பாய்)

நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலின் 19 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். கடந்த 09.07.1995 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சென்ற் பீற்றர்ஸ் மற்றும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயம் மீதான 'லீப்போர் வேட்' தாக்குதலில் இடம்பெயர்ந்த பொது மக்கள் 147 பேர் ஸ்தலத்தில் பலியாகினர்.

மேற்படி தினத்தில் மக்கள் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கிராம அலுவலர்களான (வலி.தென்மேற்கு) அமரர் பிலிப்புப்பிள்ளை கபிரியேல் பிள்ளை, அமரர் ஹேமலதா செல்வராஜா ஆகியோர் ஸ்தலத்தில் பலியாகினர். மேற்படி விமானத் தாக்குதலில் பலியானோர் ஞாபகார்த்தமாக இன்று காலை 5.30 மணியளவில் நவாலி சென்ற் பீற்றர்ஸ் ஆலயத்தில் திருப்பலிப் பூசையும், இன்று மாலை 5.30 மணியளவில் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெறும். (92)

# அகதிகளை நாடு கடத்தும் திட்டத்தில் மாற்றமில்லை

## ஆஸி.பிரதமர் தெரிவிப்பு



அவுஸ்ரேலிய நீதிமன்றம் 153 அகதிகள் நாடு கடத்தப்படுவதற்கு எதிராக இடைக்கால தடையை விதித்தபோதும், அகதிகளை நாடு கடத்தும் தமது திட்டத்தில் மாற்றம் இல்லை என்று அந்நாட்டு பிரதமர் டோனி அபோட் கூறியுள்ளார். தமது அரசாங்கம் சர்வதேச சட்டத்தின்கீழ் தமது கடற்பிரதேசத்திலேயே நடவடிக்கைகளை மேற்கொண்டது என்றும், தம்மை பொறுத்தவரையில் நீண்டகாலமாக நாட்டுக்கு வந்து கொண்டிருக்கும் அகதிப் படகுகளை நிறுத்த வேண்டும் என்பதே நோக்கு என்றும் தெரிவித்துள்ளார்.

153 பேருடன் சென்றுள்ள படகில் தமது 3 வயதுக் குழந்தையான பாப்ரினா இருப்பதாகவும், அவரைக் காப்பாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவருடைய தந்தை அவுஸ்ரேலிய அரசுக்கு கோரிக்கை விடுத்த பின்னரே டோனி அபோட் தமது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளார். இதனிடையே, அவுஸ்ரேலியாவில் இருந்து 41 இலங்கை அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டது குறித்து ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான பேரவை தமது கவலையை வெளியிட்டுள்ளது.

சர்வதேச பாதுகாப்புடன் அகதி ஒருவர் நாடு திரும்புவதை எதிர்க்கவில்லை என்றும் ஐக்கிய நாடுகளின் அகதிகள் பேரவை தெரிவித்துள்ளது.

### தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கான

# உத்தேச பாதுகாப்பு முத்திரை ஐந்து வருடங்களுக்கு இல்லை

ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் அறிமுகப்படுத்தப் படவிருந்த தெரிவுசெய்யப்பட்ட பொருட்களுக்கான உத்தேச பாதுகாப்பு முத்திரை, மேலும் ஐந்து வருடங்களுக்கு கவனத்திற்கொள்ளப்படமாட்டாது என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தின்போதே அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச பாதுகாப்பு முத்திரை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தனதுரையின் போது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இது குறித்து தெரிவிக்கையில், மக்களுக்கான வெற்றி யொன்றை நாடாளுமன்றத்தில் நேற்று பெற்றுக்கொள்ள முடிந்ததாகக் கூறினார்.

ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொருட்கள் மீது அறிமுகப்படுத்தப்படவிருந்த பாதுகாப்பு முத்திரை குறித்து சபையின் கவனத்திற்குக் கொண்டுவந்ததாக அவர் தெரிவித்தார்.

சகல வகையான மென்பான போத்தல்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போத்தல்கள், ஷம்பூ போத்தல்கள் மற்றும் பெக்கட்களில் அடைக்கப்பட்ட ஷம்பு, வகைகள், சவர்க்காரம் உட்பட மேலும் தெரிவுசெய்யப்பட்ட பொருட்களில் பாதுகாப்பு ஸ்டிக்கர் அல்லது பாதுகாப்பு முத்திரையொன்றை ஒட்டுமாறு வர்த்தமானி அறிவித்தல் மூலம் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்ததாக ஹர்ஷ டி சில்வா சுட்டிக் காட்டினார்.

பொருட்களுக்காக மக்கள் செலுத்தும் கட்டணங்களின் அதிகரிப்பு குறித்து தான் இந்த விடயத்தைப் நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாக குறிப்பிட்டார்.

# ஆஸி.திருப்பி அனுப்பியோரில் ஐவர் விளக்கமறியலில்

அவுஸ்ரேலிய அரசாங்கத்தால் இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட இலங்கை அகதிகள் 41 பேர் நேற்றைய தினம் காலி நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட போது அவர்களில் ஐவர் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 27 பேர் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

19 வயதுக்குட்பட்ட 9 சிறுவர்கள் உடன்படிக்கை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவுஸ்ரேலியாவில் எந்தவொரு சலுகைகளும் தமக்கு கிடைக்கவில்லை என நீதிமன்றில் ஆஜரான மக்கள் தெரிவித்துள்ளனர்.

# ஞானசார தேரரால் குர்ஆனுக்கு அவமரியாதை

பொதுபல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் குர்ஆனை அவமரியாதை செய்தார் என முஸ்லிம் சமய விவகார ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிமன்றில் நேற்றைய தினம் இந்த விடயத்தை அவர் அறிவித்துள்ளார்.

ஞானசார தேரர் அண்மையில் ஊடகங்களுக்கு வெளியிட்ட கருத்து முஸ்லிம் மக்களின் புனித நூலான குர்ஆனை அவமரியாதை செய்யும் வகையில் அமைந்திருந்தது என தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டே நீதவான் திலின கமகேயினல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு அமைய முஸ்லிம் சமய விவகார ஆணையாளர் நாயகம், கலபொடத்தே ஞானசார தேரரின் கருத்துக்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

ஞானசார தேரரின் கருத்துக்கள் குர்ஆனை இழிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளதா என விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான், முஸ்லிம் சமய விவகார ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


## பணியாளர்கள் தேவை

*கீழ்வரும் பணியாளர் வெற்றிடங்களுக்கு வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.*

- இயந்திர இயக்குநர்கள்
- இயந்திர உதவியாளர்கள்
- இயந்திர வேலை பழக விரும்புபவர்கள்

KORD, SORD ஆகிய அச்சு இயந்திரங்கள் இயக்கக் கூடிய முன் அனுபவம் வாய்ந்த ஆண் பணியாளர்கள் உடனடி யாகத் தேவைப்படுகின்றனர்.

**தகைமைகள்**

- **தேக ஆரோக்கியம் உடையவராகவும்**
- **இரவு பகல் பணியாற்றக்கூடியவர்களாகவும்**
- **பத்திரிகைத் துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது.**

மேற்படி தகைமைகள் உடையவர்கள் தமது சுயவிபரக் கோவையுடன், அலுவலக நேரத்தில் எமது காரியாலயத்திற்குச் சமுகம் தரவும்

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

தினமுரசு நாளிதழ்
இல.373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.


# ராஜிவ் கொலை வழக்கில் கே.பி. பதிலளிக்க வேண்டும் இந்திய அரசு

## சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேச் பொறுப்பாளராக செயற்பட்ட கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை விசாரிக்கக் கோரிய வழக்கில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் மைலாப்பூரை சேர்ந்த ஜெபமணி மோகன்ராஜ் என்பவர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில்,

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுதலைப் புலித் தலைவர் பிரபாகரன், அவரது நெருங்கிய நண்பரும், விடுதலைப் புலி இயக்கத்தைச் சேர்ந்தவருமான கே.பி. என்று அழைக்கப்படும் கே.பத்மநாதன் என்ற குமரன் பத்மநாதன், பொட்டுஅம்மான் உட்பட பலரை சி.பி.ஐ. பல்நோக்கு புலனாய்வு பிரிவுப் பொலிஸார் தேடி வந்தனர்.

இந்த நிலையில், இலங்கையில் நடந்த போரில் பிரபாகரன் கொல்லப்பட்டார். கே.பி. என்ற கே.பத்மநாதனை 2009 ஆம் ஆண்டு மலேசியாவில் வைத்து இலங்கை இராணுவம் கைது செய்தது.

ராஜீவ்காந்தி கொலையில் பத்மநாதன்தான், நிதி உதவி வழங்கும் பொருளாளராக செயற்பட்டுள்ளார்.

இந்தக் கொலையில் நடந்த சர்வதேச தகவல் அனைத்தும் இவருக்குத் தெரியும். இவரிடம் இருந்து பெறப்பட்ட இரகசியத் தகவலை வைத்துக் கொண்டு தான் இந்தியாவை இலங்கை மிரட்டி வருகிறது.

எனவே, தற்போது இலங்கையில் உள்ள கே.பத்மநாதனை, சி.பி.ஐ. பல்நோக்கு புலனாய்வுப் பிரிவு பொலிஸார் இந்தியாவுக்கு அழைத்து ராஜீவ் காந்தி கொலையின் உண்மை நிலை குறித்து விசாரிக்க வேண்டும் என்று கடந்த 2013 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி பிரதமரின் தனிச் செயலாளர், மத்திய உள்துறை செயலாளர், சி.பி.ஐ. இயக்குனர் ஆகியோருக்கு மனு அனுப்பினேன். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனு தலைமை நீதிபதி (பொறுப்பு) சத்தீஷ்குமார் அக்னிகோத்ரி, நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் ஜெபமணி மோகன்ராஜ் வழக்கில் ஆஜராகி வாதிட்டார்.

இதையடுத்து, இந்த வழக்குத தொடர்பாக 4 வாரத்துக்குள் பதிலளிக்குமாறு இந்திய மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# அளுத்கம சம்பவத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது

## நாடாளுமன்றில் ஹக்கீம்

(கொழும்பு)

அளுத்கம சம்பவத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டதாகவும் இதன்போது இரண்டு பேர் கொல்லப்பட்டதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து பொலிஸார் வெற்றுத் தோட்டாக்களை மீட்டிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், கொல்லப்பட்டவர்கள் தொடர்பிலான பிரேதப் பரிசோதனை அறிக்கையில், மரணத்திற்கான காரணங்கள் வேறு விதமாக குறிப்பிடப்பட்டிருந்தது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த அறிக்கை பிழையாக வெளியிடப்பட்டு உள்ளதாக சட்டத்தரணிகள் குறிப்பிட்டிருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

ஒரேயொரு பிரதப் பரிசோதனை அறிக்கையில் ஒருவரின் மரணத்திற்கான காரணம் துப்பாக்கிச் சூடு காரணமாக ஏற்பட்டது என குறிப்பிடப்பட்ட போதிலும் ஏனைய பிரேதப் பரிசோதனை அறிக்கைகள் தெளிவின்றி காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 யூலை 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.